மாலை
ஆகஸ்ட் 1960
25 காசு

நடம்புரியும் பாரதச் சிலம்பொலியோ

வடிவழகி நீயென்ற வாழ்த்தொலியோ!

ஒலிதனிலே இசைவளர்த்த அழகைப் போலே உடல்தனிலே எழில் வளர்த்த பாரதப் பெண்ணே! பொலிவழகால் புகழ்வளர்த்த பெருமை கொண்டாய்; பொன்னுடலைப் போற்றினையோ, பாரதப் பெண்ணே! நேர்த்தியான மேனியழகு இல்லையேல், பூர்த்திபெற்ற அழகில்லை என்பதை உணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய ராகினி கூறுகிறார்: 'அதனால்தான், மென்மைகுலவும் லக்ஸ் சோப்பின் மீது எனக்கு நம்பிக்கை. மணங்கமழும் அதன் நுரை எனது மேனியை மிளிரச் செய்கிறது.'

சினிமா நட்சத்திரங்களின் — LUX TOILET SOAP — தூய, மென்மைகுலவும் அழகுசாதன சோப்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

LTS. 54-X29 TM

ஜூலை
29
முதல்
சென்னை
காஸினோ
பிராட்வே
மஹாலக்ஷ்மி
மற்றும்
தென்னாடெங்கும்
மதுரம்
பிக்சர்ஸ்
மீண்ட
சொர்கம்
T.A. துரைராஜன்
வின்சென்ட்
ஸ்ரீதர்
ELEGANT

கே. ஸி. பி. லிமிடெட்

38, மவுண்ட் ரோடு, சென்னை-6.

★

KRISHNA SWEETS

CHOICE. QUALITY..

★

★ நிபுணர்களது மேற்பார்வையில் உயர்ந்த ரக பழ ரஸங்களைக் கொண்டு, சுத்தமான சர்க்கரையில் தயாரான மிட்டாய்கள்

★ குழந்தைகளுக்கு ஆரோக்கியமும் வலிமையும், அளிக்கின்றன.

★ ஆலையிலிருந்து அப்படியே புதிதாக விற்பனைக்கு வருகிறது,

★

K C P

கிருஷ்ண மிட்டாய்கள்

Phone { Show Room : 2002 / Residence 61725 — Post Box 1625 — Grams "NATHELLA"



Fashionable GOLD Jewellery
Variety of Latest designed Gem - Setted Jewellery

Silver-Trophies
Cinema Shields
Water - Drums
a number of attractive articles

Please pay a visit to our Showrooms

NATHELLA SAMPATHU CHETTY & SON,

177, N. S. C. BOSE ROAD, MADRAS-1.

கட்டிட தளவாடங்கள்...

அன்று

பண்டைக்காலச்சிற்பியரின் கலைத் திறனும் ஆற்றலும் தான் என்னே! நாடு எங்கும் சுண்ணாம்பும் கல்லும் கொண்டு நிருமிக்கப்பட்டு கலையழகுடன் வானளாவி நிற்கும் கோபுரங்களே பழமைச் சிற்பியரின் திறனுக்குத் தக்க சான்றாகும்

இன்று

சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட் ஸிமெண்ட்

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது

சங்கர் பிராண்ட்

போர்ட்லண்ட் ஸிமெண்ட்

இன்றைய கட்டிட தளவாடங்களில் சிறந்தது. சர்க்கார் சோதனைச் சாலையின் நற்சாட்சிப் பெற்றது. எல்லாவித கட்டிட வேலைகளுக்கும் உகந்தது எல்லா முக்கிய நகரங்களிலும் தட்டின்றி கிடைக்கிறது



SANKAR I C BRAND

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட். மதராஸ் —1

விற்பனையாளர்களும், விநியோகஸ்தர்களும்,

ஸிமெண்ட் மார்க்கட்டிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

தந்தி : நாட்டியமாலா போன் : 71669

மாலா

தமிழ் இலக்கிய மாதப் பத்திரிகை

போஷகர்:
வைஜயந்திமாலா
நிர்வாக ஆசிரியர் :
எம். டி. ராமன்
ஆசிரியர் :
எஸ். எஸ். சர்மா
துணை ஆசிரியர் : த. ரா. ரா.

★

தனிப் பிரதி 25 காசுகள்
(அணா 4)

வருட சந்தா ரூ. 3/-

பிரதி மாதம் 10ம் தேதி மாலா எங்கும் விற்பனைக்குக்கிடைக்கும்

பர்மா, மலேயா நாடுகளுக்கு மட்டும்

தனிப் பிரதி அணா 6

அந்தந்த ஊர் ஏஜண்டுகளிடம் மாலாவை மாதந்தோறும் வாசகர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா "ஹிக்கின்பாதம்ஸ்" "சுதேசமித்திரன்" ரயில்வே புஸ்தக ஸ்டால்களில் எமது மாலா விற்பனைக்கு எப்பொழுதும் கிடைக்கும்.

★

தபால் மூலம் மாலாவை வரவழைத்துக்கொள்ள கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதவும்

விபரம் : மாலா
சதர்ன் அவின்யூ.
ஆழ்வார்பேட்டை.
தபால்-பெட்டி நெ. 1452
மதராஸ்-18.

மாலா

மாலா 10 | ஆகஸ்ட் 1960 | மலர் 5

பொருளடக்கம்

★

சுதந்திர தின சிந்தனை—தலையங்கம்

கட்டுரை

திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் —எல்லார்வி

கதைகள் :

நொண்டி —ஸ்ரீவத்ஸன்

திருவிளையாடல் —ஸ்ரீகிருஷ்ணா

சீர் —கே. வி. நடராசன்

மமதையின் சமாதி —சி. ஆர். ராஜம்மா

கிருகப்பிரவேசம் —அசுவத்தாமா

தொடர் கதை

திருவிளக்கு —விக்கிரமன்

ஜோதிடப் பகுதி :

ராசிபலன், கேள்வி பதில் —கணபதி ஜோஸ்யர்

கலை அரங்கம் — த. ரா. ரா.

மற்றும் இதர அம்சங்கள்.

குறிப்பு—மாலாவில் வரும் பெயர்கள், நிகழ்ச்சிகள் அனைத்தும் கற்பனையே.

போஷகர் ; வைஜயந்திமாலா

மாலா 10 | ஆகஸ்ட் 1960 | மலர் 5

சுதந்திர தின சிந்தனை

சுதந்திரம் அடைந்து பதின்மூன்று ஆண்டுகள் நிறைந்து விட்டன. பாரத தேசம் இப்பதின்மூன்று வருடங்களின் முன்னேற்றப் பாதையில் வெகுவாகச் சென்றுள்ளது என்பதை மறுதளிக்க இயலாது. கட்சிகள் சார்பு கொண்டுள்ளோர் பிரசார முறையிலே வேண்டுமானால் மாறாகப் பேசக்கூடும். இவ்வருடங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்க வேலைகளின் முழுப்பயனும் இனித்தான் பெற முடியும். நிற்க அரசாங்க நிர்வாகத்திலே முறைகள், செயல் முறைகளிலே தவறுகள் சில ஏற்பட்டிருக்கலாம். அவைகளை நன்கு ஆய்ந்து பரிகாரம் காண வேண்டியது ஞாயம். ஆனால் அதற்காக அரசாங்கம் பொறுப்பேற்று நடத்த லாயக்கற்றது என்று கொள்வதோ, தீவிரமாய் பிரசாரம் செய்வதோ உகந்ததல்ல. மக்கள் விழிப்புடன் யாவற்றையும் கவனித்துத் தக்க முறையிலே ஆதரவளிக்க வேண்டும். தேச ஒற்றுமை சீர் குலைவதோ நிர்வாகம் ஸ்தம்பித்து நிற்பதோ ஏற்படக் கூடாது என்ற லட்சியத்தைக் கொண்டே யாவரும் நடந்து கொண்டால்தான் நாடு நன்மை பெற இயலும். இதை சுதத்திர தின விழாவில் நன்கு சிந்தித்து செயலாற்ற முற்பட வேண்டும்.

"என்ன காரணம்?"

(இளங்கார் வண்ணன்)

கூண்டுக் கிளியென வாழ்ந்திருந்தோம்—அன்று
கூவிப் பிழைத்துயிர் தாங்கி வந்தோம்
மீண்டும் சுதந்திரக் காற்றினிலே இன்று
மெல்லச் சிறகடித் தேறுகிறோம்
கூண்டு நிலை விட்டு வந்தவுடன் மனம்
கூடும் நிலை யெண்ணித் துள்ளியது.
தீண்டு மிள வெயில் இன்பமுடன் சுவை
தீங்கனியும் நறுங் கொட்டைகளும்
மாமரச் சோலையும் வாசமுடன் எழில்
வாரி இறைத்திடு காமலரும்
தேமதுரக் குரல் காட்டுவதும் உள்ளத்
திரைவிரி காட்சியில் தோற்றியது.
அற்பனுக்கும் வரும் வாழ்வெனவே நமை
அண்டிடு வாழ்வெண்ணி ஆர்ப்பரித்தோம்
கற்பனைக்கும் நிஜ வாழ்வினுக்கும் இடை
காதங்கள் நீள்வதன் காரணம் என்?
எண்ணிய இன்பங்கள் நண்ணவில்லை விசை
ஏறிப் பறந்திடத் திண்மையில்லை
கண்ணிய மான நல் வாழ்விதுவாம்! சிச்சீ!
கயவர்கள் கட்டிய கோபுரமே!
ஆண்டு பலப்பல கூண்டினிலே அற்ப
அடிமை யெனக் கிடந்துழன்ற பின்னும்
தீண்டிட மானிடன் திக்குணமும் உயர்
கிள்ளைத் தனிக்குணம் போன பின்னும்
வெடித்த சுதந்திர பொறி விசிறி அது
வீரக் கனலெனப் படர்ந்த பின்னும்
இடிக்குரல் காட்டி யெம் பிறப்புரிமை
எங்கள் சுதந்திரம் என்ற பின்னும்
இன்னுயிர்ச் சோதரருட் பலரை
தியாக நல் வேள்வியில் இட்ட பின்னும்
முன்னுயர் சுதந்திரம் பெற்ற கணம்—மனம்
மோனப் புளகம துற்ற பின்னும்
திட்டங்கள் தீட்டி நம் தேயமதில் வளம்
தேங்கும் முயற்சிகள் ஏற்ற பின்னும்
எட்டுத் திசையுள்ள தேயங்களில் புகழ்
ஈட்டிச் சிறந்திடக் கற்ற பின்னும்
ஆண்டவனும் நம்மை எதிர்த்திடினும் நலம்
ஆற்றப் பயமிலை என்ற பின்னும்
மீண்டும் அடைந்திடக் கூண்டதனிற் சில
வேளை நினைந்திடக் காரணம் என்?

Independence Day Offer

Benaras Pure Silk Washable Sarees :	6 Yds.	Rs. 25/-
Lucknow Chicken Work Voile Sarees.	6 Yds.	Rs. 17/-
Bombay Printed Voile Sarees :	6 Yds.	Rs. 9-50
Rajasthan Striped Chiffon Sarees :	6 Yds.	Rs. 12-50
Venkatagiri Handloom Sarees :		Rs. 7-50
Bengal Printed Silk Washable Sarees :	6 Yds.	Rs. 12-50
Aurangabad Silk Sarees Washable	6 Yds.	Rs. 15/-
Mirror Work Crepe Pavadais		Rs 12-50
Mirror Work Cholies		Rs 6/-
Gold Printed Chiffon Dhavanies :	3 Yds.	Rs. 5/-

At SAREE CENTRE

142, Mount Road, Thousand Lights, Madras-6.

Tele : 85163

NEW ARRIVALS

* BENARAS Tissue Brocade, Silk Sarees & Cholies to Match
* MYSORE Crepe, Georgettee, Chiffon, Silk Sarees.
* SURAT Tissue and Silk Sarees.
* CONJEEVARAM Silk and Tissue Sarees.
* Switzerland EMBROIDERED NYLON, GEORGETTE SAREES.

We undertake orders for Embroidery, Tailoring & Dyeing.

மகாவித்துவான்

திருக்கோடிகாவல் கிருஷ்ணையர்

எல்லார்வி

குடும்பம்

கோனேரி ராஜபுரத்தில் கௌரவமான குடும்பம் ஒன்றில் பிறந்து வளர்ந்த அங்கவளம் என்ற பெண்ணைப் பெரியவர்கள் கிருஷ்ணையருக்கு நிச்சயம் செய்தார்கள். அந்த நாளில் சில கட்டுப்பாடுகள் உண்டு. பொதுவாகச் சம்பந்தம் பண்பதைக் கூடுமான வரையில் உறவுக்குள்ளேயேதான் செய்து கொள்வார்கள். அப்படிச் செய்து கொள்வதில் பலவிதமான நன்மைகள் உண்டு. குலம், கோத்திரம் குடும்பத்தின் உள் வயணங்கள் முதலியவற்றை விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அடுத்தபடியாக, லௌகிக விஷயங்களில்—அதாவது வரதட்சிணை, சீர், செய்நேர்த்திகள், முதலிய அம்சங்களிலோ, உபசரணை முதலியவற்றிலோ, குறைபாடுகள் இருந்தால் பொருத்துக் கொள்வார்கள். முன் உறவு காரணமாக, வாழவந்த நாட்டுப் பெண்களை அன்பாக நடத்துவார்கள். இப்படி இன்னும் எத்தனையோ நன்மைகள் உண்டு.

இப்படி உறவை வலுப்படுத்தும் சம்பந்தமுறை குறிப்பாக ஒரு சில இனத்தாரிடையே மிகக் கண்டிப்பாக அனுஷ்டிக்கப் பெறுவதுண்டு. தில்லைவாழ் அந்தணர்கள், மாத்திமப் பிராமணர்கள் முதலிய சிலரை உதாரணமாகக் கூறலாம். 'பிரிவினை கூடாது' என்பது இந்த நாளைய முழக்கம். ஆனால் அந்த நாளில் அமலில் இருந்து வந்த பிரிவினைகளுக்குக் கணக்கே இல்லை. அந்தக் கட்டுத் திட்டங்களினால் தாங்கள் அடைந்தது நன்மையே என்பது அந்த நாளைய பெரியோர்களின் அபிப்பிராயம்.

கிருஷ்ணையருக்கு இளம்பிராயத்திலேயே திருமணம் நிகழ்ந்துவிட்டதால் உரிய காலத்திலேயே மகப்பேறும் கிட்டிவிட்டது. அபர சூரியர்களைப்போல் இரண்டு புதல்வர்கள். மூத்தவர் பெயர் ராமையா, இளையவர் சீனிவாசன்.

கிருஷ்ணையர் குடும்ப வளமும் தொழில் வளமும் நிரம்பப் பெற்றுப் புகழ் வானில் தனிச் சுடராகப் பிரகாசிக்கத் தொடங்கினார். அது மட்டு மன்று; திருக்கோடிகாவல் கிராமத்தின் பட்டாமணிய உத்தியோகத்தைக்கண்ணும் கருத்துமாய் நிர்வகித்து விசேஷமான செல்வாக்கையும் தேடிக் கொள்ளலானார்.

மாணவர்கள்

வாசம் மிகுந்த மலரை நாடி வண்டுகள் சுழன்று வருவதைப் போல், வெல்லம், சர்க்கரை, தேன் முதலிய இனிப்புப் பண்டங்கள் இருக்கும் இடத்தைத் தேடி ஈக்களும், எறும்புகளும் வந்து கூடுவது போலக் கிருஷ்ணையரின் புகழைக் கண்ட பெற்றோர்கள் பலர் தங்கள் மக்களை அவரிடம் குருகுல வாசத்தில் ஈடு படுத்த முன்வந்தார்கள். அவர் தேர்ந்தெடுத்து பயிற்சி அளித்த மாணவர்களில் குறிப்பிடக் கூடியவர்கள், அவருடைய மூத்த குமாரர் ராமையா, திருக்கோடிகாவல் ராமசாமி ஐயர், அவருடைய சகோதரி குமாரர் செம்மங்குடி நாராயணசாமி ஐயர், திருவாலங்காடு நீலகண்ட வாஜபேயர், எல். வேங்கடராமையர் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். கிருஷ்ணையர் அனைவரையும் ஒரு நோக்கில்தான் பார்த்தார். சமநிலையில் தான் பயிற்சி அளித்தார். இவர்களில் யாருமே சோடை

போகவில்லையென்பதே அதற்கு அத்தாட்சி.

நிறைகுடம்

கிருஷ்ணையரிடம் யாரும் எப்போதும் காணக்கூடியது எளிய தோற்றம்தான். ஆடம்பரத்திற்கும் அவருக்கும் வெகு தூரம். ஸ்வர ஸ்தானங்கள் சரியாகப் பிடிபட்டு நிலைப்பதற்குள்ளாகவே தம்மைப் பெரிதாக எண்ணிக்கொண்டு சவ்வாது பொட்டும், சரிகை அங்கவஸ்திரமுமாகப் பவனிவந்து, பெரியோர்களின் கலை ஆற்றலில் குறை கூறித் திரியும் சில இளைஞர்களின் போக்கை எண்ணிப்பார்க்கிற போது, கிருஷ்ணையரின் தகுதிக்கு அவர் எவ்வளவு ஆடம்பரங்களை மேற்கோள்ளலாம்? ஆனால் அவர் என்றுமே நிறை குடமாகத்தான் இருந்தார். என்பதை எண்ணுகிற போது நமக்கெல்லாம் எல்லையற்ற பெருமிதமே ஏற்படுகிறது.

சில இயல்புகள்

அவர் அன்புக்கு அடிமையாகும் இயல்பினர். ஆனால் அட்டகாசத் தன்மை உடையவரைத் திட்டமிட்டுச் செயலாற்றி அவர்கள் கொட்டத்தை அடக்கி ஆள்வதில் மிகவும் தீரர். கலையைப்போலவே பொருளைத் தேடுவதிலும், அதைக் காப்பதிலும் மிகுந்த கருத்துடையவர் அவர்.

உரிமையும் சலுகையும்

தமிழகத்திலே மிகப் பெரிய மனிதர்கள் என்று சொல்லக்கூடிய அனைவரின் நட்பும் அவருக்குக் கிடைத்துக்கொண்டே வந்தது. மற்றவர்கள் அஞ்சி மரியாதையாக ஒதுங்கும் பிரமுகர்களிடமெல்லாம் அவருக்குத் தனிச் சலுகை உண்டு: விசேஷ உரிமை உண்டு. அவர்களிடமெல்லாம் அவர் செல்வக் குழந்தையைப்போல மிகவும் ஒட்டிப் பழகுவார். மிகப் பெரிய காரியங்களை எல்லாம் அவர்கள் மூலம் வெகு அநாயாசமாகச் சாதித்துக் கொண்டு விடுவார். சங்ககாலத்துப் புலவர்களுக்கு மன்னர்களிடமும் மற்றும் உள்ள வள்ளல்களிடமும் எத்தகைய உரிமையும் செல்வாக்கும் இருந்தனவோ அவ்வளவு சிறப்பையும் கிருஷ்ணையர் பிரமுகர்களிடம் பெற்றிருந்தார்.

கலைமகளின் திருமாளிகை

அந்த நாளில் திருவாவடுதுறை ஆதீனத்திலே பண்டார சந்நிதிகளாகப் பட்டத்தில் வீற்றிருந்தவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள். அவர் சிறந்த மேதை இசைக் கலைஞர்களையும் தமிழ்ப் புலவர்களையும் நன்கு ஆதரித்த பெருந்தகை. சைவ மதம் செழிக்கப் பலவகையாலும் பாடுபட்டவர். தேவாலயங்களின் வழிபாடுகள் ஒழுங்காக நிகழும்படி கவனித்துக் கொள்வதைத் தம்முடைய வாழ்நாள் தொண்டாக மேற்கொண்டவர். தாம் ஒரு பெரிய மடாதிபதி என்ற செருக்குச்சிறிதும் இல்லாதவர். நேர்மையிலே பிழை கண்டால் நெருப்பாய்ச் சுடுகிற இயல்பினர். ஏழை எளியவர்களிடம் கருணை மிக உடைவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் அவர் பதினொருவது பட்டத்தில் தலைவராக அமர்ந்திருந்தவர். அவருடைய காலத்தில் அவர் புரிந்த நற செயல்கள் பல. அவற்றுள் அந்த மடத்தைக் கலைமகளின் திருமாளிகையாக ஆக்கியது குறிப்பிடத்தக்க ஒன்று. தமிழ்ப் புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களை மகாவித்துவானுக்கி அவனுடைய சிறப்பினை உலகறியச் செய்தவர் தேசிகர் அவர்களே. அதேமாதிரி இசைப் புலவர் திருவையாறு வைத்தியநாத அய்யர் அவர்களை மகா வைத்தியநாதய்யராக்கிக் கலைக்குச் சிறப்பளித்தவரும் அவரே.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த செம்மல் வாழ்ந்த திருவாவடுதுரை மடத்திலே அடிக்கடி ஏதாவது வைபவங்கள் நடைபெற்ற வண்ணம் இருக்கும். அச்சமயங்களில் வித்

துவான்கள் பலரும் அங்கே கூடுவர். விமரிசையாக வினிகை நடைபெறும். இசைப் புலவர்களும் ஏனைய கலைஞர்களும் விசேஷ வெகுமானங்களைப் பெற்று மகிழ்வர்.

ஆதீன வித்துவான்

சிறப்பு மிகுந்த இந்த மடத்திலே திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் ஆதீன வித்துவானாகத் திகழ்ந்தார். அங்கே நடைபெறுகிற கச்சேரிகளுக்கெல்லாம் அவரே பக்கவாத்தியமாக வயலின் இசைப்பார். தேசிகர் அவர்களுக்குக் கிருஷ்ணையரிடம் நிறைந்த மரியாதை உண்டு. புழக்கடை பச்சிலை என்ற முறையில் 'பக்கத்து ஊர்க்காரந்தானே' என்று கிருஷ்ணையரைப் புறக்கணியாத செயலால் தம்முடைய பெருமை, ஞானம், விதரணை முதலியவற்றை நிலைநாட்டிக் கொண்டார் தேசிகர்.

வைபவ காலங்களிலே மட்டுந்தான் திருவாவடுதுறை மடத்திலே இசை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்பதில்லை. தேசிகர் உள்ளத்திலே கலை உணர்ச்சி பொங்குகிற போதும், வெளி இடங்களிலிருந்து வித்துவான்கள் யாராவது அந்தப் பக்கம் வருகிறபோதும் மடத்திலே இசை நிகழ்ச்சிக்குரிய ப்ரத்தியேக



M. A. V. பிக்சர்ஸாரின் "பணம் பந்தியிலே" என்ற படத்தில் ஒரு காட்சி

ஏற்பாடுகள் நடைபெறுவதுண்டு. அந்தச் சந்தர்ப்பங்களிலும் கிருஷ்ணையர் அரங்கை அலங்கரித்து இசை மாரி பொழிவார்.

கிருஷ்ணையரின் வித்துவத்திலும் அவருடைய அபிப்பிராயத்திலும் தேசிகருக்கு அளவற்ற மதிப்பு. மடத்தை அடைந்து தங்கள் புலமையை வெளிப்படுத்திப் புகழும் பொருளும் பெற வேண்டும் என்று ஆவலோடு வருகிற இசைக் கலைஞர்கள் பலர். அவர்களை மரியாதையாக வரவேற்று அன்பாகப் பேசி, கூட இருந்து கச்சேரிகளை நடத்திவைத்து, அவர்களுடைய கலைத்திறன் பற்றித் தேசிகருக்கு எடுத்துக் கூறி ஏராளமான சம்மானங்களை வாங்கி அளிப்பார் கிருஷ்ணையர்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் மட்டுமன்றி மைசூர், திருவனந்தபுரம், ராமநாதபுரம், பட்டுக்கோட்டை, பரோடா முதலிய மற்றும் பல சமஸ்தானங்களிலும் கிருஷ்ணையர் மிக்க மரியாதையோடு பாராட்டப் பெற்றார்.

இதிகாசம்

கிருஷ்ணையரின் கலை வாழ்க்கையிலும் தனி வாழ்க்கையிலும் எத்தனை எத்தனையோ சம்பவங்கள். அவை அவருடைய கலை ஆற்றல், மனத்திண்மை, சதுரப்பாடு, சமயோசிதச் செயல்கள் முதலிய பல அம்சங்களையும் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டி விளக்குவன. பருங்காலத்தவர்களுக்கு ஓர் இதிகாசம் போன்றது அவருடைய நீண்ட வரலாறு.

மீண்ட உரிமை

ஒரு சமயம் கிருஷ்ணையருடைய உரிமை பிறரால் பறிமுதல் செய்யப் பெற்றது. அதைத் திரும்பப் பெறுகிறவரையில் அவருக்கு நல்ல இருப்பே கொள்ளவில்லை.

ஒரு நாள் அவர் தம் வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்திருந்தார்; ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாகப் பல பெருமூச்சுக்களை எறிந்தபடி இருந்தார். அவர் கையிலே ஓர் அறிவிப்பு ஓலை இருந்தது. அவருடைய அங்கலாய்ப்புக்கு அந்த ஓலைதான் காரணம். "சந்திர சூரியர் திசை மாறினாலும் நான் என் உரிமையை இழக்க மாட்டேன். என் பதவி என்னிடமிருந்து மாறக்கூடாது. நடக்கிறதா இல்லையா என்று பார்த்துவிடுகிறேன்" என்று தமக்குத்தாமே கூறிக்கொண்டார்.

அவருடைய கிராமப் பட்டாமணியப் பதவி பரம்பரையாக அவர் குடும்பத்திலே இருந்து வருவது. யாரோ செய்த அக்கப்போரின் விளைவாக அவருடைய பதவி பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது. அவர் மிகவும் வருத்தமுற்றார். உத்தியோகத்திற்காக அரசாங்கத்திலிருந்து கிடைத்துவந்த ஊதியம் போய்விட்டதே என்பதைவிட, அந்தப் பதவியினால் உள்ள செல்வாக்குப் போய்விடுமே என்ற வருத்தமே அவருக்கு மேலோங்கி நின்றது. சென்னையிலே பெரிய பெரிய பதவி வகிப்பவர்கள் பலர் அவருக்கு வேண்டியவர்கள். அவர்களிடமெல்லாம் சென்று இழந்த உரிமையை மீளப் பெறும் வழியைத்தேட எண்ணினார். அதற்காக ரெயில் செலவு ஆகுமே என்றும் தயங்கினார்.

'ரிவின்யூ' போர்டு அதிகாரி ஒருவர் புதிதாகப் பதவி ஏற்றிருக்கிறார். அவருக்கு விருந்து அளிக்கப் போகிறோம். அதில் இசைக் கச்சேரியும் நிகழ வேண்டும். அவர் ஆங்கிலேயர். கர்நாடக சங்கீதத்தை ரசிக்கக்கூடிய தன்மையை அவரிடம் எதிர்பார்க்கமுடியாது. ஆனால் வாத்திய சங்கீதத்தை அவர் ஓரளவு ரசிக்கக் கூடும். அதிலும் வயலின் அவர்கள் நாட்டு வாத்தியம். தாங்களே அந்த வாத்தியத்தில் இணையற்ற மேதை. ஆகவே இந்த விருந்தில் தங்கள் 'ஸோலோ' கச்சேரிதான் பொருத்தம் என்று முடிவு செய்து இதை எழுதுகிறோம். செலவுக்குவேண்டிய பணமும் இத்துடன் வருகிறது. தவறாமல் வந்து சேரவும் என்று

pride of place
for
durability



There is nothing to beat Mettur Mulls and Long Cloth for sheer durability. Naturally, those who want white cloth which wears longest, prefer Mettur Mulls and Long Cloth. Look for the METTUR sign, mark your dealer and buy with confidence at fixed and economical prices.

METTUR INDUSTRIES LTD. METTUR MULL

Mettur Mulls & Long Cloth

Manufactured by:
METTUR INDUSTRIES LTD.
Mettur Dam R.S.—Salem District.

Managing Agents:
W. A. BEARDSELL & CO. (PRIVATE) LTD.,
MADRAS-1.

EP

சென்னையிலிருந்து ஒரு பிரமுகர் கிருஷ்ணையருக்கு எழுதினார்.

பருத்திச்செடி ஆடையாகவே காய்த்து விட்டது. பெருமகிழ்ச்சியுடன் கிருஷ்ணையர் சென்னைக்குச் சென்றார். பிரமுகர்கள் பலரையும் சந்தித்துத் தம் குறையை முறையிட்டுக் கொண்டார்.

"ஒரு குற்றமும் செய்யாத எனக்கு அடுத்தடுத்து நோட்டீசுகள் அனுப்பி, நான் என்ன சமாதானம் சொல்லியும் கேளாமல் என்னைப் பதவியிலிருந்து விலக்குவது என்ன நியாயத்திலே சேர்ந்தது?" என்று ஆத்திரத்துடன் பேசினார் அவர்.

"போனால் போகட்டுமே! கல்லும் கரைந்துருகும் கான மழை பொழிகிற தங்களுக்கு இந்தப் பட்டாமணிய வேலை ஒரு பொருட்டா ஸ்வாமி?" என்றார் ஒரு பிரமுகர்.

"சங்கீதத்தின் மூலம் கோடி கோடியாய்ப் பொருளை அடையலாம். ஆனால் பரம்பரையாக வந்த பதவியின் கௌரவமே தனி. அது இல்லை என்றால் இனி நான் என் வாத்தியத்தைத் தொடவே மாட்டேன்". என்றார் கிருஷ்ணையர்.

பிரமுகர் மெல்லச் சிரித்தார். "உத்தியோக சம்பந்தமாக நீங்கள் ஒரு பிழையும் செய்யவில்லை என்றால் அது உங்களையே வந்து அடையும்" என்றார்.

"நான் ஒரு பிழையும் செய்யவில்லை" என்றார் கிருஷ்ணையர். "என்னிடம் இசைக் கலை இருப்பதற்கும், அதனால் என்பால் அளவற்ற அன்பு கொண்டுள்ள நீங்கள் பெரிய பெரிய பதவிகளில் இருப்பதற்கும் அடையாளம் என்ன?" என்று மேலும் வாதாடினார். பிரமுகர்கள் அவருக்கு ஆறுதல் சொன்னார்கள்.

விருந்து விழாவில் நிகழ்ந்த ஸோலோ வயலின் கச்சேரி ஆங்கில அதிகாரியை ஆட்கொண்டு விட்டது.

"இது எங்கள் நாட்டு வாத்தியம். எங்கள் நாட்டினரே அதிக நேரம் இதை வாசிக்க மாட்டார்கள். அப்படி வாசித்தாலும் புரியக் கூடிய எங்கள் நாட்டு இசையையே எங்களால் நீண்ட நேரம் பொறுமையாக இருந்து கேட்க முடிவதில்லை. அப்படி இருக்க, அயல்நாட்டு வாத்தியமான இதைத் தமிழர் ஒருவர் அயர்ச்சி தட்டாமல் இவ்வளவு நேரம் வாசித்தது ஆச்சரியம்:" என்று புகழ்ந்தார்.

அந்த அதிகாரி அத்துடன் நில்லாமல் தம் அந்தரங்கக் காரியதரிசியிடம் பின் வருமாறு சொன்னார்:

"விருந்து வைத்தவர்கள் அந்த வித்துவானுக்குத் தக்க சம்மானம் செய்வார்கள். ஆயினும் அவர் புலமையைக் கண்டு நாம் மகிழ்ச்சி பெற்றதற்காக நம் சார்பிலும் அவருக்கு ஏதாவது அளியுங்கள்" என்றார்.

என்ன கொடுப்பது என்று காரியதரிசி சிறிது மயங்கினார்.

"அவரையே கேளுங்கள்; அவர் விரும்புவதைக் கொடுங்கள்" என்றார் அதிகாரி.

காரியதரிசி இதைப் பிரமுகர்களிடம் தெரிவித்தார். பிரமுகர்கள் இதுதான் தருணம் என்று கிருஷ்ணையரின் கோரிக்கையை வெளியிட்டார்கள். காரியதரிசி அதை அதிகாரியிடம் கூறினார். அதிகாரி அந்தச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார் தந்தி மூலம் உத்தரவு போட்டு விடுங்கள்" என்றார்.

கிருஷ்ணையர் வெற்றிக் குதூகலத்துடன் ஊர் திரும்பினார். மறுநாள் ஜில்லா கலெக்டரிடமிருந்து ஓர் அதிகாரி கிருஷ்ணையரைத் தேடி அவர் இருக்கும் இடத்திற்கு வந்தார். அவரை வணங்கி மறு உத்தரவைச் சமர்பித்தார். "நேற்றெல்லாம் தந்தி மேல் தந்தி! எங்களிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா ஆண்டவனே? மேலிடத்திற்குப் போய் விட்டீர்களே!" என்றார் அதிகாரி.

"இங்கே தான் நியாயம் மருந்தாக இருக்கிறதே என்று அங்கே போனேன்" என்று கூறி முறுவல் பூத்தார் கிருஷ்ணையர்.

★

இந்த நிகழ்ச்சி விவரத்தை முதலில் எனக்கு அறிவித்தவர் சங்கீத வித்துவான், உமையாள்புரம் கல்யாண ராமையர் அவர்கள். வேணுகான விற்பன்னர் கும்பகோணம் நாகராஜராவ் அவர்கள் இசைத் துறையில் மட்டுமின்றிப் பெரிய பெரிய இசை மேதைககளின் வாழ்க்கை வரலாறுகளை நன்கு அறிந்தவர்.

ஹாஸ்ய உணர்ச்சியில் மிகவும் தேர்ந்தவர். தாம் அறிந்த செய்திகளை மற்றவர்களுக்கும் அறிவித்து அவர்களையும் மகிழ்விப்பதில் ஆர்வம் உடையவர்.

உமையாள்புரம் கல்யாணராமையர் கும்பகோணம் நாகராஜராவ் அவர்களோடு நெருக்கமான வழக்கம் உடையவர். அவரிடமிருந்து அநேக விஷயங்களைக்கேட்டு அறிந்தவர்.

கிருஷ்ணையர் தம்முடைய உரிமை பறிபோனதும் தாமே சென்னை சென்று நீதிபதி மணி ஐயர், கஸ்தூரி ரங்க ஐயங்கார், முதலிய பல பிரமுகர்களை நேரில் கண்டு முயன்று அவர்களுடைய செல்வாக்கின்மூலம், தாம் இழந்த உத்தியோக உரிமையை மீளவும் பெற்ருர் என்பது கல்யாணராமையர் அறிவித்த விவரம். பின்னர் சென்னை மைலாப்பூரில் வாழ்ந்து வரும் திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் அவர்களின் பெயர் ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது அவர் மேற்குறித்த நிகழ்ச்சி பற்றிய விவரங்களை மேற்கூறியவாறு தெரிவித்தார்.

நிகழ்ச்சி ஒன்றேதான் என்ருலும் நிகழ்ந்த முறையில் சிறு மாறுபாடு. காலம் கடந்த செய்திகள் கர்ண பரம்பரையிலே வருகிறபோது இப்படித்தான் சில மாறுபாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. மூலச்செய்தி—அதாவது நிகழ்ச்சி — ஒன்ருகவே இருப்பினும், நிகழ்ச்சி முறை மாறுபட்டுப் பரவிவிடுகிறது. இன்னும் சிலருடைய வரலாறுகளிலே மூல நிகழ்ச்சியே கூட மாறுபாடு அடைந்து விடுகிறது. ஒருவருடைய வாழ்க்கையிலே நிகழ்ந்ததை வேறு ஒருவருடையவாழ்க்கையிலே நிகழ்ந்ததாக — உறுதியாக — கூறி விடுவோரும் உண்டு. இந்தக் குறைபாடு செய்தி சொல்பவருடையது அன்று. வேகமாக ஓடும் கால வெள்ளத்தின் இடையே செய்திகள் அப்படி மாறுபட்டும், மறைந்தும், திரிந்தும், பல்வேறு விதமான சிதைவுகளுக்கு உள்ளாகி விடுகின்றன.

சரித்திரங்களை எழுதி வைக்கும் பழக்கம் நம் நாட்டில் இல்லாததே இத்தகைய குறைபாடுகளுக்குக் காரணம். இனி அதை எண்ணி வருந்திக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. கிடைக்கிற செய்திகளைக் கொண்டு இனியேனும் மேதைகளின் வரலாறுகளை உருவாக்கி வருங்காலத்தவர்களுக்கு அளிப்பது நம் கடமை ஆகும். அதற்கு ஆண்டவன் திருவருள் வேண்டும்.

(தொடரும்)

"மாலா"

கலை இலக்கிய மாத இதழ்.

தனிப்பிரதி அணு 0—4—0

வருட சந்தா ரூ 3—0—0

மானேஜர் 'மாலா'

சென்னை-18.

சுதந்திர தின வாழ்த்துக்கள்

இன்றே விஜயம் செய்யுங்கள்

மதுரையில்
1901-ல் ஸ்தாபிக்கப்பட்டது
மூன்று தலைமுறையாக
நடைபெற்றுவரும்.

ஒரிஜினல்
நாகப்பட்டணம்
நெய் மிட்டாய் கடை

இது ஒன்றுதான்
20, மேலச் சித்திரை வீதி
(மேல கோபுரம் சமீபம்)

Prop: வி. வெங்கட்ராமய்யர் சன்.
வி. அனந்தநாராயணன் மதுரை.

Phone 3725
or Call at
Telegs: Fullmoon



Chhotabhai's

191. CHINA BAZAAR ROAD., MADRAS.

★★★★★★★★★★★★★★★★★★★

நொண்டி

★★★★★ ஸ்ரீவத்ஸன் ★★★★★

"என்ன எல்லாம் ரெடிதானு" காரிலிருந்து இறங்கியபடியே கேட்டாள் பிரபல சினிமா நட்சத்திரம் உமாமகேஸ்வரி.

"எல்லோரும் தயாராகி விட்டார்கள். ஸெட் எல்லாம் போட்டாகி விட்டது. உங்களுக்காகத்தான் காத்திருக்கிறோம்" என்ருர் உதவி டைரக்டர்.

"ஐயாம் ஸாரி" சினிமா நட்சத்திரத்தின் வாய் வார்த்தைகளை உதிர்த்தது.

"ஏன் தாமதம் செய்து விட்டீர்கள். உங்களுக்காககாத்திருக்கிறோம் வெகு நேரமாய். உடல் நிலை சரியில்லையா?" என்று கேட்டார் பட முதலாளியும் டைரெக்டருமான மிஸ்டர் தம்பி.

ஒரு புன்முறுவலை பதிலுக்கு உதிர்த்தாள் அவள்.

அதன் பிறகு ஸ்டுடியோவில் ஒரே பரபரப்புதான். காமிராமென்கள், ஒலிப்பதிவாளர்கள் எல்லோரும் மூலைக்கு ஒருவராக ஓடினார்கள். ஸ்டுடியோ சிப்பந்திகள் தரையில் காலபாவாமல், வாயில் ஈ புகுந்தது தெரியாமல் ஓடினார்கள்.

ஸ்டுடியோவின் நடுமத்தியில் ஒரு சிறிய தாமரைக் குளம்.

அன்று முக்கிய காட்சி படமாக்கப் பட இருந்தது. முக்கிய காட்சியின் சாராம்சம் இதுதான்.

கதாநாயகி தாமரைக் குளம் அருகில் உட்கார்ந்து தனிமையை அனுவிப்பாள். அப்போது தாமரைக் குளத்தில் பொத் என்று சப்தம் கேட்கும். கதாநாயகி திரும்பிப் பார்ப்பாள். ஒரு நொண்டி தண்ணீர் குடிக்க இறங்க முயன்று விழுந்து விடுவான். கதாநாயகி ஓடிப்போய் அவனைத் தூக்குவாள் அவனைத் தூக்கி கரையில் போட்டு விட்டு முகத்தைப் பார்ப்பாள். உடனே கூச்சலிடவேண்டும் ஏனெனில் அவள் தூக்கிய நொண்டிதான் அவளைத் தொட்டு தாலிகட்டிவிட்டு இருபது வருடங்களாகக் காணமல் போய் இருந்த அவள் கணவன்.

உமாமகேஸ்வரி வந்து தாமரைக் குளத்தருகில் உட்கார்ந்து விட்டாள்.

கொண்டி ஒருவனைத் தேடிப் பிடித்து டைரெக்டர் கொண்டு வந்திருந்தார். அவன் ஒரு நடுத்தர வயது மனிதன். நிஜமாகவே நொண்டி. அவர் வீட்டுக்கு எதிரே உள்ள சத்திரத்தில்பார்த்தார் முதல் நாள். உடனே ஸ்டுடியோவுக்குக் கொண்டு வந்து விட்டார். அன்றைய படப் பிடிப்பு முடிந்ததும் அவனுக்குப் பத்து ரூபாய் கொடுப்பதாய் சொன்னார். அவனுக்குக் கசக்கிறதா?

அவனுக்கு மேக்கப் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. சுதாவாகவே அவன் நொண்டி. படம் வெற்றிக்கு அப்புறம் கேட்கவும் வேண்டுமோ!

அவனை தாமரைக் குளத்தருகில் விட்டு தண்ணீர் குடிக்க குனியும் படியும் தவறி குளத்தில் விழும்படியும் ஏற்பாடு செய்தார் டைரக்டர்.

காமிராக்கள் சுழன்றன.

முதலில் தாமரைக் குளத்தருகில் உட்கார்ந்து கொண்டிருந்த கதாநாயகியை ''குளோஸப்'' பில் பிடித்தார்கள். பிறகு நொண்டியை குனியும் போதும் அவன் தவறி விழுவதையும் பிடித்தார்கள்.

'தொப்' என்ற சப்தம்,

கதாநாயகி ஓடுகிறாள்.

நொண்டியைத்தூக்கிக் கரையில் போடுகிறாள் அவன் முகத்தைக் குனிந்து பார்க்கிறாள்.

அவ்வளவுதான்.

''வீல்'' என்று கத்திவிடுகிறாள்.

மூர்ச்சை போட்டு கிழே விழுகிறாள்.

★

''எக்ஸலண்ட்'' ''வெரி நாச்சுரல்''

''தத்ரூபம்''

''ஸ்ப்ளெண்டிட்''

''உமாதேவி கங்கிராசுலேஷன்ஸ்''

''ரொம்ப இயற்கையாய் அமைந்து விட்டது''

''பாக்ஸ் ஆபீஸ் ஹிட், நோ டௌட்''

படப் பிடிப்புக்கு வந்திருந்தவர்கள் அபிப்பிராயங்களை வீசினார்கள். டைரக்டர் முகத்தில் அலாதி திருப்தி.

''தென் ஆல் ரைட். நீங்க எழுந்து விடுங்கள். உமா மகேஸ்வரி'' டைரக்டர் சொன்னார்.

ஆனால் அவள் எழுந்திருக்கவில்லை.

ஏன் அவள் எழுந்திருக்கவில்லை.

★

எல்லோரும் அவளிடம் ஓடினார்கள்.

நிஜமாகவே மூர்ச்சை போட்டிருந்தது. நடிப்பு அல்ல.

ஓடினார்கள் மூலைக்கொருவராக டாக்டர் வந்தார்.

''ஏதோ எதிர்பாராத அதிர்ச்சி'' என்று சொல்லி அவளுக்கு ஓய்வு கொடுங்கள்'' என்றார்.

டைரெக்டர் தன் காரில் அவளை வைத்து அவள் பங்களாவில் விட்டார்.

நொண்டியாக நடித்த பிச்சைக்காரனை ஒருவரும் அப்புறம் ஏன் என்று கேட்பாரில்லை.

''ஏண்டி மல்லிகா, நான் எங்கேடி இருக்கேன்''

''காலையிலே ஸ்டுடியோவிலே மயங்கி விழுந்துட்டீங்க, இப்பதான் மூர்ச்செ தெளிஞ்சிது. ஏம்மா காலையிலே நாஷ்தா பண்ணிட்டுத் தானே போனீங்க! ஏன் மயக்கம் வந்தது? ஸ்டுடியோவிலே நீங்க மயக்கம் போட்டு விழுந்தது நடிப்பென்று இருந்தேன். அப்புறம்தான் நிஜம்னு தெரிஞ்சுது''

''என்னை சற்று தனியா விட்டுடடீ. நீ போய் யார் என்னை பார்க்க வந்தாலும் உள்ளே அனுப்பாதே''

''சரியம்மா''

★

''நிச்சயமா அவர்தான். கதையிலே பிரிந்த கணவன் இருபது வருடம் கழித்து வருவது'' அவன் குளத்தில் விழும் போது அவனைத்

தூக்குவது பிறகு முகத்தைப் பார்த்து கணவனா? எனதிகைப்பது என்று எழுதி நடிக்கச் சொன்னார்கள்.

ஆனால், அது எப்படி கற்பனைக் கதை? நிஜக் கதையாகிவிட்டது. குளத்தில் விழும் கணவனாக நடிக்க டைரக்டர் ஒரு எக்ஸ்ட்ராவைக் கொண்டு வரப்போய்; அந்த எக்ஸ்ட்ராவா அவள் நிஜக் கணவனாக இருக்க வேண்டும்? பத்து வருடங்கள் கழித்துத் தன் நிஜக் கணவனைக் கண்டு விட்டாள்!......

தன்னைத் தவிர வேறு யாரும் அதைத் தெரிந்து கொண்டிருக்க முடியாது.

ஒரு வேளை அவர் அடையாளம் கண்டிருப்பாரோ?

எப்படி முடியும்? நான் இறந்து விட்டதாக அவர் எண்ணிக் கொண்டிருக்கும் போது, எப்படி நான் என்று எண்ண முடியும்?

அவர் நிச்சயமாக நம்மை அடையாளம் கண்டிருக்க முடியாது. அவளுக்கு தைரியம் வந்தது. சினிமா காட்சிபோல் அவள் முன்பு பழைய காட்சிகள் தோன்றின.

★

அவள் ஒரு கிராம மோகினி. அருமை அத்தானை மணம் செய்து கொண்டாள். அவள் தாய் தகப்பனும் அத்தானுடைய தாயும் கிராமத்தில் ஏற்பட்ட காலராவில் ஒரு வருடத்துக்குள் இறந்து விட்டார்கள்.

பிழைக்க வழியின்றி வேறு ஊர் சென்றார்கள். அங்கும் பிழைக்க வழியில்லை.

அப்போது தான் பட்டாளத்துக்கு ஆள் எடுத்தார்கள். அவள் அறியாமல் அவன் தன் பெயரைக் கொடுத்துவிட்டான்.

கடைசியில் அவன் பட்டாளத்துக்குப் புறப்படும் போது அவள் பட்டபாடு சொல்லி முடியாது.

“அங்கம்மா கவலைப்படாதே. எவ்வளவு காலத்துக்குதான் பட்டினி கிடந்து சாவது. பட்டாளத்துக்குப் போனால் மாசா மாசம் உனக்குப் பணம் அனுப்புவேன்.

சுதந்திர தின வாழ்த்துக்கள்

விருந்தளிப்பதில்
இணையற்றவள்

சாமிஸ்
காபி

விருந்தளிப்பதில் பெயர் பெற்ற குடும்பத் தலைவிகள், எல்லாவிடங்களில் இதையே விரும்புகின்றனர். அபூர்வ ரகத்தைச் சேர்ந்த இவை சகலருக்கும் வேண்டிய தரங்களில் கிடைக்கும்.

வறுக்காதது. வறுத்தது. பொடி



சாமிஸ் காபி
மான்யுபாக்சரிங்
கம்பெனி
சென்னை-1.
போன்: 3637

கொஞ்ச காலத்திலே திரும்பிடுவேன். அப்புறம் பட்டாளத்துக்கு போனவன்னு இங்கேயே எல்லோரும் கூப்பிட்டு வேலை கொடுப்பாங்க இரண்டு மூணுவருடம் பொறுத்துக்கோ" என்ருன். அவள் அவனைப்பிரிய மனமில்லை.

அவன் பட்டாளத்துக்குப் போய் மூன்று மாதமாகிவிட்டது. மாதா மாதம் பணம் அனுப்பினுன்.

அப்போதுதான் அவள் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

கிராம சூழ்நிலையில் படம்பிடிக்க வந்த ஒரு சினிமா கம்பெனி அவளைப் பார்த்தது. அவளை சினிமாவில் சேர வலை விசினுர்கள். அவள் மயங்கி விட்டாள். அவள் சினிமாவில் சேரப் போருள் என்பது அந்த ஊரில் யாருக்குமே தெரியாது. இரவோடு இரவாகப்போய் விட்டாள். கணவன் ஜெயிலுக்குப் போயிட்டான். பிழைக்க எங்கேயோ போய்விட்டாள் என ஊரார் எண்ணினுர்கள்.

வருடம் ஒன்ருயிற்று அவள் தோழியாகவும் உப நடிகையாகவும் நடித்தாள்.

மாதாமாதம் அவள் கணவன் அனுப்பிய மணியார்டர்கள் விலாசதார் போன இடம் தெரியவில்லை என அவனுக்கே திரும்பிவிட்டது.

இரண்டு வருடங்கள் ஓடி விட்டன.

யுத்தம் முடிவடையப் போகிறது. பட்டாளத்துக்குப் போனவர்கள் திரும்பி விடுகிருர்கள் என்று கேள்விப்பட்ட அங்கம்மாவுக்குப் பயம் வந்துவிட்டது.

கடந்த மூன்று வருட சினிமா வாழ்க்கை அவளுக்கு எல்லா சுகத்தையும் வைத்திருந்தது.

கணவன் வந்து விட்டால் சினிமாவுக்குமுழுக்குப்போட்டுவிட்டு அவனுடன் செல்ல வேண்டியதுதான்.

அப்புறம் பங்களாவுக்குப் பதில் ஓலைக் குடிசை. மோட்டாருக்குப் பதில் கட்டை வண்டி, பாதம் அல்வாவுக்கு பதில் மல்லா கொட்டை கேக், ஷிபான் சில்க்குக்குப் பதில் கண்டாங்கி சேலை. இவைகளை இழக்க அவள் தயாராய் இல்லை. எதற்காக சொர்க்கபோக வாழ்க்கையை உதறித் தள்ளவேண்டும்.

அதனுல் அவள் முடிவு செய்து யாரோ எழுதுவதுபோல் அவள் கணவனுக்கு "உமது மனைவி அங்கம்மா ஒரு வாரம் முன்பு மாரடைப்பால் இறந்து விட்டாள்" என்று எழுதிப் போடச் செய்து விட்டாள்.

அதன் பிறகு ஏழு வருடங்கள் ஆகி விட்டன. ஆனுல் அவள் கண்டாளா? அவள்எழுதிய கடிதம் அவள் கணவனுக்குக் கிடைத்து; அதே ஏக்கமாக அவன் இருந்து; கடைசியில் ஒரு நாள் பட்டாளத்தில் கால் நொண்டியாகி; பட்டாளத்தை விட்டே வெளியேற்றப் பட்டான் என்பதைப் பற்றியும், ஊர் ஊராகத் திரியும் அவன் அந்த ஊர் சத்திரத்துக்கு இரண்டு நாள் முன்புதான் வந்தான் என்பதையும்.

அவள் நல்ல வாழ்வு வாழ்ந்து வந்தாள். இன்று ஒருவேளை அவள் கணவன் அவளை அடையாளம் கண்டு கொண்டு தன் பங்களாவுக்குள் நுழைந்து பாத்யம் கொண்டாடினுல் தன் அந்தஸ்து என்ன ஆவது? அவள் அதை ஏற்கத் தயாராயில்லை. அந்த அருவருக்கத்தக்க நொண்டியை நினைத்தாலே மயக்கம் வந்தது.

★

"மல்லிகா" என கூப்பிட்டாள்.

"இன்று ஸ்டூடியோவிலே ஒரு எக்ஸ்ட்ரா நொண்டியாக வந்ததே அது இங்கு வந்தால் உள்ளே விடாதே!"

"சற்று முன்பு அது வந்தது அம்மா"

"அந்த நொண்டியா? என்ன கேட்டது அது?" பரபரப்புடன் கேட்டாள்.

இந்தக் கடிதத்தை உன் எஜமானி அம்மாகிட்டே கொடு என்று கொடுத்

தது அம்மா. அப்புறம் போய் விட்டார்''

அதை வாங்கி பரபரப்புடன் படித்தாள்.

"அங்கம்மா! என்னைக் கண்டு பயப்பட்டுதானே மூர்ச்சையானாய்? உன் வழியில் குறுக்கிட்டு விடுவேனே என பயந்து சாகாதே. உன் உலகம் வேறு; என் உலகம் வேறு. அதைத் தெரிந்து கொள்ளாத மூடன் அல்ல நான். இனி நான் உன் எதிரில் என் முகத்தைக் காட்டமாட்டேன். பயந்து சாகாதே. தைரியமாய் இரு அங்கம்மா! உன் வாழ்க்கையை இந்த நொண்டி, நொண்டியாக்கி விடமாட்டேன்''

கணவனுடைய பெருந்தன்மை அவள் புத்தியில படவில்லை. கணவனின் தியாககுணம் அவள் கண்ணில் படவில்லை.

அதற்குமாறாக "அப்பாடா எவ்வளவு பெரிய கண்டத்திலிருந்து பிழைத்தேன்!'' என்று ஆறுதல் மூச்சு விட்டாள்.

பழ ரஸத்தை கோப்பையில் நீட்டினாள் மல்லிகா. அவள் அதைப் பருகியபோது தேவலோகத்தில் இருப்பதுபோல் உணர்ந்தாள். இனி அவளுக்குக் கவலையே கிடையாதல்லவா?

★

எம். ஏ. வி. பிக்சர்ஸ் "சொலீலா"வில் ஒரு காட்சி

திருவிளையாடல்

ஸ்ரீ கிருஷ்ணா

பொங்கும் காவேரி, நுங்கும் நுரையுமாக சுழித்துக் கொண்டு ஓடியது. இரு மருங்கிலும் நின்ற மரங்கள், அரசனுக்குத் தலை வணங்கும் மக்கள் கூட்டம் போல தலை தாழ்த்தி அசைந்து தத்தம் வணக்கத்தை அவளுக்கு அளித்தன...

பருவத்தின் கன்னச் சுழிப்பென சுழன்ருள் ஓரிடம்! நாணம் கொண்ட நங்கையைப்போல் ஓரிடத்தில் விரைவும் வளைவும் கொண்டு ஓடினுள். சீறும் பெண்ணைப் போல் தன் அலைக்கரங்களால் அடித்தவாறு ஓடினுள் பிறிதோரிடத்தில். மோன ஞானியைப் போல் மையத்தில் அமைதியுடனும் காட்சியளித்தாள் பொன்னி மாநதி.

உச்சிப் பிள்ளையார் மலைக் கோட்டை மணி சரியாக பத்து முறை அடித்தது. அதைத் தொடர்ந்து எழுந்த இடியின் உறுமல் மணியின் முழக்கத்தை அப்படியே ஜீரணித்துக் கொண்டுவிட்டது.

சிங்காரத் தோப்புத் தெருவில் மேல அரண்சாலையை அடுத்து நிற்கும் ஒரு கம்பீரமான வீட்டினுள் ஒரே பரபரப்பு!

"என்ன இது! நீ ஒண்ணு. சீக்கிரம் புறப்படல்லே! மணி கூட பத்தடிச்சிடிச்சு. எத்தினி நேரமா நான் காத்திருக்கிறது! என்று உள்நோக்கி அவசரப்படுத்தினுர் ரங்கநாதம் பிள்ளை. காரின் கதவைப் பற்றியிருந்த அவரது கரத்தில் ஒரு வேகம்! வார்த்தைகளில் ஒரு துடிப்பு!

"இதோ வந்துட்டேங்க! எனக்கிருக்கிற பரபரப்புலே கையும் ஓடல்லே காலும் ஓடல்லியே! நான் என்ன செய்யறது?......தம்பியை நல்லபடியா பாக்க இந்த பாழுங் கண்ணு குடுத்துவச்சிருக்கோ என்னமோ தெரியல்லையே!..."

புலம்பியவாறே வெளிப்பட்ட நாச்சியாரம்மாள் காரினுள் ஏறிக் கொண்டாள். மருமகப்பிள்ளை கலியனும் ஏறிக் கொண்டவுடன், ரங்கநாதம் தாமும் ஏறி டிரைவர் ஸீட்டில் அமர்ந்து கொண்டார்.

"இந்தாம்மா! ரங்கம்! உடம்பை ஜாக்கிரதையாப் பாத்துக்க. முனியம்மா துணைக்கிருக்கு... நாங்க ராவுக்குள்ளற எப்படியும் வந்திருவோம்." என்று திண்ணையில் தூணில் சாய்ந்தவாறு நின்றுகொண்டிருந்த மகளை நோக்கிக் கூறிவிட்டு காரை ஸ்டார்ட் செய்தார் ரங்கநாதம்.

வானத்தில் அஷ்ட திக் கஜங்களைப்போல மேகங்கள்—கருமேகங்கள் திரண்டு குமுறின. மின்வாள்களால் ஒன்றையொன்று தாக்கிப் பகலை இரவாக்கின...

"மழை வேறெ வரும் போலல்ல இருக்கு!" என்ற நாச்சியாரம்மாள் தொடர்ந்து "எது எப்பிடியானுலும் சரி. நாம் குளித்தலை போய்ச் சேர்ந்துதானுகணும். தந்தி வந்ததிலேருந்து என் மனசு..."

பொறுக்க முடியாத துயரம் வார்த்தைகளை விழுங்கிவிடவே புடவைத் தலைப்பினுல், ஈரக் கண்களை துடைத்துக் கொண்டாள் நாச்சியார். ரங்கநாதம் மனைவியை ஒரு முறை திரும்பிப் பார்த்தாரேயொழிய வேறு ஒன்றும் பேசவில்லை.

கார், காலேஜ் ரோட்டைத் தாண்டி சிந்தாமணி பஜார் ரோடில் திரும்பியது. கூட்டம் அதிகமாயிருந்தும், திறமையினுல் வேகமாகவே சமாளித்து ஓட்டிய ரங்கநாதம் கரூர் திருப்பம் வந்ததும் திடீரென

ஸடன் 'ப்ரேக்' போட்டு வண்டியை நிறுத்தினர்.—பிழைத்தார்.

இல்லையெனில் எதிரில் வந்த ராக்ஷஸ லாரியுடன் வண்டியும் மோதியிருக்கும்! அந்தக் கிழவியும் செத்துத் தொலைந்திருப்பாள். ஸ்ரீ ரங்கத்திலிருந்து டவுன் பஸ். கரூர் ரஸ்தாவிலிருந்து லாரி, நடு மையத்தில் கிழவி சாவகாசமாக வந்து இவர் காரிலல்லவா அகப்பட்டுக் கொள்ளப் பார்த்தாள்!...

நல்ல வேளை. அவளை லேசாக இடித்துத் தள்ளிவிட்டு கிராதி ஓரமாகப் போய் நின்றது அந்த வண்டி.

கீழே சுருண்டு விழுந்து கிடந்த உருவத்திடம் அவருக்கு அனுதாபம் தோன்றவில்லை. எரிச்சல் தான் மிகுந்து வீசியது.

"சீ! தரித்திரமே! என் வண்டி தானு கெடச்சுது ஒனக்கு சாக!. மூஞ்சியைப் பாரு!..." என்று சீறினுர்.

"நீங்க நிறுத்தியே இருக்கக் கூடாது மாமா! மேலே ஏத்தியிருக்கணும். கை கால் ஒடிஞ்சு நாலு மாசம் ஆசுபத்திரியிலே கெடந்தாலாவது சாப்பாட்டுக்கு கஷ்டப்படாமலிருக்கும் சனியன்!"—என்று கலியன் தன் பங்குக்கு குறைவில்லாமல் ஒப்பித்தான்.

நாச்சியார் தான் பறந்தாள்.

"வீட்டுக்கே திரும்ப ஒரு நடை போயிட்டு வந்துடலாம். என்னங்க ...சுத்தமா சகுனம் சரியாயில்லே, போற எடத்துடலே நல்ல சமாசாரம் காதுலே விழணும்... வண்டியை திருப்புங்க"

"ந்தா! நீ சும்மாருக்கமாட்டே" தண்ணியிலே விழுந்தவனுக்கு அங்கே மூச்சு இருக்குதோ என்ன எழவோ! ஒரு வீநாடின்னு ஒரு வினுடி கூட வீணுகக் கூடாது. ஆமாம்... சகுனமாவதுமண்ணுங்கட்டியாவது என்று வண்டியை இரண்டடி 'ரிவர்ஸில்' வாங்கி, சரியான தடத்துக்குக் கொண்டு வந்து, ஓட்டலானுர் ரங்கநாதம்.

கை 'இயரை' மாற்றியது ஆனுல் சகுனத்தடை போல வந்த அந்தக் கிழவியின் முகம் அவர் நினைவை விட்டு மாற மறுத்தது.

தும்பைப் பூ போன்ற முகட்டு தலைமயிரும், சுருக்கம் விழுந்த நெற்றியும், உள்புறம் வளைத்து வழித்தாற்போன்ற மூக்கும். பள்ளக் கண்களும், துருத்திய உதடுகளும் கொண்ட அந்த நரம்புப் பின்னலான உடலை நினைத்துக் கொண்டதும் நெஞ்சத்தில் அருவருப்பு நிறைந்து வாயில் வெறுப்பாக ஊறி வெளியே உமிழ்ந்து தள்ளினுர்.

"சனியன்! கர்மம்! நாம் பொறப்பட்ட வேளையைப் பார்த்து வந்தது பாரேன், சொல்லி வைத்தாற் போல...."

"வெறும் எலும்புக் கோர்வை மாமா! கார் நசுக்கியிருந்தாலும் சொட்டு ரத்தம் கூட வந்திருக்காது,"

இது மருமகன் கலியனின் ஹாஸ்யம் கலந்த வெறுப்பின் உளறல். ரங்கநாதம் அதை ரசிக்கவில்லை நாச்சியாரோ தன் உடன் பிறந்தவனின் உடல் நிலை எப்படியிருக்கிறதோ என்ற துடிப்பையே இதயத் துடிப்பாகக் கொண்டிருந்தாள்.

தார் ரோடில் சக்கரம் தேய்ந்து ஓடும் 'ஙொய்' ஓசையைத் தவிர வேறு எவ்விதமான ஓசையு மற்ற தொரு மௌன வெளியில் அவர்களுடைய மனங்கள்-எண்ணங்கள்-சிதறிப்பறந்து கொண்டிருந்தன... விபத்துக்காளானவளைப் பற்றி யார் கவலைப்படுவது?

இடுப்புப் பொருத்தில் காரின் 'மட்காடு' மோதி தூக்கி யெறிந்திருந்தது அவளை. பிசாசின் கரம் ஒன்று 'வெடுக்' கென்று இடுப்பு எலும்பில் ஒன்றை பிடுங்கி விட்டாற் போன்ற வேதனையில் கையையும் காலையும் உதறிக் கொண்டு துடிதுடித்தது அந்த கிழட்டு ஜீவன். உலகம் அவளை பார்த்து அனுதாப வார்த்தைகளைச்

சிந்தியதே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. படபடப்பும் வேதனையும் தானுகவே சற்று அடங்கியவுடன் மெதுவாக தட்டுத் தடுமாறியபடியே எழுந்த அவள் ஒருபுறமாய் எகிறி விழுந்திருந்த ஊன்று கோலை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்; தள்ளாடியவாறே.

காத்துக் கொண்டிருந்தது போல மழையும் பிடித்துக்கொண்டது.

★

தாயையும் தந்தையையும், கணவனையும் வெளியே அனுப்பிவிட்டு வீட்டில் தனித்திருந்த ரங்கத்திற்கு மனதையும் உடலையும் ஏதோ சங்கடம் செய்தது. தந்தி வந்ததும் தாய் துடித்த துடிப்பைப் பார்த்து, தான் தைரியமாய் இருப்பதாகக் காட்டிக் கொண்டாளே யன்றி, கார் அப்பால் சென்ற பிறகு நடிப்பை இழந்து, உண்மை நிலையில் அவதிப்பட்டாள்;

அம்மா எப்படி போகாமலிருக்க முடியும்! கூடப்பிறந்தவன்-காவேரியாடப்போன காலை-வெள்ளத்தில் மூழ்கி-வெறும் கட்டையாய் பிரக்ஞையற்ற நிலையில் எடுத்துப் போட்டிருக்கிருர்கள் என்று தந்தி வந்தால் பதருமல் இருக்க முடியுமா சகோதரபாசம்! ...

'ஒரு பகல் தனியாய் இருப்பது என்ன பிரமாதம்! எப்படியும் அவர் இரவுக்குள் வந்து விடுவாரே! வேலைக்காரி முனியம்மாதான் பகல் பூராவும் இங்கேயே இருக்கப் போகிருளே! பின் என்ன பயம்?'

ரங்கத்திற்கு ஏனே உடல் ஓரிடத்தில் பொருந்தியிருக்க வில்லை.

"ஏம்மா இம்படி உலாத்தறீங்க! ரங்கநாதரு ஓய்யார நடை மாதிரி" என்று கூட கேட்டு விட்டாள் முனியம்மா.

கேலி பேசும் அளவுக்கு உரிமையுள்ள, பழகிய வேலைக்காரி அவள். ஆனால் சந்தர்ப்பம் தெரியாதவள்,

"போடி! எனக்கென்னமோ மனசே சரியாயில்லை. சின்ன மாமனுக்கு எப்படி இருக்கிறதோ

'பாவம்! இப்பத்தான் கல்யாணம் செய்துகிட்டாரு. பத்துமாசம் கூட ஆவல்லே'... நீ கேலி பேசறே!...

"நீ ஏம்மா கவலைப்படறே! அதெல்லாம் ஒண்ணும் இருக்காது. காவேரியிலே மாட்டிக்கிட்டா சொம்மாவா?... தண்ணியெல்லாம் தான் கக்கிட்டாராமே!... பின்னென்ன... ஒரு நாலு நாளு சொரம் கூட அடிக்காம வுட்டுடு மாங்காட்டியும்!... அட! நீ ஒண்ணு எல்லாம் உச்சிப்புள்ளையாருமேலே பாரத்தைப் போடுவியா?...

"அப்படித்தாண்டி நெனச்சிருக்கேன்..." என்ற ரங்கம் டீபாயின் மேலிருந்த பிளாஸ்கை திறந்து ஒரு வாய் காபியை எடுத்து விட்டுக் குடித்தாள். ஏதோ தளர்ச்சி பாவம். ஒன்பது மாத கர்ப்பிணியாயிற்றே!... ஆயாசத்துடன் சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

"அம்மா!." — என்று கூப்பிட்டாள் முனியம்மா.

"என்னடீ"?

"நான் வூட்டுக்குப் போயி குழந்தைக்குப் பாலூட்டி விட்டு வந்துடறேம்மா. இப்பத்தான் மழை கொஞ்சம் குறைஞ் சிருக்காப்பல தெரியுது."

"சரி, சரி, குழந்தையை இங்கேயே எடுத்துட்டு வந்திடு. பாரு முனியம்மா...நான் வீட்டிலே தனியாயிருக்கேன்..சல்தியா வந்துடு."

"சரியம்மா. அது தெரியாதா எனக்கு...வரேம்மா-". முனியம்மா போய் விட்டாள். கைக் குழந்தைக்காரி பாவம்!...

முனியம்மாளும் போனவுடன் ரங்கத்துக்கு உண்மையாகவே பயமாக இருந்தது... அப்பப்பா!... என்ன இடி! என்ன இடி!... வயிற்றுப் பிள்ளை அதிர்கிறுப்போல ஒரு இடியா! திடீரென இடுப்பைப் பிடித்துக் கொண்டாள் ரங்கம். யார் வெட்டுகிருர்கள் இப்படி?... அடுத்த சில நிமிடங்களில் மீண்டுமொரு வெட்டா!...

"அம்மா" என்ற அலறலையே கொண்டு வந்து விட்டது அது.

கணவனை கைப்பிடித்து மூன்று ஆண்டுகளில் ரங்கத்துக்கு அடுத்தடுத்து இரண்டு மூன்று மாதங்கள் கூட ஆகாத நிலையில் கருச் சிதைவுகள் ஏற்பட்டுவிட்டன. பிரஸவத்தின் முழுமையான வேதனை அவளுக்குப் புது அனுபவம் தான்..

இம்முறை பிரத்தியேகமாக—பிறந்த வீட்டில் எவ்விதமான குறைவுமின்றி வெகு ஜாக்கிரதையாக இருந்து வந்தாள். நாச்சியாரம்மாள் பெண்ணை. அனுமன் வாலாயமடுத்து ராமலக்ஷ்மணர்களை காத்தது போல கண்காணித்து வந்தாள் என்றாலும் மிகையாகாது;

ஆயினும் என் செய்வது?

ஜம்புநாதன் இந்த சமயம் பார்த்தா காவேரி வெள்ளத்தில் சிக்கிக் கொள்ள வேண்டும்!

ஒரே ஒரு நாள்தான். போய் பார்த்து நல்ல படியாய் இருந்தால் உடன் திரும்பி விடலாம். அதற்குள் இங்கு ஏதாவது நேர்ந்து விட்டால்! உம்! அப்படி என்ன நேர்ந்து விடப் போகிறது! இருவகையான ரத்தபாசப் போராட்டத்துக்குள் அகப்பட்ட நாச்சியாரம்மாள் எப்படியோ புறப்பட்டு விட்டாள். மருமகன் கலியனுவது இருந்திருக்கலாம். மனைவிக்குத் துணையாக.

"நானும் வரேன் அத்தை; ஜம்புவை ஓடனே நான் பார்க்கணும். என் ஆப்த சினேகிதன் அவன்... இந்த மாதிரி சமயத்துலே நான் போய் பார்க்காட்டி நல்லாருக்மா?" என்று கலியன் புறப்படுகையில் அதை மீறி ஒரு வார்த்தை பேச முடியவில்லை நாச்சியாருக்கு.

நாச்சியார் தன் மனதில் பாதியைப் பெண்ணிடம் விட்டுவிட்டு தவித்தபடியே காரில் போய்க் கொண்டிருந்தாள்.



எல்லோரும் எது நடக்கக்கூடா தென்றிருந்தார்களோ அது இங்கே நடந்து கொண்டிருந்தது.

ரங்கத்துக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை,

வாசற்புறம் போனாள், கொல்லைப் புறம் போனாள். தத்தளித்தாள். டாக்டருக்கு டெலிபோன் செய் தாள்...

விதியின் முன்னேற்பாட்டை என்ன வென்பது. மின்சாரமும் டெலிபோனும்- இயற்கையின் சீற் றத்தில் செயலிழந்து நின்றன.

வெளியே ஒரே மழை! வானும், கடலும், வையமும் ஒன்றாகிவிட கூட்டு முயற்சி நடந்துகின்ற னவோ?...

ரங்கம் தவித்தாள்!... வெளியே மனிதப் பூண்டே இல்லை... அனை வரும் கர்ப்பத்தினுள் அடங்கியது போல் அடங்கிவிட்டிருந்த நிலையில், இங்கு ஒரு தாய் சிருஷ்டி மலரும் வேதனையில் வெம்பி வெம்பி; துடித் துத் துடித்துச் செத்துக் கொண்டி ருந்தாள்...

முனியம்மா இதோ வருகிறேன் என்றவள் இன்னும் வரவில் லையே!... ரங்கம் தவியாய் தவித் தாள்!...

வாசல் திண்ணை வரையிலும், கத வுடன் போராடி-திறந்து-வெளிப் பட்டு தெருவை எட்டிப்பார்த்தாள்..

மனிதகுலம் ஒடுங்கியிருந்தது...

இயற்கை சீறியது வெளியே...

உள்ளே போகத் திரும்பியவளு டைய கண்களில் நிலைப்படிக்கு நேராக மாட்டியிருந்த படம் தென் பட்டது.

இந்திராணி என்கிற செட்டிப் பெண்ணுக்குத் தாயுமாகி வந்த எம் பெருமானின் படம் அது. கங்கை யும் திங்களும் சூடிய நாகாபரணன், மனம் கனிந்து, தாய் வேடம் கொண்டு பிள்ளைபேறு-பார்த்து, தன் மடியிலே குழந்தையை இட்டு, மருந்தூட்ட, இந்திராணி படுத்திருக் கிறாள், தாய்மை பேறுபெற்ற பூரிப் புடன்.

''அம்மா''—என்ற ஓர் அலறல் தான். ரங்கத்தின் வாயிலிருந்து

சரம் தொடுக்கும் நீர்த் தாரகை யில் மோனத்தவமியற்றுவதுபோல படுத்துகிடந்தது திரிசிரகிரி. இரு புறமும் காவிரி அணைய-சிம்மதியு டன் படுத்துக்கிடந்தார் அரங்கன்... அகிலாண்டநாயகி தனக்குள் சிரித் துக் கொண்டாள்!... வெளியே உலகம் சீறியது!...

ஆலமுவந்து அமுதுசெய்தானின் எண்ணம் என்னவோ? யார் அறி வார்...

விநாடிப் புழுக்கள் ஊர்ந்தன...

★

ரங்கத்திற்கு மெதுவாக சுய நினைவு திரும்பியது. உணர்வும்-விழிப்பும் ஒன்று படாத நிலையில் தெளிவற்ற காட்சிகள் தாம் முத லில் தெரிந்தன. புலன்கள் படிப் படியாக கூர்மை பெற-எல்லாவற் றையும் அவளால் உணர முடிந்தது.

அவள் பக்கத்தில் ரோஜா மல ரின் இதழ்களின் மென்மையோடு கூடிய ஒரு குழவி கிடந்ததே!... சூக்ஷமத்துக்கும், ஸ்தூலத்துக்கும் இடையில் அவள் பட்ட வேதனை யின் எல்லை தாண்டி விட்டதா?... அந்த வேதனையின் சாட்சிப் பிரமா ணமா இது?—

பயன்!—இன்பக்கனியாய்— மடி யில் வந்து விட்டதே!... ''ஏதாவது சாப்பட நீங்களா தாயே!''—

முனியம்மாவின் குரல் தான்... எப்பொழுது வந்தாள் இவள். ''ஆமா தாயே! ஏதாவது குடி! இந் தப் பாலையாவது குடியம்மா!'' முற் றிலும் வேறு குரல்!

தன் வாய் வரைக்கும் குவளையு டன் நீண்ட கையைப் பார்த்தாள் ரங்கம். சுச்சிருச்சியாய் மெலிந்து நீண்டிருந்த அவைகளைத் தொடர் ந்து சென்ற அவளது பார்வை முடி வாக முகத்தில் வந்து நின்றபொ ழுது! ''என் அப்பனே! நீயே வந்து விட்டாயா?-'' என்ற ஒலி தானு காவே பிறந்து விட்டது.

உள்ளம் வார்த்தைகள் மூலம் வடிய, கண்கள் பனிக்க, கரங்கள் குமுதமெனக் குவிந்தன.

''என்னம்மா தாயே இது! உயர்

சாதாரணமானவ! என்னைக் கும் பிடாதே தாயே! ஆகாது!...

கிழவி பதறினள்.

"அப்படிச் சொல்லாதே பாட்டி!.: நாங்கள் சாதாரணமானவர்கள். நாங்கள் எங்களுக்காகவே வாழ்கிறேம்.! வெறும் மனிதர்கள்! நீ அப்படியல்ல!... உன்னிடம்தான் தெய்வம் வாழ்கிருர். இதற்குமேல் எனக்கொன்றும் சொல்லத்தெரியவில்லையம்மா..."

ரங்கம் விம்மினள்.

"என் பெண்ணும் மருகனும் திட்ருன்னு வந்துட்டாங்கம்மா, இல்லாட்டி நான் அப்பவே வந்திருப்பேன்... இவுங்க கேட்டு கிட்டெ வந்தப்போ நீங்க திண்ணே மேலே மயக்கமா வுளுந்திருந்திங்களாம்... ...இவுங்கதான் குழந்தையை எடுத்துப் போட்டாங்களாம்...அப்புறம் தானுங்க நான் வந்தேன்...பாவி..."

தன் குற்றத்தை உணர்ந்த தன்மையுடன் பேசினள் முனியம்மா.

இருவருமாக ரங்கத்தை தூக்கி கட்டில்மேல் படுக்க வைத்தனர். கிழவி குழந்தையை தன் மடி மீது வைத்து மருந்து புகட்டினுள். இறைவனின் செயலே எண்ணி கண்ணீர் வடித்தாள் ரங்கம்.

★

வாசலில் கார் சத்தம் கேட்டது.

"எல்லாம் வேடிக்கை தான் போ!" என்ருள் நாச்சியாரம்மா சிரித்தவாறே.

"தந்தியை ஒழுங்காப் பாக்க வேணும்! ரங்கநாதம் பிள்ளைன்னு ஒடனே கையெழுத்துப் போட்டு வாங்கிடறதா? எல்லாம் ஒரே அவசரம் ஒனக்கு!" என்று ரங்கநாதம் மருமகப்பிள்ளையை சற்றே கடிந்து கொள்கிறமாதிரி பேசினர்.

"நான் என்ன செய்வேன் மாமா! இங்கிலீசு கோண எழுத்திலே ஜம்புகேசன்ங்கறதை-ஜம்புநாதன்னு அவசரமா படிச்சுட்டேன். மாடியிலே குடியிருக்கிறவங்க பேரும் ஒங்க பேரும் வேறே ஒண்ணுயிடுச்சா!...

"சரி, சரி, ஒடனே தந்தியாபீசுக்குப் போயி-குளித்தலே விலாசத்துக்கு-அவுங்க ஊரிலே இல்லேன்னு ஒரு தந்தி குடுத்தாகனும்! பாவம்!... கல்லவேளை! ஜம்புநாதனே எதிர்க்க வந்ததனுலே உண்மை தெரிஞ்சுது... அட!... என்ன இது! எத்தினை வாட்டி ஹாரன் அடிக்கறது!... ஏ, முனியம்மா!... கேட்டைத்திற!—'.

தொடர்ந்து ஹாரன் முழங்கியது. நடுக்கத்துடன் முனியம்மாள் வந்து கதவைத்திறந்தாள்.

கார் நின்றதும் அவசர அவசரமாகக் கதவை திறந்து கொண்டு பரக்கப்பரக்க உள்ளே ஒடினவன் நாச்சியாரம்மா தான். முனியம்மாவின் முகத்தில்தான் எழுதி ஒட்டியிருந்ததே!

ரங்கம் இருந்த நிலையைப் பார்த்தவுடன் முதலில் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"அடீ என் செல்வமே!" என்று மகளை வாரியணைத்துக் கொண்டாள். அவ்வளவு தான் முடிந்தது. பொங்கிய உணர்ச்சிகள் சொற்களை வென்றுவிட்டன. வாயிற்படியருகில் ரங்கநாதமும், கலியனும் நின்ருர்கள்-நூற்றுக்கால் மண்டபத்தின் தூண்கள் போல...

நடந்ததைப் புரிந்துகொள்ள சில நிமிஷங்கள் தேவைப்பட்டன. எதையோ கண்டு கொண்டவன் போல கலியன் கூவினன்.

"மாமா!. இவள்...இவள்..."

"ஆமாப்பா! நான் காரிலே இடிச்சேனே! அவதான்...அவளே தான்...

கிழவி இவர்களைக் கண்டவுடன் பயத்துடன் குழந்தையை கீழே விட்டுவிட்டு மெள்ள எழுந்து மெதுவாக நழுவ ஆரம்பித்தாள். அதற்குள் ஓடிவந்து அவளுடைய இரு கரங்களையும் பற்றிக்கொண்ட ரங்கநாதம். உணர்ச்சியால் நாத் தழுதழுக்க "அம்மா! தாயே! நீ யாரோ எனக்குத் தெரியாது. எங்களை மன்னிச்சுடு அம்மா!... இப்பொ நான் உன்னிடம் உன்னைப் பார்க்க வில்லை...'அந்தத் தாயுமானவனை—எங்கும் நிறைந்தவனை - உன்னிலும் பார்க்கிறேன் தாயே!...என்றவாறே அந்தக்கரங்களை தம் கண்களில் ஒற்றிக்கொண்டார்.

★

சீர்

கே.வி. நடராஜன்

1

ஆபீஸுக்கு அணிந்து சென்ற உடைகளைக் களைந்துவிட்டு, வேற்றுடை மாற்றி ஊஞ்சலில் அமர்ந்தான் அரவரசன். சூடான காபியும், பஜ்ஜியையும் கொண்டு வந்து வைத்தாள் அவன் மனைவி அங்கயற்கண்ணி; பிறகு கடிதம் ஒன்றையும் அளித்தாள்.

"கண்ணி! எதோ நீ தான் படி, கேட்கிறேன்!"

"நீங்களே படித்துப் பாருங்கள்! உங்களுக்குத்தான் வந்திருக்கிறது!"

"இந்தப் பாகப்பிரிவினை இன்றிலிருந்து தொடங்குகிறதா, பேஷ்! அட, உன் தங்கை தேன்மொழியாளுக்குக் கலியாணம் நிச்சயமாகிவிட்டதா? பலே! பிள்ளையாண்டான் அதிர்ஷ்டம் செய்தவன்! கையிலே ஆயிரமும், உடைக்கு என்று ஐந்நூறும் தருகிறார்களா? பையன் ஜில்லா கலெக்டர் ஆபீஸில் ஸ்டெனோகிராபரா? உம். நூற்றிருபதோ, நூற்றைம்பதோ சம்பாதிப்பான்! இதற்கு ஓராயிரம் ரூபாய் தட்சணை? ஏதோ நல்லபடியாய் நடந்தால் சரி!"

"சுமங்கலிப் பிரார்த்தனை அடுத்த வாரம் வெள்ளியன்று நடக்கிறதாம்! எனக்கும் ஒரு பத்து நாள் முன்னதாகப் போகணும் என்று ஆசை! நீங்களும் ஆபிஸிலே லீவு போடுங்கள் போய் வரலாம்!"

"கண்டதற்கெல்லாமா லீவு தருவான்கள்! மச்சினி கல்யாணத்திற்கு என்றாலே சிரிப்பான்! நீ போய் வா, எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை!"

"இப்படிக் கிள்ளுகீரையாய் பேசினால் என்ன செய்வேன்! அம்மா ஆசைப்படறாங்க! மேலும் எனக்கு இது ஐந்து மாதம்! பூச் சூட்டலும் நடத்து வாங்க! நீங்களும் கல்யாணமாகி ஐந்து வருடமாச்சே, அங்கு போயிருப்பீங்களா? இந்தக் கல்யாணத்தைச் சாக்கிட்டுப் போய் வரலாம்!"

"வக்கத்த மாப்பிள்ளைக்கு எருமுட்டைப் பணியாரம் சீர் வைப்பார்கள்! போய் அவமானப் படுவதில் என்னடி லாபம்? நானும் இருநூறு சம்பாதிக்கிறேன்! எனக்கு என்னத்தைச் சாய்த்து விட்டார்கள்? கையிலே இரு நூறு தர அழுதார்கள்; பாத்திரம், பண்டம், உடை, நகை, நட்டு என்று என்னக்கிழித்தார்களாம்? இன்னும் கொஞ்சம் நஞ்சம் "சூடு, மானம்" என் உடம்பில் இருக்கிறது? உன் தங்கைக்குக் கல்யாணமானால் எனக்கு என்னடி ஆயிற்று? சீர் தூக்குவார்

களோ? சீர்? நான் வருவதற்கில்லை; ஆபீஸ் விஷயமாய் வெளியூர் போகவும் நேரிடலாம், நீ போய்வா, நாளையே அனுப்புகிறேன்!''

''நீங்கள் வந்தால்தான் எனக்கு மரியாதை வரும்! வீட்டிற்கு முதல் மருமகப்பிள்ளை நீங்க! முன் நின்று நடத்திக் கொடுக்க வேண்டிய கல்யாணம் இது? நீங்க மட்டும் இங்கு அலைய, நான் போக முடியாது! நான் வந்தாலும் வராவிட்டாலும், நன்கு நடக்கும் அந்தக் கல்யாணம்! ஏதோ கர்ப்பிணி ஆசைப்பட்டேன்! உம், ஊரிலே, உலகத்திலே, நான் ஒருத்திதான் கர்ப்பிணியோ? பெண், என்றைக்குமே ஆசைப்படக்கூடாது; ஒரு முறை தவறிவிட்டேன்!''

''நீலித்தனம் செய்தாவது என்னை மாற்ற முடியும் என்று எண்ணாதே! மரியாதை தெரியாதவன்கிட்டே சென்று தடுமாற என்னால் முடியாது! நீ போய்வா, என்ன ஆயினும், நீ வீட்டுப் பெண் அல்லவா?''

''எதற்கு இனி இப்பேச்சு? நல்ல வேலை ஏதாவது இருந்தால் பாருங்கள்!''

அவள் எழுந்து சென்றாள் உள்ளே!

''ஜம்பத்திற்கு ஒன்றும் குறைவில்லை. உன் குடும்பம்! நீ போனால் என்ன, இங்கே இருந்தால் என்ன?''

2

ஏண்டா இறைமணிமுடி! மாப்பிள்ளைக்குக்கடிதம் போட்டாயா? இன்னும் இரண்டு நாளிலே சுமங்கலிப் பிரார்த்தனை ஆயிற்றே? கண்ணியும் கர்ப்பிணி, அவள் விருப்பப்படி பட்டுப் புடவை எடுக்கணும்; ரோஜா கலரில் எடடா! இருநூறுரூபாய்க்குக் குறைக்க வேண்டாம்; பூச்சூட்டலையும் கூடிய சீக்கிரமே வைச்சுடணும்! அவள் இன்னும் பதில் போடலையே?''

''அம்மா, இன்று ஆபீஸுக்கு எழுதியிருக்காள். உடல் நல

Premier Insurance Co., Ltd.,

*

Largest Motor Insurance Co. of South India

*

Yearly Premium Income Exceeds Rs. 17,00,000.

No. of Vehicles Insured Exceeds 40,000

*

289, THAMBU CHETTY STREET, MADRAS-1.

மின்மையால் அவளும், அவரும் வருவதற்கில்லையாம்! எதற்கும் நானே நேரே போய் பார்த்து அழைச்சிண்டு வருகிறேன்! மாப்பிள்ளை என்ன நினைக்கிருரோ. நேரே கூப்பிடாது அவமரியாதை செய்கிறேன் என நினைச்சுடுவன்! தம்பி 'பருதி' இங்கு பிறவற்றைப் பார்த்துக் கொள்ளட்டும்!

"ஜாக்கிரதையாய் போய்வா. மாப்பிள்ளையிடம் பணிவாகவே பேசி வா! ஆத்திரம் கூடாது!"

"எனக்குத் தெரியாதா என்ன?"

3

"என்ன மாப்பிள்ளை! நாளைக்கு ஊருக்குப் போகணும், கணணியையும் உங்களையும் நேரே கல்யாணத்திற்கு அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன்; காலையிலே ஆறு மணிக்கு வண்டி, சாயங்காலம் ஊர் சேரலாம்; அதே முகூர்த்தத்திலே கண்ணிக்குப் பூச்சூட்டலை நடத்த அம்மா ஆசைப்பட்ருங்க! நீங்களும் எங்களுடன் பத்து தினங்கள் இருந்து என்னைக் கௌரவிக்கணும்!"

"கண்ணிலய அழைச்சிண்டு போங்க. மேலும் லீவு தரமாட்டாங்க! முகூர்த்தத்தன்று வந்து விடுகிறேன்"

"இப்படிப் பேசக்கூடாது! நீங்க வந்துதான் ஜவுளி பாத்திரம் வகையரு வாங்க உத்தேசித்திருக்கிறது! மற்றபடி ஜாலியாய் இருக்கவும் முடியும்!"

"உங்களுக்குத் தெரியாத ஜவுளி தினுசுகள், பண்ட பாத்திர வகைகள் எனக்கு எங்கே புரியப்போது?"

"என்ன அண்ணு, அவரு பட்டும்படாமலும் ஒதுங்கிநிற்கிருரு! நீ என்ன இப்படி இவரை இழுத்துக்கிட்டு? அவருக்கு இந்தக் கல்யாணந்திலே இஷ்டமில்லை! அதுவும், இவ்வளவு செலவு பண்ணுவதும்புடிக்கல்லே! இவருக்குத் தனக்கு ஒரு சீரும் செய்யல்லே என்று தாபம்? ஆகவே..."

"கண்ணி! நீ சும்மா இருக்க மாட்டே? போ, உள்ளே!" என்ருன் அரவரசன்.

"அண்ணு! ஒரு ஐந்நூறு ருபாய்க்கு இவருக்குச் சீர் எடுத்தாத்தான், கல்யாணத்திற்கு வருவாராம்; இவர் வரவில்லை என்ருல், நான் எப்படி வருவது? பூச்சூட்டல். சீமந்தம் நடக்காமலே பிள்ளை பெற முடியாதா? வெள்ளைக்காரங்க சீமந்தம் பண்ருங்களா? நல்லாத்தானே பிறக்கிறது, குழந்தை? நீங்க போய் வாங்க! தேன் மொழிக்கு என் ஆசியைச் சொல்லு! நான் இங்கிருந்தாலும். என் மனசு அங்கு தானிருக்கும்! ஏழை அக்கா வந்துதான் என்ன செய்து விடுவாள்?"

"கர்ப்பிணி அழக்கூடாது, கண்ணி! நான் சீர் தருகிறேன்! இதற்காகவா வராமல் போவது? அரவரசு! புறப்படுங்கள்! சந்தர்ப்பம் இழக்கக் கூடாது! அம்மா வருத்தப்படுவாள்! உங்க இஷ்டப்படி ஐந்நூருக்குச் சீர் எடுக்கலாம்!"

"மணிமுடி! அவள் ஏதோ உளறுகிருள்! உண்மையில் ஆபீஸில் வேலை—"

"பேசாமல் லீவு எழுதுங்கள்! சம்பளமில்லாமல் லீவு என்ருலும் சரி!"

"அண்ணு இன்னென்று! என் பூச்சூட்டலுக்கு என்று எனக்கு வைர மூக்குத்தி ஐந்நூறுக்குப் போட்டால்தான் அங்கு வருவாராம்!"

"கண்ணி, அங்கு போய் பேசிக்கலாம்! புறப்படு!"

அரவரசன் பத்து நாளைக்கு லீவு எழுதினுன். பத்து நாளைக்கு மட்டுமா எழுதுவான்? ஒரு மாதத்திற்கும் அவன் தயார் தான்!

4

"மணிமுடி! "கௌரி கல்யாணம் வைபோகமே!" என்பார்கள் நீயோ "வை போக்கியமே" என்று கூடச் செய்யாது மொத்த நிலத்தையும் "கிரயம்",

அல்லவா செய்துவிட்டாய்? பத்
தாயிரம ருபாய் வந்தாலும, கல்
யாணம என்று ஐயாயிரம் செல
வழிக்கப்போகிருய், மிச்சம் பண
த்தைப் பாங்கியில் போடாது,
பூச்சூட்டல் என்று ஓராயிரம்
செலவு செய்ய முன் வருகிருயே?
நாளையே உன் பெண் கல்யாணத்
திற்கு, மருகப்பிள்ளை உதவுவாரு
என்ன? இப்படி "தாம், தூம்"
செய்வதற்கா உன் அப்பா நிலம்
வாங்கிச் சேர்த்தாரு?"

"அம்மா, மரத்திற்கு எல்லாக்
கிளைகளும் சமம்; ஒரு கிளை கூட
வாடக்கூடாது! இன்று நான்
யாருக்குச் செய்து விடுகிறேன்?
என் தங்கைகளுக்குத்தான்!
அவர்கள் மகிழ்த்தால், என்
குடும்பம் வாழும்! ஆபத்திற்கு
உதவாத நண்பன், அரும்பசிக்கு
உதவாத அன்னம்; தாகத்திற்கு
உதவாத நீர், நற்செலவுக்கு உத
வாத சொத்து. எதற்கம்மா? தங்
கைகளே தமபிகளாய் பிறந்
திருப்பின், அவர்களுக்கும சொத்
தில உண்டு பங்கு!"

"இப்படிப் பேசித்தான் பல
குடுமபங்கள் மெள்ள மெள்ள
நசித்துவிட்டன! எரிகிற வீட்
டில் பிடுங்குகிற பாவிகளுககும்
இவர்களுக்கும என்ன வித்தி
யாசம்?

"அம்மா, தன்கை கண்ணைக்
குத்திற்று என்று கையை வெட்
டுவது? அப்புறம் பேசலாம்! பசங்
கள் இங்கு வரலாம! வைர மூக்
குத்தி வாங்கிவிட்டேன். அறு
நூறு ருபாய்! பெரிய மாப்பிளளை
யிடம் ஐந்நூறு ருபாய் தந்து
விட்டேன; அவர் எதை வேண
டுமாளுலும் வாங்கிக் கொள்ளட்
டும்!"

"நீ இப்படி இருக்கத்தான்,
அவர் உன்னை விரட்டுகிருர். இந்
தக்கள்ளி கண்ணியும்உடந்தைக்

காரி! உடன் பிறந்தாளே இப்படியிருக்க, அவன் எப்படி இருப்பான்? நாளைக்குப் பந்தலிலே தேன்மொழிக்கு என்ன கொண்டு சாய்ச்சிடுவான்? பசு மறப்பதற்குள் ஒட்டக் கறக்கும் கும்பல் இது?"

"செய்தாயிற்று! இனி வீணாய் தூற்றல் தகாது! ஏதோ இருக்கிற சமயத்திலே கேட்க, என்னால் செய்ய முடிந்தது! குறிப்பறிந்து தருவது தருமம்; கேட்ட பிறகாவது செய்வது சீர்! நாளைக்கு ஜவுளி எடுத்து விடுகிறேன்! பிறகு முகூர்த்தம்தான்! மற்றவற்றை வாங்கிவிட்டேன்!"

"மணிமுடி! நான் என்ன சொல்ல முடியும்! நான் ஓர் பெண்! இனி ஜாக்கிரதையாய் இரு!"

அவன் முறுவலித்தான்!

5

"மாப்பிள்ளை! பெரிய மனசு வைத்து, கண்ணியுடன் வந்து, எங்களைக் கௌரவித்தீர்கள்! நல்லபடியாய் நடந்தன முகூர்த்தங்கள்! ஒரு விஷயம்; கண்ணியைக் கொஞ்ச நாட்களுக்கு இங்கு விட்டு வையுங்கள்!"

"மணிமுடி! எனக்கு என்ன ஆட்சேபனை? ஆனால், அவ்வூரில் உணவுக்குத்தான் சிரமம்! மேலும், அவள்தான் இரண்டு மாதங்களில் இங்கு வரப்போகிறாள்! அவள் புறப்படட்டும்: பிறகு பார்க்கலாம்!"

"சரி, உங்களிஷ்டம்" பெட்டி படுக்கை எல்லாம் சரியாக வைத்திருக்கிறீர்களா? கண்ணி, உன் புதுப்புடவை, வைர மூக்குத்தி எல்லாம் ஜாக்கிரதையாய் பெட்டியில் வைத்தாயா? மொத்தம் ஏழு சாமான்கள்! இரண்டு பெட்டி, ஒரு கைப்பெட்டி, படுக்கை, பைகள் மூன்று; கூஜாவைக் கையில் எடுத்துக்கொள், கண்ணி? டாக்ஸி ரெடி! புறப்படுங்கள், மாப்பிள்ளை!"

"போய் வருகிறேன்! மணிமுடி!"

'அண்ணா, போய் வரட்டுமா?"

"அசடே அழாதே! அடிக்கடி கடிதம் போடு"

டாக்ஸி புறப்பட்டது. ரயில்வே ஸ்டேஷனில் நின்றது டாக்ஸி: போர்டர் ஒருவன்மீது பெட்டிகள் படுக்கைகளை ஏற்றினான். இரண்டு பைகளைத் தான் எடுத்துக் கொண்டான். கூஜாவைக் கண்ணி எடுத்துக் கொண்டாள். கைப்பெட்டியைப் போர்டரிடம் தந்தான்.

பணத்தை வாங்கிக் கொண்டு டாக்ஸி டிரைவர் புறப்பட்டான்.

டிக்கெட்டுகள் வாங்கினான். போர்டர் சௌகர்யமாக உதவினான். ரயிலில் சௌகர்யமாக ஏறினான். வண்டி புறப்பட்டது. இருவரும் அருகருகே உட்கார்ந்தனர்.

"தீவட்டிக் கொள்ளைக் காரனுக்கு, உங்களுக்கும் என்ன வித்தியாசம்? அவர்கள் நிலங்களை விற்று, கல்யாணம் செய்யவே திணறும்போது ஐந்நூறு வாங்கிக் கொண்டீர்கள்! வைர மூக்குத்தி வேறு "வட்டம்" பெற்றீர்கள்!"

"ஏன்? நானா; மூக்குத்தி இட்டுக் கொள்கிறேன்? உன் அண்ணாவே தரும்போது, வேண்டாம் ரூபாய் என்றால் அவன் மரியாதை என்ன ஆகும்?"

"மயில் கண் வேஷ்டி இரண்டு ஜதை, ஷர்ட்டுகள் அரை டஜன், அங்கவஸ்திரம் இரண்டு. போதாததற்கு எனக்கும் பட்டுப் புடவை—பாவம்! அண்ணாவைப் பிழிந்து எடுத்து விட்டீர்கள்? இவ்வளவும் செய்து கொண்டீர்களே, தேன் மொழிக்கு என்ன "பரிசு" தந்தீர்கள்? மாப்பிள்ளை என்றாலே, "வாங்கி வாங்கி வீட்டிலே அடுக்கிக் கொள்ளும் ஜாதி" என்று இனி அகராதியில் போட வேண்டும்! ஐந்து ரூபாய்க்கு ஒரு "ப்ளாஸ்டிக்" "டாய்லெட்" செட் வாங்கி ஜம்பமாய் பரிசு" என்று அளிக்கிறீர்!

என்னை என்ன கேலி செய்தார்கள். நணபர்களும், பிற உறவினர்களும்!''

"இதோ பார் கண்ணி, ஏதோ என் மனம்மகிழ்ந்து அளித்ததை "எடை" போடக்கூடாது!"

"போடக்கூடாது!" வந்தால் என்ன கொண்டு வந்தாய்; போனால், என்ன தருவாய்!—"இனி நான் அங்கு போகமாட்டேன்!''

"ஏன், தூக்கி வெளியே எறியேன், அந்த வைர மூக்குத்தியை?''

''என் அண்ணை போட்டதை வீசி ஏன் எறியவேண்டும்?"

"பின் என்னை ஏன் இப்படித் தூஷிக்கணும்?''

"ஐந்நூறு ரூபாய் வாங்கிக் கொண்டீர்களே, என்ன செய்யப் போகிறீர்களாம்?"

''என்னிஷ்டம், ஒவ்வொன்றுக்கும் பெண்டாட்டியைக் கேட்டுச் செய்ய வேண்டுமாக்கும்?''

"சொல்லாவிட்டால், என்ன முழுகிவிடும்!"

அவள் திரும்பி ஜன்னல் வெளியே பார்த்தாள்.

"உனக்கு மட்டும்தான் கோபம் வருமாக்கும்?"

அவன் எதிர்பக்கம் பார்த்தான்!

★

அவர்கள் வீட்டிற்கு வரும் போது இரவு மணி எட்டு!

"கண்ணீ! நாலுபேர் எதிரே, ரயில் வண்டியிலே, வைர மூக்குத்தி, ஐந்நூறு ரூபாய் என்று பேசிகிருயே, நல்லதா? இரண்டாவது, என்னையே அங்கு தூஷிக்கிருயே, இன்னும் பொருமை வேறு உனக்கு?"

''எனக்கு என்ன? இப்படியே கேட்டுக் கொண்டு போங்கள், பிறகு கொஞ்சம் நஞ்சம் மதிப்பும் மறையும்! ஐந்நூறு ரூபாய்!

"அடி! வைரமூக்குத்தி வேண்டும் என்று நானு கேட்டேன். நீயே அவனைக் கேட்டாய்! சுத்த........"

''ஐயாயிரம் செலவழிக்கிருன்! எனக்கு என்று ஒரு ஐந்நூறு தரக் கூடாதா? அதுவும் பூச்சூட்டல் வேறு! இரண்டுக்கும் சேர்த்துத் தான்.........'

'என் ஆபீஸிலே "காஷியர்" வேலை எனக்கு வரப்போகிறது! சம்பளம் மூன்னூறு ஆகும். முன் பணம் என்று ஐந்நூறு கட்டச் சொல்கிருன்! கையிலே பணமில்லை. இன்னும் ஒரு வருஷத்தில் அந்த ஐந்நூறையும் உன் அண்ணனுக்குத் திருப்பி விடமாட்டேனு?''

"நல்ல வைரமாக வாங்கியிருக்கிருன்; பெட்டியைத் திறவுங்கள்: இந்தாருங்கள். கைப் பெட்டியின் சாவி; வழியிலே போட்டுக் கொண்டுவர எனக்குப் பயமாக இருந்தது. இனி வீட்டிலே என்ன பயம்? பேசாமல் ''டிபாசிட்'' கட்டிவிடுங்கள்!''

"பேச்சைப் பார். பச்சோந்தி!''

"உங்களது அருமை மனைவி நான்?"

அவள் சிரித்தாள்!

அரவரசன் சாவிக் கொத்துடன் அறைக்குள் சென்ருன்.

சிறிது நேரம் சென்றது!

"அடி, கண்ணீ! எங்கு வைத்திருக்கிருய், அந்தப் பெட்டியை?''

''அங்குதான் கட்டிலுக்கு அடியிலே பாருங்களேன்! வரவரப் பரபரப்புதான்! துப்பு இல்லை!"

"நீயே வந்து பார்! கைப்பெட்டியைக் காணோம்!''

''ஐயோ! என்ன உளறுகிறீர்கள். மூக்குத்தி. பணம் இரண்டும் அதில்தானே வைத்தீர்கள்? புடவை வேறு அதில் வைத்தேன்!"

"எல்லாச் சாமானும் இருக்கிறது. பெட்டி மட்டும் வரவில்லை?"

"ரயிலில் விட்டீர்களா? அந்த ஊர் போர்டர் விட்டுவிட்டானு? அல்லது இவ்வூர் போர்டர், டாக்ஸிக்காரன் விட்டுவிட்டானு?"

"போர்டர் நெம்பரும் தெரியாது! என்ன செய்வது?

"போச்சு, ஆயிரத்து முந்நூறு ரூபாய்!"

"இஞ்சி தின்றக் குரங்குகள் மாதிரி ஆய்விட்டதே" கண்ணீ? ரூபாய் நோட்டு நம்பரும் தெரியாது!"

ஐயோ! என்னை என்னவோ செய்கிறதே! வயிற்றைக் குமட்டுகிறதே! மயக்கம் வருகிறது!"

அரவரசன் திரும்பினுன்.

தடால் என்று கீழே சாய்ந்தாள் கண்ணி!

"அரவரசன் அவளை எடுத்துக் கட்டிலில் விட்டான். உடனே டாக்டரை வரவழிக்க ஏற்பாடு செய்தான்.

டாக்டர் வந்தார். அவளைப் பரிசோதித்தார்.

"ஸார், எதிர்பாராத சம்பவத்தால் மன அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கருப்பை அதிர்ச்சி அடைய, கரு கலைந்து விட்டிருக்கிறது வயிற்றில் உள்ள சிறு கரு விலகிவிட்டது! இன்னும் பத்து நாட்களுக்குப் படுக்கையிலேயே இருக்க வேண்டும்! யாராவது உறவினர்களைத் தந்தி கொடுத்து அழையுங்கள்! ஆஸ்பத்திரிக்கு வாங்க, மருந்து தருகிறேன்!"

"டக்டக்" என்றுபூட்ஸ் ஒலிக்க அவர் வெளியேறினுர்.

அரவரசன் பேசாது கட்டிலில் படுத்து மயங்கிக் கிடக்கும் அங்கயர்கண்ணியின் தலையருகே அமர்ந்தான். வெளியே மைதானம் ஒன்றில் ஒரு நாய் அழுதது! ★

SRI GANESHRAM'S 777 BRAND FOOD PRODUCTS · MADRAS-1 · S. INDIA

திடீர் 3 நிமிஷ
தயாரிப்புகள்

—★—

அரிசி இட்லி, மைசூர் போண்டா
தக்காளி சாம்பார் & ரசம்

மேற்படி பவுடர்களை தண்ணீர் விட்டு கரைத்த உடனேயே தயாரிக்கலாம். ஊறவோ, புளிக்கவோ தேவையில்லை!

கிடைக்குமிடம்

இண்டியன் இண்டஸ்ட்ரியல் கோ., லிட்.,
(ஹைகோர்ட் எதிரில்) சென்னை-1.

இண்டு-கம்-என்டர் பிரைஸர்ஸ் (பி) லிட்.,
37, லால்பாக் ரோடு, ரிச்மண்ட் சர்க்கிள், பெங்களூர்-1.

மமதையின் சமாதி

சி. ஆர் ராஜம்மா

விக்டர் வந்து விட்டால் ஸ்டேஷன் களை கட்டிவிடும். அந்த கம்பீரமான ஆகிருதியும், கடுமையான குரலும் குற்றவாளிகளை நடுநடுங்கச் செய்யக்கூடியது. இந்த உயர்ந்த பதவிக்கு விக்டர் வெகு சீக்கிரம் வந்துவிட்டான். இன்னும் பெரிய பெரிய பதவிகள் எல்லாம் அவனை வரவேற்கத் தயாராக இருந்தன.

கடுமையான ஓட்டுக்குள்ளே, குளுமையான இளநீரை படைத்திருக்கும் சிருஷ்டி விநோதம்தான் என்னே? அதேபோல தன்மையான தெளிந்த தண்ணீருக்கிடையே அயர்ந்தால் மனிதனை அமுக்கும் சுழிகள் நிறைந்திருக்கும் அதிசயத்தைதான் சொல்ல முடியுமா? விக்டர் இவ்விரண்டு விதங்களுக்குமே விதிவிலக்கு. கடுமையான உருவத்தின் உள்ளே கொடுமையான இதயமும் கொண்டவன். ஈவு இரக்க மென்பதே மருந்துக்குக் காண்பது அபூர்வமாக இருக்கும் போது குற்றவாளிகளிடம் விக்டர் எப்படி நடந்து கொள்வான் என்று சொல்லவும் வேண்டுமா?

சின்ன வயதிலிருந்தே வாழ்க்கையை சௌகரியமாக அனுபவிக்கவும் செய்தான். பெரிய இடத்துப் பெண் லூஸி மனைவியாகவந்து வாய்த்தாள். விக்டர் இந்த உலகத்தில் ஒரே ஒருவருக்குச் சற்று அஞ்சுகிறவன் என்றால் அது லூஸி ஒருத்திக்குத்தான்.

மறுநாள் விக்டரின் செல்வ மகன் தாமசுக்குப் பிறந்த நாள். எந்த ஒரு விஷயத்தையும் படோ டோபமாக நடத்தி பெருமை பெற விக்டருக்குப் பிடிக்கும். ஒவ்வொரு வருஷமும் தாமஸின் பிறந்த நாளைச் சிறப்பாகத்தான் கொண்டாடுகிறான் விக்டர். இந்தத் தடவை மிகச் சிறப்பாகக் கொண்டாட நினைத்தான். சமீபத்தில்தான் விக்டருக்கு உத்தியோக உயர்வு கிடைத்திருந்தது. தெரிந்தவர்களைக் கூப்பிட்டு அதற்காக ஒரு பார்ட்டி கொடுக்க நிச்சயித்திருந்தான். தாமஸின் பிறந்த நாளும் சேர்ந்துகொள்ளவே பெரிய பார்ட்டி ஒன்றுக்கு ஏற்பாடு செய்து விட்டான் விக்டர்.

லூஸி தனக்குத் தெரிந்த பெண்மணிகளை எல்லாம் அழைத்திருந்தாள். தாமஸ் தன் சிநேகிதர்கள், பள்ளிக்கூட டீச்சர்கள், இவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தான். உத்தியோக முறையில் சிலரை விக்டர் கூப்பிட்டிருந்தான். இதைத் தவிர பொதுப்படையாக தம்பதிகள் இருவருமாகச் சென்று சிலரை வரும்படிக் கூறியிருந்தார்கள்.

லூஸி பிறப்பிலேயே செல்வச் சீமாட்டியல்லவா? பெரிய தோட்டத்தின் நடுவே அழகான சிறு பங்களாவில் வாழ்ந்து வந்தார்கள் அவர்கள். மாலை ஆறு மணிக்குப் பார்ட்டி என்று அறிவித்திருந்தாலும் அதற்கு முன்பே கூட்டம் சேரத் தொடங்கிவிட்டது. வாடகை மோட்டார்களும், சொந்த கார்களும் சீறிக் கொண்டுவந்து விருந்தினர்களை இறக்கியது. மரங்களிலும் செடிகளிலும் பல வண்ண மின்சார பல்புகள் எரிந்தன. அங்கங்கே வட்ட மேஜைகளும் நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. பணியாட்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

பார்ட்டியின் நடுவே தாமஸ் ஒரு மாதின் கையைப் பிடித்துக்கொண்டு ஓடோடியும் வந்து தன் தாய்க்கு அந்தப் பெண்மணியை அறிமுகம் செய்து வைத்தான். லூஸி அப்பொழுது சில பெரிய மனிதர் வீட்டுப் பெண்மணிகளுடன் சுவாரஸ்யமாக சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். ஆகவே அந்தப் பெண்ணை தாமஸ் அழைத்து வந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை, காரணம், தாமஸ் கூட்டிக்கொண்டு

வந்தவள் அந்தஸ்தில் அவர்களுக்கு எந்தவிதத்திலும் நிகரானவள் அல்ல என்பதை அவளுடைய நடையுடைபாவனை கூறியது. லூஸி நிறைகுடம். அதனால் அவளை வெறுக்கவில்லை. சம்பிரதாயமான மரியாதைகள் கூறி உட்காரவைத்தாள். அவள் பேச்சு மறுபடியும் பழய போக்கில் திரும்பிவிட்டது.

பார்ட்டி முடியும் சமயம். தட்டுகளில் வைத்த பொருள்கள் பெரும்பாலும் அப்படியப்படியே இருந்தன. கிண்ணங்களில் பானங்களும் பாதிக்குமேல் இருந்தன. பெரிய மனிதர்கள் தோரணையது. யாரும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது. பார்ட்டிக்கு வந்திருந்தவர்கள் எல்லாருமே பதறினார்கள். தாமஸின் கையில் இருந்த விலையுயர்ந்த வைர மோதிரம் ஒன்று காணமல் போனதுதான் காரணம்.

லூஸிக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. பார்ட்டி ஆரம்பித்து சில நிமிஷங்களுக்கப்புறம் கூட அது அவன் விரலில் மின்னிக்கொண்டிருந்தன. கிழே விழுந்திருக்கலாமோ என்று வேலையாட்கள் தேடினார்கள். கிடைக்கவில்லை. எங்கு பார்த்தாலும் ஒளி சிந்தும் விளக்கு அந்த வைர மோதிரத்தைக் காட்டிக் கொடுத்து விடும். யாரோ எடுத்திருக்கிறார்கள். குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பிரசித்தமான போலீஸ் அதிகாரி வீட்டிலேயே திருட்டு என்றால் திருக்கூட்டத்தினருக்கு ஒரு தெம்பு உண்டாகுமல்லவா? அதற்காகச் செய்த வேலையிது. அதுவும் எப்பேர்பட்ட இடத்தில், எந்த சமயத்தில் நடந்திருக்கிறது.

லூஸிக்குப் பொருள் போனதைவிட பலர் இருக்கும்போது இம்மாதிரி நடந்து விட்டதே என்றுதான் குறையாக இருந்தது. கௌரவப்பட்டவர்கள் முன்னிலையில் இதைப் பெரிதாக்க எண்ணவில்லை லூஸி. சரிதான் போனால் போகட்டும். நாம் இதற்காக வருந்துவானேன் என்றாள் அசுவாரஸ்யமாக. கூட்டத்தில் வந்திருந்த ஒரு அதிகாரி கொஞ்சம் முரட்டுப் பேர்வழி. அத்துடன் விக்டருக்கு நண்பரும் கூட. இந்த விஷயத்தை நான் இப்படியே போக்க அனுமதிக்க மாட்டேன். ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே சோதனை செய்து கொள்ள வேண்டும். மனதிருப்திக்காகச் சொல்லுகிறேன். மனித இதயம் பொல்லாதது. கெட்டுப்போன பொருளோ சாமான்யமானதல்ல. ஏன் என்னிடமே இந்த மாதிரியான ஒரு மோதிரம் இப்பொழுது கிடைத்தால் எத்தனை சௌகரியமாக இருக்கும் தெரியுமா? இங்கிருப்பவர்கள் எல்லாம் முற்றிலும் துறந்த ஞானிகள் அல்ல என்பதற்காகச்சொல்ல வந்தேன்.” என்றார். அவரை காக்காய் பிடிக்கும் இரண்டு மூன்றுபேர் ரொம்ப சரி, ரொம்பசரி என்று அவர் சொன்னதை ஆமோதித்தார்கள்.

லூஸியிடம் ஒரு பெண் வந்து அந்தஸ்துக்குத்தக்கபடி மனிதர்களை அழைத்திருக்க வேண்டும். கண்டபேர்களெல்லாம் வந்தால் விஷயம் இப்படித்தான் விபரீதமாகப் போகும் என்றாள். குறிப்பாக மேரியைச் சுட்டிக் காட்டியபடி. மேரியிடம் அப்பொழுதே முதல் அவளுக்கு ஒரு கண். மற்றவர்களைப் போல் நாசூக்காக உண்ணவில்லை அவள்; அதிக நாகரீகமாகவும் இல்லை. லூஸி தன் சிநேகிதியின் எண்ணத்தைப் புரிந்து கொண்டாள். “மேரி தாமசுடைய உபாத்தியாயனி? கல்விச் செல்வம் அவளிடம் இருக்கிறது என்பதற்காக மட்டுமே நான் மதிப்பளித்தேன். தாமஸ் மனம் புண்படக்கூடாது. தன் உபாத்தியாயனியிடம் அவனுக்கு அளவு கடந்த மதிப்பும், மரியாதையும் உண்டு” என்றாள்.

“நம்பிக்கையான இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களும், மற்றவர்களை சோதனைபோடலாமே தனித்தனியாக,” என்றாள் ஒரு மாது. இம்மாதிரி விஷயங்கள் கிடைத்தால் அவளுக்குச் சாப்பாடே வேண்டாம். விஷயம் விபரீதமாகப் போவதைக் கண்டு

லூஸி வருந்தினாள். "நாம் இந்த விஷயத்தை இத்துடன் விட்டு விடலாம்; என்றாள், எல்லாரும் கேட்கும்படியாக. முதலில் இந்த பிரச்னையைத் துவக்கி வைத்த முரட்டுப் பேர்வழியான செல்ஸன் அத்தனை

சுலபமாகத் தான் துவக்கி வைத்ததை பிசுபிசுக்கவிட மனமில்லாதவராக, "நான் சோதனைக்குத் தயார்" என்று கூறி தன்கோட்டை எடுத்து உதறினர். கிஜார்ப் பாக்கெட்டில் கைவிட்டு பையை வெளியே இழுத்து உதறினர். இதைத் தொடர்ந்து பலரும் அம்மாதிரிச் செய்ய ஆரம்பித்தார்கள். பெண்கள் பகுதியிலும் இந்த பைத்தியக்காரத்தனம் பிடித்துவிட்டது. அழகுக் கைப் பையையும், ஜாக்கெட்டுகளையும் நாசூக்காக நானும் செய்கிறேன் என்ற பாவனையில் உதறினார்கள். புஷ்பங்களும், வாசனைப் பொருள்களும் விழுந்தன. நோட்டுகள் கசகசத்தன. பணம் கலகலத்துச் சிரித்தது. இத்தனைக்கும் ஒரே ஒரு ஆத்மா அமைதியாக இருந்த இடத்தை விட்டு எழுந்திராமல் உட்கார்ந்திருந்தது. அவள் தான் மேரி. முன்பு கவனிக்கத் தவறியவர்கள் கூட இப்பொழுது அவளைக் கவனித்தார்கள். லூஸியின் காதில் ஏதோ ஓதினார்கள். விஷயம் வெகு சீக்கிரம் விக்டருக்கும், அவனைச் சூழ்ந்திருந்தவர்களுக்கும் எட்டியது.

நெல்ஸன்தான் விரைந்து வந்தான் சாதாரண வெள்ளை உடை, கையில் அழகுப் பை, கால்களில் அணிகள், இவைகளுடன் எளிமையாகக் காட்சியளித்த மேரியை எரித்து விடுகிறவன் போல் பார்த்தான். மற்றவர்களை ஒட்டி மேரியும் நடந்து கொள்ளாதது, சந்தேகத்தை எழுப்புகிறது. என்றான் உரக்க. எனக்கு இவளைத்தெரியும் நடுத்தர மக்கள் வாழுமிடத்தில் வாழ்கிறாள். இவளுடைய வாழ்வே ஒரு மர்மச் சுழல். இங்கு எதற்காக வந்தாள். நாமாக அவளை சோதனை செய்தால் என்ன? என்று விக்டரிடம் மெதுவாகச் சொன்னார்.

தன் பேரிலேயே தனக்கு நம்பிக்கையில்லாதவர்கள் மனிதர்களல்ல. நான் அதைப்பற்றி இப்பொழுது அதிகம் சொல்ல வரவில்லை. உங்களுடைய அழைப்பின் பேரில் வந்தேன். மோதிரத்துக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்று நிச்சயமாகச் சொல்கிறேன் என்னை நானே சோதனைக்குள்ளாக்கிக் கொள்ள விரும்பவில்லை. பிறரும் என்னை சோதனை போட விடமாட்டேன். நிர்ப்பந்தமாக என்னை சோதனைக் குள்ளாக்கினால்.." மேற்கொண்டும் பேசமுடியாமல் உணர்ச்சிப் பெருக்கால் மேரியின் வார்த்தை தடைபட்டது. முகம் சிவக்க, உடல்பட படத்தன.

"நம்மையே இவள் முட்டாளாக்குகிறாள் விக்டர் உள்ளத்தில் கள்ளமில்லாதுபோனால்இவளை சோதனை செய்வதில் தடை ஏன் கூறுகிறாள்?" என்றான் நெல்ஸன். லூஸிக்கு இந்த விவகாரம் பிடிக்கவில்லை. விக்டரோ அதிகாரம் இருந்தும் அந்த இடத்தில் ஒன்றும் சொல்லத் தோன்றாதவனாக சிலையாக நின்றான். பல ஜோடிக் கண்கள் தன்னை ஆராய்வதைக் கண்டு மேரி கூனிக் குறிகினாள் "இந்த விஷயத்தை இத்துடன் நிறுத்துங்கள். எல்லாரும் கலையலாம். நடந்ததை கனவாக எண்ணுங்கள்." என்று திடுமென லூஸி உறுதியான குரலில் கூறினாள். கூட்டம் கலகலத்தது. கார்களின் உறுமல் புறப்படுவதற்கு அறிகுறியாக் கேட்க ஆரம்பித்தது.

"கண்டிப்பாக மேரிதான் எடுத்திருக்க வேண்டும். மிகவும் ஏழை அவள் என்பது எனக்குத் தெரியும்." என்றாள் ஒரு பெண். "கையும் களவுமாக அவளைப் பிடித்திருக்கலாம். பொருள் பெரிதல்ல, போலீஸ் அதிகாரி வீட்டில் திருடு போனதை அவராலேயே கண்டு பிடிக்க முடியவில்லை என்றால்..." என்று நெல்ஸன் குத்திக் காட்டினார்.

பெரும்பாலான விருந்தினர்கள் கலைந்து சிந்திக்க அவகாசம் கிடைத்தபோது விக்டரின் மூளை வேலை செய்தது. தாமஸின் உபாத்தியாயனி என்று எண்ணியது தவறு. தன் அழைப்பின் பேரில் வந்த விருந்தாளியை அவமானப் படுத்தக்கூடாது என்று விட்டது அதை விடத் தவறு. வாழ்க்கையில் இத்

தனே நாள் செய்யாத தவறைச் செய்துவிட்டோம். கடமையி லிருந்து தவறி விட்டோம். குற்ற வாளி, யாராஞலும் குற்றவாளி தானே. இனிமேலும் ஒன்றும் காரி யம் மிஞ்சிவிடவில்லை. கையும் களவுமாக அவளைப் பிடித்துவிட லாம். பலர் முன்னிலையில் பிடிப் பதை விட இப்படிச் செய்வதுதான் நல்லது. அவளுடைய கைப் பை யில் ஏன் அந்த மோதிரம் இருக்கக் கூடாது. தனக்கென தனி வாகன வசதியில்லாத அவளை இப்பொ ழுதே பின் தொடரலாமே. நெல் ஸன் கூறியதின் மூலம் ஓரளவு அவளுடைய இருப்பிடம் தெரியும். தொழில் அனுபவமுள்ளதால் மற்ற தைக் கண்டு பிடிப்பது அத்தனை சிரமமல்ல, இப்படி எண்ணியமாத் திரத்தில் அதைச் செயலாக்க முனைந்தான் விக்டர். குறுகிய சந்து ஒன்றில் விக்டருடைய மோட்டார் ஸைக்கிள் நுழையவும், தாழ்ந்த கூரை வீட்டின் கதவு முன் மேரி நின்று கதவைத்தட்டுவதும் ஒன்ருக இருந்தது.

தாள் விலக்கப்பட்டு மேரி உள்ளே போவதைத் தெருவிளக்கு வெளிச்சத்தில் கவனித்தான் விக் டர். சிறிது தூரத்திலேயே தன் வாகனத்தை நிறுத்திவிட்டு கூடிய மட்டும் காலடி சத்தம் கேளாமல் வீட்டின் கதவருகில் வந்து நின்ருன் போலீஸ் உடையில் வராததால் தெருவில் மற்றவர்கள் கவனத்தை கவர முடியாமல் இருந்தது. தாளிட்ட கதவுக்கு உள்ளே பேச் சுக் குரல் தெளிவாகக் கேட்டது.

"ஜான்..."

"என்ன? மணி ரொம்ப ஆகிவிட் டது. உங்களை எத்தனை நேரமாக எதிர்பார்த்தேன் தெரியுமா?"

"கொஞ்சம் தாமதமாகி விட்டது ஜான்; இந்தா. "ஆகா எத்தனை அழகாக இருக்கிறது. எனக்குத் தானு! ரொம்ப விலை யிருக்குமே!" என்று ஒரு சிறுவனின் குரல் தெளி வாக மகிழ்ச்சியுடன் கேட்டது. விக்டரின் சந்தேகம் தெளிந்துவிட் டது. மோதிரத்தைத்தான் கொடுக் கிருள் அவள். அவனுடைய கை கதவைத் தட்டியது கதவு திறந் தது. உள்ளே லாந்தரின் வெளிச் சத்தில் மேரி அவனைக் கண்டு திகைத்தாலும் சமாளித்துக் கொண் டாள். "உங்களுடன் இன்னும் போலீஸ்காரர்கள் வந்திருக்கிருர் களா என்ன? "என்ருள் எடுத்த எடுப்பிலேயே. இல்லை நான் ஒரு வனுகவே உன்னை மடக்கி அழைத் துச் செல்லமுடியும். என்று எக் காளமாக பதிலளித்தான் விக்டர்.

மேரி அலஷ்யமாகச் சிரித்தாள். "விக்டர் இப்பொழுது என் கைப் பையை நீங்கள் சோதனை செய்ய தடையில்லை. இம்மாதிரியான ஒரு சூழ்நிலையை உருவாக்கிய கர்த் தரின் கருணையே கருணை." என்று கூறி அழகுப் பையைத் திறந்தாள். அதிலிருந்து ஒவ்வொரு கடிதங்க ளாக எடுத்துப்பிரித்து விக்டரின் முன் பரப்பி விளக்கையும் பெரி தாக்கி வைத்தாள். விக்டர் திகைத் தான். சுமார் பத்து வருஷங்க ளுக்கு முன் அவன் கைப்பட எழு திய காதல் கடிதங்கள் அத்தனையும்.

உங்கள் இளமையும், எழிலு முள்ள, பழைய மேரியை நீங்கள் மறந்து விட்டீர்கள். காலமும், உழைப்பும், கவலையும், என்னை உருமாற்றிவிட்டது விக்டர். வசதி யாக வாழும் சமயம் கிடைக்கும் போது வரட்டு வேதாந்தம் பேசி அதைக் கைவிடும் முட்டாளல்ல நீங்கள். எத்தனையோ பேரிடம் கொண்ட காதலைப்போல் என் மீதும் கொண்டீர்கள். கடைசியில் மறந்தீர்கள். ஏமாந்தது நான் தான். தாமஸ் உங்கள் மகன். நீங் கள் மகிழ்ச்சிகரமாக வாழ்கிறீர்கள் என்று தெரிந்த போது என் உள் ளம் பொருமையால் எரிந்தது. இந்தக் கடிதங்களை லூஸியிடம் காட்ட சந்தர்ப்பத்தை எதிர் பார்த் திருந்தேன். ஆனுல் அங்கே வந்த போது என் மனம் மாறிவிட்டது. லூஸியின் பெருந்தன்மை புத்தி தான் அதற்குக் காரணம். பலர் முன்னிலையில் என் அழகுப் பையை சோதனை செய்திருந்தால் யாருக்குத் தலை குனிவு ஏற்பட்டிருக் கும் எண்ணிப் பாருங்கள். அத

ஞல்தான் நான் அதற்கு அனுமதிக்கவில்லை.

''நெல்ஸன் என்மேல் வீண்பழி சுமத்திஞர். உங்களையும் தூண்டிஞர். காரணம் என்ன தெரியுமா? நான் அவருடையவளாக மறுத்ததின் விளைவு அது. இதோ நிற்கிருனே ஜான், இவன் உங்கள் மகன் தான்.' அன்று அடிமையான இந்த உடலும், உள்ளமும், என்றுமே யாருக்கும் அடிமையாகாது. வாழ்க்கையில் எத்தனையோ வசதிக் குறைவுகள் இருக்கிறது எனக்கு. அதோ என் மகன் கையில் வைத்துச் சுவைக்கும் கேக் உங்கள் பார்ட்டியிலிருந்து எனக்களிக்கப்பட்டதை கொண்டு வந்தேன். எத்தனை நாளாக அவன் இம்மாதிரி ஒன்றைக் கேட்கிருன் தெரியுமா? நான் உண்மையில் திருடி என்ருல் இதைத்தான் குற்றமாகச் சொல்லலாம்...... மேரி...... அழுதேவிட்டாள்.

விக்டரின் வாகனம் கிளம்பி பங்களாவை அடைந்தபோது லூஸி ஆவலே வடிவாக ஓடி வந்து தாமஸின் மோதிரம் கிடைத்துவிட்ட செய்தியைக் கூறினள். உணவுத் தட்டிலேயே அது நழுவி விழுந்திருந்ததாம். அவைகளை சுத்தம் செய்யப்போன வேலைக்காரன் மோதிரத்தை ஒளிக்கப் பார்த்தானும். ஆனுல் லூஸி கண்டு பிடித்துவிட்டாளாம். அவனுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும் என்றுதான் எல்லாரும்எதிர்பார்த்தார்கள் அவனுடைய வழக்கமும்; கொள்கையும் கூட அதுதானே. ஆனுல் முதல் குற்றம் என்பதால் விக்டர் அவனை மன்னித்ததுதான் எல்லாருக்கும் ஆச்சரியம். அதற்கப்புறம் கூட தயவு, தாட்சண்யம், என்பதை கடைப்பிடித்து வந்ததால் பெரிய பெரிய பதவிகள் அவரைவிட்டு விலகின. இந்த குணத்தின் அடிப்படை வேர் மேரியின் செயல்தான் என்று கடைசிவரை யாருக்குமே தெரியாமல் போய்விட்டது. தன் இன்ப வாழ்க்கையுடன் விக்டரின் மமதையையும் சமாதி பண்ணிவிட்டாள் அவள்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நாட்டியாலயா

[பரத நாட்டிய ஸ்கூல்]

பெண்களுக்கு மட்டும்

போஷகர்: **குமாரி வைஜயந்திமாலா**

சிறந்த ஆசிரியரைக் கொண்டு சாஸ்த்ரீய முறையில் நாட்டிய வகுப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாணவிக்கும் பிரத்தியேக கவனம் செலுத்தப்படுகிறது.

★

விவரங்கட்கு:

நாட்டியாலயா,

C/o 'மாலா' ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கிருகப் பிரவேசம்

அசுவத்தாமா

அன்றைய தபாலில் எனக்குக் கிடைத்த செய்தி என் உள்ளத்திலே ஒரு கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. என் அத்தை மகள் கமலம் பம்பாயிலிருந்து சென்னைக்கு வரப் போகிறாள் என்ற விஷயம்தான் அந்தச் செய்தி. கடிதத்தைப் படித்து முடித்ததும் எண்ணங்கள் கமலத்தை நோக்கிக் குவிந்தன.

'இப்பொழுது அவள் எப்படி இருப்பாள்? சிறுமியாக இருந்த போதே இணையற்ற எழிலுடன் விளங்கிய அவள், இப்போது அசல் சினிமா நட்சத்திரம் போன்று ஜிலு ஜிலுப்புடன் மின்னுவாள்...பருவக் கொழிப்பும் உருவச் செழிப்புமாக மன்மதன் கணைகளுக்கு எதிரம்பு விடுபவள் போன்று யௌவன சிங்காரியாகத் திகழ்வாள்... அவள் நடைதான் எவ்வளவு ஒய்யாரமாக இருக்கும்! பத்து ஆண்டுகளுக்கு முன் என்னுடன் எப்பொழுதும் கேளிக்கையும் வேடிக்கையுமாகக் கை கோத்து விளையாடியவள். ஆனால், இப்பொழுது என்னுடன் சகஜமாகப் பழகுவாளா?

இன்று அவள் அந்தஸ்துக்கும் என் நிலைக்கும் மச்சு வீட்டுக்கும் குச்சுக் குடிசைக்கும் உள்ள தாரதம்மியம் இருக்கத்தான் செய்தது. சர்க்கார் அலுவலகத்தில் குமாஸ்தா வேலை செய்யும் நான் எங்கே? திவான் பகதூர் சங்கரலிங்க முதலியாரின் மகள் கமலம் எங்கே? என் தந்தை இருந்த வரை எங்களுக்கும் ஏராளமான செல்வம் இருக்கத்தான் இருந்தது. அப்போது — பத்து ஆண்டுகளுக்கு முன் — எங்கள் குடும்பம் பம்பாயிலேதான் இருந்தது. அங்கே வக்கில் தொழில் நடத்தி ஏராளமாகச் சம்பாதித்தார் என் தந்தை. தென்னாட்டி விருந்து குடியேறி, அவ்வளவு பெருமையுடனும், புகழுடனும் அவரைப்போல் தொழிலும் சம்பாத்தியமும் அடைந்தவர்கள் அந்தக் காலத்தில் அபூர்வம். ஆனால், விதி யாரையும் ஒரே சீராக இருக்க விடுவதில்லையே!

ஒரு நாள் என் தந்தை கிரிமினல் வழக்கு ஒன்றில் ஆஜராகிவிட்டுக் கோர்ட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார். எப்பொழுதும் அவர் மாலை வேளையில் காலாற நடந்து வீடு திரும்புவதுதான் வழக்கம். அநேகமாக, கட்சிக்காரர்களோ சிநேகிதர்களோ கூட வருவது உண்டு. ஆனால், அந்தக் குறிப்பிட்ட தினத்தன்று ஏதோ சதி செய்தது போன்று, யாருமே கூட வரவில்லை. தன்னந் தனியாகவே வந்து கொண்டிருந்தார், அவர். மாலை ஒளி மங்கியும் மங்காமலும் இருந்த அந்த வேளையில், யாரோ ஒரு விரோதி துளியும் சந்தடி செய்யாமல் பின்னால் வந்து 'படால்' என்று அவர் மண்டையில் அடித்து விட்டான். அப்பொழுது நினைவு தப்பி விழுந்தவர்தான். யாரோ சிலர் அனுதாபம் கொண்டு வீட்டில் சேர்த்தனர்.

மூன்று நாட்களுக்குப் பின்பே அவர் கண் விழித்தார். ஆனால், உற்றாரையும் உறவினரையும் அறியக் கூடிய பிரக்ஞையே அவருக்கு வரவில்லை. பிரமை பிடித்தவர் போலக் காணப்பட்டார். அவ்வப்போது, "ஐயோ, அடித்துவிட்டானே...வலி பொறுக்க முடியவில்லையே..." என்று வாய் குழறிக் குழறிப் பிதற்றுவதைத் தவிர வேறு பேச்சே இடையாது.

தொழில் மூலம் அவர் சேமித்திருந்த பணம் பூராவையும் செலவழித்து வைத்தியம் செய்தாள் என் தாய். பலன் பூஜ்யம்தான். என் தந்தை போய் விட்டார். கச்சிதமாகச் சென்று கொண்டிருந்த எங்கள் வாழ்வு தாறுமாறுகிச் சிதைந்து போய் ஏழ்மை வாய்ப்பட்ட

காங்கள். அதற்குப் பின் சென்னை யில் வந்து குடியேறினோம். கொஞ்ச நஞ்சம் இருப்பதைக் கொண்டும், அண்டை அயல் வீடுகளில் ஓடாக உழைத்தும் என் தாய் என்னை எஸ். எஸ். எல். ஸி. வரையில் படிக்க வைத்தாள். நான் குமாஸ்தா வேலையில் சேர்ந்தேன். அதுவரை நாங்கள் பட்ட கஷ்டங் கள்...!

இருபது ரூபாய் வாடகையில் இக்கட்டானதொரு இடத்தில் ஒன் டுக் குடித்தனம் செய்யும் எங்கள் இன்றைய நிலையைக் கண்டால், அழகும், பணமும், மிதப்பும், மதப் பும் கொண்ட கமலம் என்னை ஏறெடுத்தேனும் பார்ப்பாளா?

★

கமலத்தை அழைத்து வருவதற் காக பஸ்ஸில் சென்டிரல் ஸ்டேஷ னுக்குப் போய்க்கொண்டிருந்தேன். என் நினைவில் பழைய நிகழ்ச்சி ஒன்று காட்சியளித்தது.

மாதுங்காவில் ஒரு உறவினர் வீட்டில் கல்யாணம். வருவோரும் போவோருமாகக் 'கலகல' வென்று காட்சியளித்துக் கொண்டிருந்தது. கல்யாண வீடு. தென்னாட்டு நாக சுரமும் பாண்டு வாத்தியமும் முழங் கிக் கொண்டிருந்தன. ஒரே ஒலிக் கலவையாக அந்த வீட்டிலும், வெளியிலும், தெருக்கோடி வரையி லும் பரிணமித்திருந்தது. இங்கு அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்த மணப் பந்தலில் மணமகனும் மணப் பெண்ணும் கோடியுடுத்து, ரோஜா மலர் மாலை பூண்டு மணையில் உட்கார்ந்திருந்தனர். புரோகிதர் மந்திரங்களை வாய் உரக்க ஒலித்துக் கொண்டிருந்தார். மணமகன் அவ்வப்போது புரோகி தரின் நிர்ப்பந்தத்தின் பேரில் ஏதோ முணுமுணுத்தாலும், பெரும் பாலான நேரம் சும்மாவே இருந் தான். ஆனால், அவ்வப்போது கலியாணப் பெண்ணை நோக்குவ தும், பொருள் நிறைந்த புன்னகை பூப்பதுமாக இருந்தான். இடை யிடையில் தன் கையை அவள் பக்க மாகக் கொண்டுபோய், அவள் தொடையில் இலேசாகக் கிள்ளி விட்டுக் கையை 'விருக்' கென்று எடுத்துக் கொள்ளவும் தவற வில்லை, அவன்! இவற்றை யெல் லாம் யாருமே கவனிக்கவில்லை என்று அவன் எண்ணியிருந்திருக் கலாம். ஆனால், மணமக்களுக்கு எதிரில் அருகருகில் இழைந்தாற் போல் உட்கார்ந்திருந்த நானும் கமலமும் மட்டும் அவர்கள் இரு வரும் நடந்து கொள்ளும் முறை களையேதான் கவனித்துக்கொண்டி ருந்தோம்!

மணமகன் பெண்ணைப் பார்த்துப் புன்னகை பூத்த போதல்லாம், அவன் முகத்தை எப்படி வைத்துக் கொண்டிருந்தானோ அதே மாதிரி என் முகபாவத்தையும் மாற்றிக் கொண்டு, நானும் கமலத்தை பார்த் துச்சிரித்தேன். அவன் மணமகளின் தொடையைக் கிள்ளிய போதெல் லாம் நானும் கமலத்தைச் செல்ல மாகக் கிள்ளினேன். அப்போ தெல்லாம் கமலத்தின் முகத்தில் மலர்ந்த நாணத்தையும் முறுவலை யும் பார்க்க வேண்டுமே...!

ஆயிற்று; மணமகன் மணப் பெண்ணின் கையில் கங்கணத்தை இழுத்துக் கட்டிக் கொண்டேயிருந் தான். நான், கமலத்தை நேராகப் பார்க்காமல் என் வலது கையை அவள் பக்கமாகக் கொண்டுபோய் அவள் கையைப் பிடித்து மெல்ல இழுத்தேன். இழுத்த இழுப்பில் என்னையறியாமலேயே அவள் மணிக்கட்டில் என் கை பலமாக அழுந்திவிட்டாற் போலிருக்கிறது. அடுத்த விநாடியே கமலம் "அத் தான்!" என்று வேதனை கலந்த குர லில் உரக்கக் கத்தினாள். உடனே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஒரு வளை உடைந்து அவள் கையில் அழுந்திச் சிறிது ரத்தம் முத்தாக அரும்பியிருந்தது.

அவள் கத்தியதைக் கேட்டு நான் மட்டும் அவளைத் திரும்பிப் பார்க்க வில்லை; கலியாணப் பந்தலில்

இருந்த அத்தனை பேருமே என்னவோ ஏதோ என்று திரும்பிப் பார்த்தனர். "என்னம்மா கமலம்? என்ன நடந்துட்டதம்மா?" என்று கேடுக்கொண்டே கமலத்தின் தந்தையும் ஓடோடி வந்தார்.

இதையெல்லாம் கண்டபோது எனக்குத் 'திக்' கென்று படபடத்தது கமலத்தின் கையில் ரத்தத்தைப் பார்த்த பயத்தில் ஒரேயடியாக அரண்டுவிட்டேன், நான். கமலம் என்னைக் காட்டிக்கொடுத்து விடுவாளோ என்று நினைத்து மிரள மிரள விழித்தேன். ஆனால், அவள் அப்போது எவ்வளவு பெருந்தன்மையுடன் நடந்து கொண்டாள்! 'ஒண்ணும் இல்லேப்பா. கை வளையை நெரடிண்டே யிருந்தேன். அது திடீர்னு ஒடைஞ்சி போயி கையிலே பொத்திண்டிடிச்சு! அதனாலே நோவு எடுத்தது; கத்தினேன்...?" என்று சமயோசிதமாகச் சொல்லிவிட்டு, மாசு மறுவற்றதோர் புன்னகை பூத்தாள், என்னை நோக்கி!

ஆனால், அங்கே உட்கார்ந்திருந்த கிழவர் ஒருவர் மட்டும் என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டார்; "அதெல்லாம் பொய் சங்கரலிங்கம். பக்கத்திலே இருக்கானே பயல். அவன் உங்கள் பெண் கையிலே கங்கணத்தை கட்டறதாக நெனச்சிகிட்டு 'மெய்ம் மறந்துபோய் கை வளையை அமுத்திப்பிட்டான். அது உடைந்துதான்...பயல் பலே கைகாரப் பயல்! ஆரம்பத்திலிருந்தே பார்த்துக்கிட்டுதான் வர்ரேன். என்னென்ன சில்விஷமங்களெல்லாம் பண்றான் தெரியுமா...? உங்கள் பெண் மட்டுமென்ன? லேசுப்பட்டவளா? அவளும் அதுக்கெல்லாம் ஈடு கொடுத்துக்கிட்டுதானே

Phone : 61552 Estd : 1926 Grams : Butter

அன்றும் இன்றும் என்றும்

சிறப்புடன் விளங்குவது

B. V. ராவ் & கோ.,

மனங்கவரும் மாயவரம் வெண்ணைக்கும்
மணங்கமழும் கோபிமார்க் நெய்யிற்கும்

மற்றும் பச்சரிசி, புழுங்கலரிசி, அப்பளம், வற்றல்
முதலியவைகளுக்கும் புகழ் பெற்று
விளங்குவது

கிளைகள் :

போன் : 87327
57, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

போன் . 71823
28, தெற்கு மாட வீதி
மைலாப்பூர், சென்னை.

வந்திருக்காள்! மணையிலே உட்காந்திருக்கிற மாப்பிள்ளையும் பெண்ணும் சரஸம் செய்யறத்துக்கு இந்த ஜோடி கிட்டேதான் பிச்சை வாங்கிக்கணுமாக்கும்!'' என்று அந்தக் கிழவர், ஆரம்பம் முதல் வளையல் உடைத்த சம்பவம் வரை, மணமக்களைப் பார்த்துப் பார்த்து நாங்கள் நடந்து கொண்ட முறைகளையெல்லாம் பற்றிக் கிண்டலும் கேலியுமாகச் சொல்லிக் கலியாணப் பந்தலில் இருந்த அத்தனை பேர்களையும் சிரித்துச் சிரித்து வயிறு வலிக்கும்படியாகச் செய்து விட்டார். அத்துடன் நிற்கவில்லை அவர்; ''சங்கரலிங்கம்! இந்தப் பையனும் பெண்ணும் சரியான ஜோடி. ரெண்டு பேரையும் கட்டிப் போட்டுடுங்க!'' என்று முத்தாய்ப்பு வைத்துவிட்டுத் தமது பேச்சை நிறுத்தினார்.

அதற்குக் கமலத்தின் தந்தை கூறிய பதில் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ''அதுதான் எப்பவோ முடிவாகிப் போன விஷயமாச்சே? பயகையிலே கங்கணத்தைக் கட்டிட்டானில்லே! இனிமேல் தாலி ஒண்ணுதானே பாக்கி? அதையும் அவனேதான் கட்டியாகணும்! இல்லாட்டி சும்மா விடுவேனு நான்...?'' என்று, முகத்திலே நீண்டு சுருண்டிருந்த மீசையை மேலும் முறுக்கிக் கொண்டு ஒரு விதப் பொய்க் கோபத்துடன் என்னைப் பார்த்து முஷ்டியைக் காண்பித்ததையும், அதைக் கண்டு கலியாணப் பந்தலே ஒரு குலுங்குக் குலுங்கிச் சிரித்ததையும், அதே சமயத்தில் புரோகிதர் ''கெட்டி மேளம், கெட்டி மேளம்'' என்று கத்தியதையும், அதையடுத்து 'ஜண ஜண' வென்று கெட்டி மேளமும் பாண்டு வாத்தியமும் விண்ணதிர முழங்கியதையும் நினைத்தால் அப்பப்ப! இப்பொழுதும் உள்ளமும் உடலும் எவ்வளவு பூரிக்கின்றன! சின்னஞ்சிறு வயதில் நிகழ்ந்ததுதான் என்ருலும், அந்த நிகழ்ச்சிதான் என்னைக் கமலத்துடன் எவ்வளவு இறுக்கமாகப் பிணைத்துவிட்டது!

சென்டிரல் ஸ்டேஷனில் ரெயில் வழக்கம்போல் தாமதமாகத்தான் வந்து நின்றது. நான் ஷர்ட்டையும் பாண்ட்டையும் சரி செய்து கொண்டேன். பிளாட் பாரத்தில் பரபரப்புடன் நடந்து பெட்டிகளை ஆராய்ந்தேன்.

எத்தனையோ பேர் அந்த ரெயிலிலிருந்து இறங்கினர். அப்படி வந்தவர்களை வரவேற்கத்தான் எவ்வளவு பேர் கூடியிருந்தனர்!

நானும் ஒவ்வொரு கம்பார்ட்மெண்டிலும் தலையை நுழைத்து மிகுந்த அக்கறையுடன் கமலத்தைத் தேடினேன், நான் கற்பனை செய்திருந்த அந்த அதிரூப சுந்தரியைக் காணவேயில்லை.

கூட்டம் பெரும்பாலும் கலைந்து போய்விட்டது. ஒரு சிலரே பாக்கி. அவர்களில் சொகுசான உடையுடுத்தி ஒரு நங்கை தயங்கித் தயங்கி, அங்கும் இங்கும் பார்த்த வண்ணம் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்ததைக் கண்டேன். அவள் முகம்!...

'பாவம்' என்று என் உள்ளம் அவளுக்காக அனுதாபப் பட்டது 'யௌவனம் திரண்டு உருண்டு பல கோணங்களில் அழகு பிரதிபலிக்க வேண்டிய இந்தக் கன்னியை ஏன்தான் அம்மைத் தழும்புகள் இப்படி அலங்கோலமாக்கி விட்டனவோ? என்று நெஞ்சார வருத்தப்பட்டேன்.

இவையெல்லாம் சில விநாடிகளுக்குக் குள்ளாகவே நிகழ்ந்தவை தாம். மறுகணம் என் சிந்தையிலே ஒரு மின்னல் பளிச்சிட்டது.

'ஒருகால் இவள் கமலமாக இருக்கலாமோ...?.

'சீச்சீ! இவள் கமலமாக—இருக்கவே முடியாது'' — இப்படியொரு மின்னல் எழுந்து முன்னதை இடைவெட்டு வெட்டியது. இருந்தாலும் மனம் சமாதான மடைவதாகக் காணும். 'எதற்கும் இவள் யார்? என்று விசாரித்து அறிந்துவிடலாமே?' என்று தீர்மானித்து

அவளை அணுகினேன். “எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்?” என்று கேட்டேன்.

“பம்பாயிலிருந்து வருகிறேன்... உறவினர் ஒருவர் வந்திருப்பபார் என்று எதிர்பார்த்தேன்...” என்று இழுத்தபடி கூறினாள், அவள்.

“உங்கள் பெயர்...,கமலா...?”

“ஆமாம்; கமலம்தான். நீங்கள்.. ரவியா?'

நான் திகைப்பில் ஆழ்ந்து திணறினேன். “ஆம்” என்றேன், தடுமாறிய குரலில்.

அவள் முறுவலித்தாள். என்னால் அப்போது பதிலுக்கு முறுவல் புரிய முடியவில்லை. போர்ட்டர் ஒருவனை அழைத்து அவனிடம் சாமான்களை ஒப்படைத்தேன். இருவரும் மௌனமாகவே நடந்து பிளாட்பாரத்தைக் கடந்தோம். ‘வந்தவளைக் குசலம் விசாரிக்காமல் இருப்பது மனிதத் தன்மை அன்று’ என்று என் அறிவு கூறிற்று. “ஊரில் எல்லோரும் சுகமா?” என்று பெரும் பிரயாசையுடன் கேட்டேன். “உம், இங்கே அத்தை சுகந்தானே?” என்று அவள் திருப்பிக் கேட்டாள்.

இருவரும் டாக்ஸியில் அமர்ந்தோம். அது ஓசை யெழுப்பிக் கொண்டு புறப்பட்டது.

என் மனம் கொந்தளித்தது. அவள் வெளிப்புறத்தை நோக்கிக் கொண்டிருந்தாள். நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் மனத்தில் எண்ண அலைகளின் கொந்தளிப்பு சிறுகச் சிறுக அடங்கிவந்தது. அவள் சற்றும்



அழகில்லாமல் தோற்றமளித்தது முதலில் திடுக்கிடச் செய்தது என்றாலும், இப்போது அவளிடம் அநுதாபம் தோன்றிப் புதுவெள்ளம் போல் பெருக்கெடுத்தது. அவளுடைய அன்பு உள்ளம், அடிநாளைய நிகழ்ச்சிகள் எல்லாம் நினைப்புக்கு வந்தது என் அயர்வைப் போக்கிப் புத்துணர்வு பெருக்கின.

"கமலம்..."

அவள் திரும்பிப் பார்த்தாள்.

"உன்னைப் பார்த்ததும் அடைந்த அதிர்ச்சி அடங்க இத்தனை நேரம் ஆயிற்று" என்றேன், சிரித்தபடி.

அவளும் சிரித்தாள்; "ஆச்சரியம்!" என்றாள்.

"எது கமலா ஆச்சரியம்?"

"உங்கள் அதிர்ச்சி அடங்கினது தான்."

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"பெற்றவர்களுக்கே சகிக்காத வெறுப்பை இத்தனை விரைவில் சகிக்கக் கூடிய உங்கள் மனநிலை..."

"வெறுப்பு!... உன்னிடமா? ஹூம்! உன் தங்கமான குணத்தையும் அன்பு உள்ளத்தையும் நான் அநுபவித்த மாதிரி யாருமே அநுபவத்திருக்க முடியாதே!"

இதைச்சொல்லும்போது என்னையும் அறியாமல் என் குரல் சற்று உரக்கவே ஒலித்தது. என் நாக்கு பேசவில்லை; உள்ளமே பேசியது.

அவள் கண்களிலே நீர் முத்துக் கொப்பளித்து 'டால்' அடித்தன. "அப்படியானால் என் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு விடலாமோ?" என்று நம்பிக்கையும் ஆர்வமும் தொனிக்கும் குரலில் கேட்டாள் அவள்.

"என்ன உன் அபிப்பிராயம்?"

"சேவாசதனத்தில் சேர்ந்து பணியாற்றலாம் என்றுதான் வந்தேன். என் போன்ற குரூபிகளுக்கும் மற்றுமுள்ள அபாக்கியவதிகளுக்கும் அதுதானே வாழ்க்கையில் சொர்க்கம்?"

"ஓகோ?... உன் திட்டம் அதுதானா?"

"அப்படி எண்ணிக்கொண்டு தான் வந்தேன்."

"இப்போதும் அதைத்தான் செய்யப் போகிறாயா?"

"இல்லை."

"பின்?"

"நீங்கள்தான் அந்த உத்தேசத்தை மாற்றிவிட்டீர்களே! புதிய அத்தானாக மாறி இருப்பீர்கள் என்று எண்ணினேன். இல்லை. எனக்கும் வாழ்க்கை உண்டு என்கிறீர்கள்..."

அவள் சொல்லிலும் குரலிலும் தான் எத்தனை வகையான உணர்ச்சிகள் கொந்தளித்தன!

"சத்தியமாக!"—என் வாயிலிருந்து வந்த வார்த்தை முடிவதற்குள் அவள் கை என் வாயைச் 'சட்' டென்று பொத்தியது; 'விட்டேன்'னு சொல்லுங்கள்" என்று அவள் கூறினாள்.

"விட்டேனாவது? இனி மேல் ஒரு கணமும் விடேன்!" என்று விரைந்து அவள் கையைப் பற்றிக் கொண்டு என் கன்னத்திலே வைத்து ஆதங்கம் தீர அழுத்திக் கொண்டேன். அந்தக் கையை 'விருட்' டென்று விடுவித்துக் கொண்ட கமலம், "நான் பாக்கியசாலி அத்தான்!" என்று உணர்ச்சி குமுறியிடும் குரலில் கூறிவிட்டு, நீண்டதோர் பெருமூச்சுவிட்டு நெட்டுயிர்த்தாள். அப்பொழுது அவள் இருப்புக் கொள்ளாமல் தவித்த அந்த இன்பத் தவிப்பை வருணிக்க வார்த்தைதான் உண்டா...?

★

டாக்ஸி என் வீட்டிற்கு முன் வந்து நின்றது. நானும் கமலமுமாக எங்கள் ஜாகைக்குள் நுழைந்த போது, உண்மையில் புதிதாக மணமாகி கிருகப் பிரவேசம் செய்தது போன்ற எண்ணம் தோன்றி என்னை மெய்ம் மறக்கச் செய்தது.

Nutrine மிட்டாய்கள்

சுவை மிகு நியூட்ரைன் டாபிகள்

நீங்கள் ஆசையுடன் வைத்துக்கொள்ள விரும்பும்
அழகான டின்களில் கிடைக்கின்றன.

நியூட்ரைன் டின்களில் நிறைய **டாபிகள்** கிடைக்கின்றன.
காரணம், டின் முழுவதும் டாபிகளால் நிரப்பப் படுகின்றன.
அரை குறையாக நிரப்பப்படுவதில்லை.

நியூட்ரைன் கன்பெக்ஷனரி கம்பெனி (பி) லிட்.,
சித்தூர், ஆந்திர பிரதேசம்

வாசகர்களே!

உங்கள் வாழ்க்கையின் சமீப எதிர்காலத்தைப் பற்றி இரண்டு கேள்விகளுக்கு நமது "கணபதி" ஜோஸ்யர் இனாமாகப் பதில் தருகிறார்.

இதோ, மேலிருக்கும் "ஸ்ரீ மகா கணபதி" மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி. உச்சிஷ்ட மகா கணபதியாகும். இவரை ஆராதித்து உபாஸனை செய்துவரும் நமது "கணபதி ஜோஸ்ய"ரின் வாக்கு மிகவும் பலிதமாகவே இருக்கிறதென்று அனைவரும் அனுபவத்தில் கூறுகிறார்கள். ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ள வாசகர்கள் மட்டும் கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து தனித்தாளில் கேள்விகளையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். ஜாதகம் இருந்தால் அவசியம் அனுப்பி வைக்கவும். கூப்பன் இல்லாது வரும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. அந்தந்த மாதக் கூப்பனை பூர்த்தி செய்து பிரதி மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும். பின்னர்வரும் கூப்பன் கவனிக்கப்படமாட்டாது.

—ஆசிரியர்.

இங்கே கூப்பனைக் கத்தரிக்கவும்.

1960 ஆகஸ்ட் மாதக் கூப்பன்

என் சமீப, எதிர் காலத்திய 2 கேள்விகளைத் தனித்தாளில் எழுதி இத்துடன் வைத்துள்ளேன்.

என் பெயர்...

தற்போதைய விலாசம்...

உத்தியோகம்...

கேள்விகள் எழுதின தேதி...

,, ,, நேரம்.........................—.......................

நான் விரும்பும் புஷ்பம்...

108-க்குள் நான் கூறும் எண்.......................................

(நக்ஷத்திரம் தெரிந்தால்)...

என் பிறந்த நக்ஷத்திரம்...

என் தற்போதைய வயது...

கூப்பன் அனுப்ப வேண்டிய விலாசம்:

கணபதி ஜோஸ்யர், c/o "மாலா"

சதர்ன் அவின்யு, ஆழ்வார்பேட்டை, மதராஸ்-18.

சார்வரி ஸ்ரீ

ஆவணி மாத ராசி பலன்

(கணபதி ஜோஸ்யர்: 18. ப்ராம்மணத் தெரு, ஸைதாப்பேட்டை, சென்னை-15)

மேஷ ராசி: அசுவதி: பரணி: கார்த்திகை முதல் பாதம். தேக சுகம் திருப்திகரமாக யிருக்கும். தனது முயற்சியாலும், பௌருஷத்தா லும். கஷ்டங்களைக் குறைத்துக்கொண்டு, நிம்மதி பெறலாகும். காண்ட ராக்ட் போன்ற ஸ்ரமமிருந்தவர்கள் இம்மாதம் ஆபரேஷன் செய்துக் கொண்டு, பார்வையைப் பெறுவார். தனவசதி ஓரளவு அதிகமாக உண்டானாலும், உதார குணத்தால் வந்த தெல்லாம், உடனுக்குடனே சிலவு செய்துவிடுவீர். உத்யோகம் மூலம் சிறு ப்ரயாணங்களிருக்க லாம். வ்யாபாரத்தில், கூட்டாளி மூலம் லாபமதிகமாகும். தொழிலில், சேவகர்கள் ஒத்துழைப்பும், உற்சாகமும் மாத பிற்பகுதியில் அதிகம். ஸ்பெகுலேஷன். லாட்டரி, பந்தயம் மூலம் ஓரளவு சுபபலனிருக்கும். நூதனமாக ஏஜென்ஸி, காண்ட்ரார்க்ட் எடுக்கலாம். சீக்ரமே திருப்திகர மான லாபம் கிடைக்கும். விஜயதசமியில் நூதன தொழில் ஆரம்பிக்க, இப்பொழுது முதலே யத்தனிக்கவும். விவாஹம் சிலருக்கு நடைபெ றும். சிலர் ஆனியில் மணம் புரிந்திருந்தாலும், இப்பொழுதே கூடி வாழ் வார். விவகாரத்தில் வெற்றியை எதிர்பார்க்கலாம். மனைவீடு கட்ட ஏற்பாடுசெய்யவும் மாடு முதலிய அடையவும், வாகனம் புதிப்பிக்கவும் மாத முடிவு நன்று. வெளியூர் சென்ற புத்ரர்கள் திரும்பி வரவும். தம் பிக்கு இடப் பெயர்ச்சியும் ப்ரமோஷனுமிருக்க, மனைவிக்கு தேக சுகம் சற்று பாதிக்கப்படும். பிதாவிற்கு இனி எதிர்ப்பும் ஏமாற்றமும் தடை யும் தாமதமும் இராது. ஸகலமும், ஒவ்வொன்றுய் கைகூடி வர ஆரம் பம்.

ரிஷப ராசி: கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் ரோஹிணி: மிருக சீரிஷம் 1, 2 பாதங்கள் தேக சுகம் திருப்திகரமாக யிராது. அலைச்சலும் உழைப்பும் அதிகம். ஓய்வு குறைவு. ஸஹோதரர்களுடன் பகைக்க நேரும். அல்லது அவர்கள் மூலம் சிலவோ ஏமாற்றமோ மன வேத னையோ யிருக்கும். தனம் முடங்கும்–ஓரளவு நெருக்கடியுமிருக்கும் உத் யோகத்தில் வரும்படி அதிகமாகாவிட்டாலும் பொறுப்பு அதிகம், வெறுப்பு உண்டாகும். தொழிலில் சேவகர்கள் அடிக்கடி ரஜாவில் போவதும், நூதன சேவர்களைக் கொண்டு ஸ்ரமப்படவும் நேரும், வ்யா பாரத்தில் சென்ற மாதமிருந்த லாபம் இராது. ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் திடீரென நஷ்ட மேற்படலாம். கடனேறவும், கடன்காரர் அடிக்கடி நிர்ப்பந்தம் செய்யவும் எதிர்பார்க்கலாம். விவாஹ விஷயமாக செய்யும் யத்தனங்கள் ஓரளவு பலிதமாகும். விவகாரம் நீடிக்கும். தாமதமுண்டு. மனை, வீடு வாங்க முயற்சி செய்வார். ஆனால் பலித மாக ஓர் அயனம் கழிய வேண்டும். மாடுகள் வாங்கினாலும், பலன் குறைவே. உற்றார் உறவினர் க்ஷேத்ராடனம் செய்வார். உமது உதவி நாடுவார். தம்பிக்கு வேலை மாறும் அதன் மூலமும் சிலவு செய்ய நேரும். மாதாவின் தேக சுகக்குறைவும் புத்ரர்கள் விரோதித்துக் கொண்டு பிரிந்து போகவும், மனைவி நோயால் வருந்தவும், உற்சாகம் குறையும் பிதாவிற்கு யத்தனங்கள் பலிக்க தாமதம். வெற்றியுண்டு. சுப பலன் திருப்திகரமாக யிருக்கும்.

மிதுன ராசி: மிருக சிரீஷம் 3, 4 பாதங்கள் திருவாதிரை புனர் பூசம் 1, 2, 3 பாதங்கள். தேக சுகமேற்பட்டு வரும்; சுகாரத்தை கவனித்து வரவும். நயத்தினலேயே ஜயம் பெறலா மென்பதை உணர்ந்து, கோபம் வரினும், நாவையடக்கி, விரோதமேற்படா வண்ணம் நடந்து கொள்ளவும். சிலர் முதலில் சண்டையிட பின்பு சமானத்துடன் இருப்பார். தனவசதியுண்டாகும். உறவினர் உதவுவார். கடன் குறையும். தொல்லை விலகும். உத்யோகத்தில் மேலதிகாரி நட்பு உண்டாகும். சிலர், மேன்மையும் நன்மையும் அவடவர். அரசாங்க மூலம் நற்செய்தி பெறலாம். லைஸென்ஸ் முதலியன பெறலாம். நம்பினேர் கைவிட மாட்டார். தொழில் மூலம் விருத்தியடைய கூட்டாளிகள் நூதன முயற்சிகள் செய்வார். லாபமதிகம். வ்யாபாரம ஓங்கும். வரிமூலம் ஸ்ரமம் குறையும். எழுத்து; ஏஜென்ஸி. காண்ட்ராக்ட் கமிஷன் மூலம் திருப்திகரமான வருமபடி யிருக்கும். ஸ்பெகுலேஷன் மாறிமாறி பலனளிக்க மொத்தத்தில் மாத முடிவில் லாபமே. விவாஹ விஷயமாக யத்தனங்கள் செய்தால் உடனுக்குடனே பலிதமேற்படும். வீவகாரம் ஜயம். வாஹனம் வாங்கவோ, மனைவிடு வாங்கவோ ஏற்பாடு செய்யலாம். உற்ருர் உறவினர் கூடி மகிழவும், தன வ்ரயமும் இருக்கும். நூதன ஆடையாபரணங்கள் வாங்கவும் நேரும். தம்பியின் தேக சுகம் கெடுவதாலோ தாய் க்ஷேத்ராடனம் செய்வதாலோ, பிரிந்து சில வாரங்களிருக்க நேருவதாலோ ஏற்படும் அதிகச் சிலவை சமாளிக்க, புத்ரர் நூதனமாக உத்யோகம் கிடைத்து. தனம் சம்பாதிப்பார் அல்லது ஸ்பெகுலேஷன் மூலம் கிடைக்கும். மனைவியின் யத்தனங்கள் பலிக்க, பிதாவிற்கும் மிகுந்த லாப மேற்படும்.

கடக ராசி; புனர்பூசம் 4ம் பாதம்; பூசம். ஆயில்யம் தேக சுக முண்டு. கண் கோபால் சிலர் வருந்துவர் சிலருக்கு பித்தத்தினல் மயக்க மிருக்கும். இருப்பினும் தனது பணியை சரிவர புரியக்கூடும். யத்தனம் பலிதமாக, மாத மத்தியில் லாப முண்டாகும். பணமுடையிராது. வசதிகள் எதிர்பார்க்கலாம். உத்தியோகத்தில் தற்காலிகமாக கிடைத்தமேற் பதவி முடிவடைய, பழைய ஸிரந்தர உத்யோகம் செய்ய நேரும். அதிகாரம், மதிப்பு, வரும்படி குறையும் சிலவு அதிகமாக செய்ய நேரும். தொழில் மூலம் இனி ஆறுமாதங்கள் லாபம் எதிர்பார்க்கக் கூடாது. படும் பாட்டிற்கேற்ப பலன் பெறுவது கஷ்டம். வ்யாபாரம் மந்தமாயிருக்கும். நஷ்டம் ஏற்படலாம். ஸ்பெகுலேஷன், பந்தயம், லாட்டரி இவைகள் இனி சிலவு இனங்களில் ஒன்று. சார்வரி ஆண்டு முழுவதும் இதை மறப்பது உத்தமம். எவருக்கு ஜனன காலத்தில், கன்னி, விருச்சிகம் தனுசு, மகரம், மீனம் இவ்விடங்களில் செவ்வாயிருந்தோ, அவர்கள் அறவே மறக்க வேண்டும். விவாஹத்திற்கு யத்தனிப்பதின் மூலம் பெற்ருேர்களுக்கு ஏமாற்றமும், விரயமும், தாமதமும். மன வேதனையுமிருக்கும். நூதன கிரஹப்ரவேசம் செய்யலாம். குடியிருக்கும் வீட்டின் சொந்தக் காரருடன் ஏற்படும் மனத்தாங்கலால், வீடு மாறலாம். விவகாரம் நீடிக்கும். தம்பியின் பிரிவும், மனைவியின் தேக சுகக் குறைவும், பலஹீனமும். முன் கோபமும் நிம்மதியை கெடுக்கும். நிதானமும், பொறுமையும் தெய்வ வணக்கமும் அவசியம்.

ஸிம்ம ராசி: மகம், பூரம், உத்ரம் 1ம் பாதம். மாத ஆரம்பத்தில் தேக சுகக்குறைவு. அப்பால் ஸெக்யமே. மன வேதனையோ, குழப்பமோ, இனி இராது பண நெருக்கடி குறையும். பலர் உதவி தானே வரும். ஸ்ரமமின்றி ஸெக்யத்தையடைய முடியும். உத்யோகத்தில் மேலதிகாரி நட்பும், பெரியவர்களின் ப்ரியத்தால் பெருமையும் உற்சாகத்தை யளிக்கும். வ்யாபாரத்தில் இனி கூட்டாளியால் நஷ்டமோ,

தமிழ்நாடு ஆவணக காப்பக

உதாரச் சிலவோ இராது. லாபம் திருப்திகரமாக இருக்தும். தொழில் முன்னேற்றமடைய, அரசாங்க உதவியும், தகப்பனாரின் அதரவும், சேவகர்களின் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கலாம். ஏஜென்ஸி. காண்ட்ரக்ட், கமிஷன் மூலம் அதிக லாபமினி ஆரம்பம். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் திடீரென தனப்ராப்தி. விவாஹ விஷயங்கள் கைகூடி வரும். விவகாரம் மூலம் நிம்மதி கெடாது. மேலும் இரண்டு மாதங்கள் துடர்ந்தாலும், தைரியத்தாலும் தெய்வானுகூலத்தாலும் ஜயம் உண்டு. மனை வீடு வாங்கவோ, கட்டவோ சகாயம் கிடைக்கும். ஆடுமாடுகள் மூலமும் தனவிருத்தி. தாயின் மூலம் சிலவு ஸஹோதரர்களுக்கு கஷ்டம் விலகும். புத்ரர்கள் வெளியூர் செல்ல நேரிடலாம். மனைவியின் மூலமிருந்த வேதனை குறையும். பிதாவிற்கு தேக சுக மேற்பட, யத்தன பலிதம்; கார்யசித்தி, தன லாபமிருக்க, இன்னும் சில மாதங்கள் மேன் மேல் நன்மையும் மேன்மையும் உண்டு என்பது உண்மை.

கன்னி ராசி. உத்ரம் 2, 3. 4 பாதங்கள். ஹஸ்தம் சித்திரை 1, 2 பாதங்கள். தேக சுகம் ஓரளவு திருப்திகரமாக யிராது அதிகமாக பணிபுரிய நேரும். யோஜனையுமதிகம். உற்சாக மிருந்தாலும் உழைப்பு அதிகம். சிறு பிரயாணங்களும் அடிக்கடி செய்ய நேரும். இடப் பெயர்ச்சியும், வீடு மாறவும் நேரலாம். எதிர்ப்பும் தாமதமும் ஒழியும். சகல கார்யங்களும் கை கூடிவரும் என புலப்பட்டாலும், இஷ்ட சித்திக்கு கஷ்டப்பட்டபட்டேயாக வேண்டும். உத்யோகத்தில் மேன்மையும் மதிப்பு மிருக்தும். அதிக பொறுப்பு முண்டு. ஆதரவுமிருக்கும். தொழிலில் சில ஸ்ரமங்களிருந்தாலும், பொருட்படுத்தாது, பாடுபட்டு. முன்னேற்றமடைவீர். வ்யாபாரத்தில், அதிக தனம் போட்டு. சரக்குகளை சேர்ப்பார். இவைகள் மூலம் இரண்டு மாதங்கள் கழித்து தன லாபம் திருப்திகரமாக யிருக்கும் ஜவுளி வியாபாரிகள் இப்பொழுது வாங்கி சேர்த்தால் தீபாவளி சமயத்தில் எதிர்பாராத லாபம். விவாஹம் தீர்மானிக்கப்படும். சிலருக்கு நடைபெறும். விவகாரம் நீடிக்கும். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் நஷ்டம் வீடு வாங்கவோ. நேரும். கடனேறும். புதிதாக ஏஜென்ஸி, கமிஷன் உத்யோகம், காண்ட்ராக்ட் எடுக்கலாம். நாளடைவில் பலிதமுண்டு. போட்டி பரீக்ஷைக்கு ப்ரயத்னம் செய்யலாம். பாஸாகவும் ப்ரமோஷன் பெறவும் பகவானருளுண்டு. தம்பிக்கு எதிர்ப்பு ஒழிந்து, மதிப்பு ஓங்கும். மாதாவின் தேக சுகம் கெடும். பிதாவிற்கு உதாரச்சிலவும் உற்சாகமுமுண்டு.

துலா ராசி; சித்திரை 3. 4 பாதங்கள். சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள். பாதமுடிவு வரை தன வசதி குறையும் அதிகச் சிலவும், அனுவசிய விரோதமும். குடும்பத்தில் சச்சரவும், நண்பரை பகைக்கவும் நேரும். கோபத்தையும் ரோசத்தையும் விட்டுவிட்டு, காரியத்தில் கருத்தாயிருப்பது நன்று, மாதமுடிவில் நற்பலன் உண்டாகும். தேக சுகம அப்பொழுதே திருப்திகரமாக இருக்கும் உத்யோகத்தில் மாத ஆரம்பத்தில் வெறுப்பு இருக்க. மாதமுடிவில் விருப்ப முண்டாகும். மேலதிகாரியின் நட்பும் ஆதரவும் அதனால் நற்பலனும் ஸெப்டம்பர் முதல் எதிர்பார்க்கலாம். வேலையினால் இடம் மாறுதல் என ஏற்கனவே உத்ரவிருந்திருப்பின். அந்த உத்தரவை வாபீஸ் பெற்று, நிரந்தரமாகயிருக்கச்செய்து நிம்மதியை யளிக்கும். தொழிலில் பல கஷ்டங்களிருந்திருந்தாலும் எல்லாம், ஒவ்வொன்றாக மறைய முன்னேற்றத்திற்கு ஆரம்பம் வ்யாபாரத்திற்கு தன வசதி கிடைக்கும். கூட்டாளி முன் வந்து, தைர்யமாக உழைப்பார் உதவுவார். உற்சாகமளிப்பார். ஸ்பெகுலேஷன் லாட்டரி மூலம் அதிகம் எதிர்பார்க்கலாகாது. ஏஜென்ஸி காண்ட்ராக்ட் மூலம் முன்பு கஷ்ட நஷ்டங்களிருந்தாலும் அவைகளை மறக்கும்படி இனி

லாப மேற்பட்டுவரும், விவாஹ விஷயங்களை தீர்மானிக்கப்பட்டு, நடைபெறும். விவகாரம் துரிதமாக விசாரணை செய்யப்பட்டு ஜயத்தை யளிக்கும், வீடு ரிபேர் செய்யவோ அதிகமாக விஸ்தரிக்கவோ Air Condition செய்யவோ நேரலாம். வாகனம் service க்கு கொடுக்கப் பட்டு அதனால் இருந்த வேதனை குறையும். தம்பியின் விரோதம் மறை யும். மாதாவிற்கு தன வசதி ஏற்பட தேக சுகம் சற்று பாதிக்கப்படும் புத்ரர்கள் இனி பரீக்ஷை தேறி மேல் வகுப்பிற்கு முயல்வார். தற்காலிக மாக வேலை கிடைக்கலாம்.

விருச்சிக ராசி: விசாகம் 4ம் பாதம் அனுஷம் கேட்டை ஏழரை ஆண்டு சனி நீடித்தாலும் அதன் வேகம் குறைந்து சுப பலன் நடைபெற ஆரம்பம். நிம்மதி கெடாமல் நிதியும் கூடிவரும். இது வரையிருந்த நிலை ஒழிந்து நிதானமாக பணி புரிவார். நிரந்தரமாக ஒற்றுமையுடன் கூடி வாழ இனி நன்று. தேத சுகமேற்பட்டுக் கொண்டு வர உழைப்பும் அதிகமாக செய்தி வர நற்பலனும் தாமதமின்றி ஏற்பட உற்காக முண் டாகும். உத்யோகத்தில் மேலதிகாரி நட்பு ஏற்பட்டுவரும். சீக்கிரம் மேன்மை யுண்டென்று உணரலாம். தொழில் முன்னேற்றமடையும் கூட்டாளிக்கு மிக நல்லகாலமானதால் உமது உழைப்பால் அவருக்கும் அதிக தன வசதி ஏற்படும் வ்யாபாரம் வலுவடைய வலுவில் உதவி கிடைக்கும். ஏஜென்ஸி காண்ட்ராக்ட் கமிஷன் எடுக்கலாம். படும்பாடு மிக அதிகம். அதற்கேற்ப லாபமிராது. ஸ்பெகுலேஷன் லாட்டரி பந் தயம் மூலம் கலந்த பலனே. மனைவிக்கு லாபமதிகம். நூதன ஆடை யாபரணம் பெறவும் கடன்காரர்களுக்கு கடனைத் திருப்பிக் கொடுத்து கவலை விலகவும் நன்று. விவாஹம் தீர்மானிக்கப்படலாம், ஆனால் நடைபெற தைமாதம் வரை தாமதிக்கலாம். விவகாரம் துடங்கலாம். கடைசியாக வெற்றியே காண்பீர். வீடு கட்டிய கடனடைக்கவோ நூதன வீடு கட்டவோ தன வசதியும் வாஹனம் பெறவோ மாற்றவோ எதிர்பார்க்கலாம். நீண்ட நோயால் வருந்தியவர் தெய்வானு கூலத் தால் கஷ்டப்பட மாட்டார்கள். அரசாங்கச் செய்தி மூலம் நன்மை யுண்டு வரி வசூல் செய்வோர் மூலம் ஸ்ரமமிராது மாடு முதலியன கஷ்டத்தை யளிக்கும் திடீரென நோயால் வருந்தும் சாகுபடி திருப்தி கரமாக பலனை யளிக்குமெனும் நம்பிக்கை யுண்டாகும்,

தனுர் ராசி: மூலம் பூராடம் உத்ராடம் 1ம் பாதம் தேக சுக மேற் பட்டுக்கொண்டு வரும். இடையூறும், இன்னலும் இனி இராது. அன்பு பெறவும், இன்ப சுகம் பெறவும், அளவிற்குமேல் அதிகச் சிலவு செய்ய நேரும். தனவசதி யுண்டாகும். ஆதரவும் உதவியும் கிடைக்கும் மதிப்பு உயரும். உத்யோகத்தில் உயர்வு உண்டாக தாமதமினி இராது. எதிர்ப்பும் ஏமாற்றமும் இராது. வேதனையளித்த மேலதிகாரி ரிடயர் ஆய்விடுவார். அல்லது அவருக்கு கஷ்ட காலமாரம்பிக்க, தன் நிலைமையை உணர்ந்து, கடுகடுப்பு மறைந்து, கஷ்டத்தைக் கொடுக்க மாட்டார். தொழிலில் முன்னேற்றமடைய இம்மாதம் முதல் பாடுபட் டால் சில மாதங்களில் சுப பலன் உண்டு. வ்யாபாரம் நூதனமாக விஜயதசமியில் ஆரம்பிக்கலாம். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் ஓரளவு லாப மேற்படும். ஏஜென்ஸி, காண்ராக்ட் கமிஷன், மூலம் நாளடைவில் தனவிருத்தி யுண்டாகும். அரசாங்கச் செய்தியால் திடீ ரென லாப மேற்படும். நூதன கிருஹப் பிரவேசம் செய்யலாம். க்ஷேத் ராடனம் இருக்கக் கூடும். நூதன பொருள் வாங்க நேரும் புத்ரர்கள் மூலம் அதிகச் சிலவு மாதாவிற்கு தேக சுகமும், பிதாவிற்கு நோயுமிருக் கும். இருவருக்கும் பண நெருக்கடி தீரும்.

மகர ராசி: உத்ராடம் 2, 3, 4 பாதங்கள் அதிக அலேச்சலும், உழைப்பும், பல சிறு பிரயாணங்களும் ஆரோக்கியத்தை சற்று பாதிக்கும். ஆனல் அதனல் அடையும் அதிக லாபத்தாலும், ஜயத்தாலும், உற்சாகமும் குதூகலமும், தேக சுகத்தை பற்றி சிந்திக்க விடாது. உத்யோகத்தில் உயர்வு உண்டாக உயர்ந்த பதவியில் உள்ளோர் உதவி புரிவார். காம்ப் அடிக்கடி போக நேரும். வீடு மாறவும் நேரலாம். வ்யாபாரம் வலுவடைய அதிக தனம் போடவேண்டும். பழைய கடனை த் தீர்க்கவும், நூதனச் சிலவை செய்யவும், கடன் அதிகம் வாங்க நேரும். கஷ்டமின்றி பெற முடியும. தொழிலில் சேவகர்கள் ஒத்துழைப்பு அதிகம். சீக்ரம் முன்னேற்ற முண்டாகும் எனும் நம்பிக்கை ஏற்படும். மாத மத்தியில் ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் லாபம். மற்ற காலத்தில் நஷ்டமே. ஏஜென்ஸி காண்ட்ராக்ட் கமிஷன் மூலம் இரண்டு மாதங்கள் தனம் முடங்கும் நூதன முயற்சிகள் செய்ய ஆரம்பிக்கலாம். வீடு கட்டவோ, வாஹனம் பெறவோ. மாதா மூலம் சுப பலனடையவோ, மாத முடிவு மிக நன்று. விவாஹம் சிலருக்கு திடீரென நடைபெறும். சிலர் பிரிந்தவருடனும் கூடி வாழ நேரும். விரோதம் மறையும். விவகாரம் ராஜியில் முடியலாம். நஷ்டமிராது. தம்பிக்கு யத்தன பலிதம். தாய்க்கு தேக சுக மேற்படும். உற்சாகமதிகம். பிள்ளைகளின் கஷ்டம் விலக தாமதம். மனைவிக்கு நூதன பொருள்கள் சேர்க்கை உற்றூர் உறவினர் பிரியவோ, க்ஷேத்ராடனம் செய்யவோ நேரும். பிதாவிற்கும் சுப வ்ரயம். சந்தோஷம். கார்யசித்தி.

கும்ப ராசி: அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதங்கள், தேக சுகம் திருப்திகரமாயிராது. ஓரளவு பாதிக்கப்படும். தனவசதி ஏற்படும். பண நெருக்கடி குறையும். உண்மை நண்பர்கள் உடனுக்குடன் உதவ உற்சாக முண்டு. உத்யோகத்தில், தனது முயற்சியாலும், சாமர்த்யத்தாலும், மனே திடத்தாலும், கஷ்டமில்லாமல், மேன்மையடைய முயல்வார். தொழில் முன்னேற்ற ஏற்பாடாகும் சோம்பேரி சேவகர்கள் ஒழியவும், சாமர்த்யமாகவும் நுட்ப புத்தியுடனும் பணிபுரிவோர் கூடவும் நேரும். வ்யாபாரத்தில் முடங்கிய தனத்தைப் பெறவும், திடீரென அரசாங்கச் செய்திகளாலும், தனது அறிவினலும் அதிக லாபம் பெற முடியும். ஸ்பெகுஷேன் லாட்டரி பந்தயம் மூலம் நஷ்டமிராது. காளடைவில் வெற்றியும் லாபமும் ஏற்பட்டுக்கொண்டு வரும். மாத முடிவு நன்று. ஏஜென்ஸி கமிஷன் காண்ட்ராக்ட் எடுக்கலாம் மாத முடிவு நன்று. வருஷ முடிவில் மிகுந்த லாபம். மார்கழியில் வர

வாசகர்களுக்கு விண்ணப்பம்.

ஜோஸ்ய கேள்விகள் நூற்றுக்கணக்கான வாசகர்களிடமிருந்து வருகின்றன. மிக மனவேதனையுடன் எழுதும் சிலருக்கு இதுவரை இலவசமாக நேரிலேயே பதிலளித்தோம். மற்றும் ஓர் சிலருக்கு மாத்திரம் அச்சிட முடிகிறது. இனி பதில் விவரமாக கேள்விகளுக்கு வேண்டுமானல் 1 ரூ மணியார்டர் 'கணபதி ஜோஸ்யர்'க்கு நேராக அனுப்பவும். கூப்பனை வைத்துக் கேள்வியுமனுப்பவும். சக்தியற்றவர்கள் மாலா மூலம் பதிலைப்பெற்று உண்மையைப்பெற வேண்டும் என்பதே எமது நோக்கம்.

கணபதி ஜோஸ்யர்,

13, ப்ராமணத் தெரு. சென்னை-15.

வேண்டிய சுப பலனுக்கு இப்பொழுதே ஏற்பாடு செய்யலாம். விவாஹம் இம்மாதம் நிர்மானிக்கப்பட்டு தை அல்லது சித்திரையில் நடைபெறக் கூடும். விவகாரம் துடங்கும். துடரும். அப்பால் நஷ்டமின்றி தீரும். மனை முதலியன மூலம் சிலவு தம்பிக்குப் ப்ரயாணம். மாதாவிற்கு இடையூறு. புத்ரர்களுக்கு கஷ்டப்பட்டு கடைசியில் ஜயம். மனைவிக்கு இடப்பெயர்ச்சி. பிதாவிற்கு ஏமாற்றமோ, கஷ்டமோ இனி இராது.

மீன ராசி: பூரட்டாதி 4ம் பாதம் உத்ரட்டாதி. ரேவதி. தேக சுகம் மிக திருப்திகரமாயிருக்கும். மஹான்கள் தரிசனமும், பெரியோர் சேர்க்கையும், உபந்யாஸக் கேள்வியும், உற்றார் உறவினர் கூடுவதும், உற்சாகத்தையும் நிம்மதியையும், குடும்பத்தில் குதூகலத்தையும் காட்டுகிறது. தன வசதி ஏற்பட, பண முடை மறைய, கஷ்டம் குறைய இஷ்டம் நிறையும். விரோதம் விலகும். நஷ்டமிராது. உத்யோகத்தில் உயர்வும், தொழிலில் மேன்மையும், வ்யாபாரத்தில் முன்னேற்றமும். யத்தன பலிதமும், கார்ய சித்தியும். இடப்பெயர்ச்சியும். சிறு பிரயாணமும், பரீக்ஷை தேறவும், நண்பர் உதவவும், எண்ணம் பூர்த்தியாகவும் எதிர்பார்க்கலாம். ஸ்பெகுலேஷன் மூலம் லாபம். போட்டியில் ஜயம். விவகாரம் வெற்றியுடன் முடிந்து விடும். விரோதியின் பலம் குறைந்துவிடும். உமது நண்பர் உமக்கு உதவுவதால் விரோதி தோல்வியடைவார் விவாஹம் நடைபெறலாம். தன் நாடு விட்டு, வெளி நாடு செல்ல யத்தனித்தால். பலிதமுண்டு. Scholarship பெற முடியும். நூதன பொருள்களைப் பெற ஏற்பாடு செய்யலாம். நிலம் வாங்கவோ, வாஹனம் பெறவோ முயற்சிக்கவும். தம்பிக்கு கஷ்டம் தீர சில மாதங்கள் கழிய வேண்டும். மாதா பிரிய நேரும். புத்ரர்களுக்கு சிலவு கடுமை. திருட்டுக் கொடுக்க நேரலாம். மனைவி தன் உறவினரைக் காண ப்ரயாணம் செய்ய நேரும். பிதாவின் கஷ்டம் ஒரு விதமாய் முடிவடைகிறது. இனி நன்றே.

நமது கணபதி ஜோஸியர் வெளியிட்டுள்ள புத்தகங்கள்
சில காபிகளே கைவசமுள்ளன.
தேவையானவர்கள் :—

"பாலா"

13, ப்ருமணத் தெரு. : : சைதாப்பேட்டை
சென்னை 15லிருந்தும், ஹிகின்பாதம், சுதேசமித்திரன் புக்ஸ்டாலிலிருந்தும் பெறலாம் :

ஜோதிடம் விஞ்ஞானமே முதல் பாகம்	Rs. 2/-00
மணமும் மணவாழ்க்கையும் (விவாஹ பொருத்தம் பார்க்க)	Rs. 2/-50

தபால் சார்ஜ் ப்ரத்யேகம்
மாலா கூபன் வைத்தனுப்பினால் தபால் சார்ஜ் இல்லை.

மாடர்ன் அட்ரலாஜிகல் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்
(மைலாப்பூர் பிராஞ்சில்)

நூதன மாணவர்களுக்கு ப்ரத்யேகமாக போதிக்க ஏற்பாடாயிருக்கிறது. நூதனமாக சேரலாம்.
பிரதி ஞாயிறு மாலை 3மணி முதல் 5மணி
P. S. High Schoolல் நடைபெறும்
சேர விரும்புவர் அங்கேயே வரலாம்

உங்கள் அருமை மகளுக்கு
நீங்கள் தரக்கூடிய
அன்பளிப்பு வைர மோதிரமே
வைரங்கள்
ஒரு பெரிய முதலீடு.
அவைகளை வாங்குவதற்கு
முன்னால் சோதித்துப் பாருங்கள்.
வைரங்களின் தரத்தை கண்டறிய உம்மிடியாரின் ஷோரூமுக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள். இலவசமாக இதை செயல் முறையில் செய்து காட்ட தயாராக இருக்கிறோம்.
உம்மிடியார்
உம்மிடி ராமய்யா செட்டி, குருஸ்வாமி செட்டி & கோ
23லிருந்து 25, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை
VRG

கேள்விகளுக்குப் பதில்

கணபதி ஜோஸ்யர்

[ரூ 1/- அனுப்பி பதில் கோருபவர்கள் கேள்விகளையும் ரூபாயையும் கூபனையும் சேர்த்து, ஜோஸ்யருக்கு நேராக அனுப்பவும்]

ராஜலெஷ்மி சென்னை-2

தங்கள் ஜாதகத்தில் 2, 6, 10க்கு உடையவர்கள் மூவரும் ரிஷப நவாம் சத்தில் வீற்றிருப்பதால், விவசாய இலாகாவில் முயற்சி செய்தால், 1960 நவமபரில் வேலை கிடைக்கும். அதுவரை பணக்கஷ்டமிருக்கும்.

சாமினுதன் கும்பகோணம்

உமக்கு தற்பொழுது கேது புக்தி நடைபெறுகிறது. கார்த்திகை முதல் சுக்ர புக்தி. 2. 4. 9, 11 க்குடைய வர் தசை புக்தி நடைபெறப் போவதால் முடங்கிய தனத்தைப் பெறவும், விவகாரமின்றி சமாதான முறையிலேயே நஷ்டமின்றி லாபம் பெறவும் நேரும்.

ப்ரேமா கோயம்பத்தூர்.

உமக்கு 6-ல் இருக்கும் சனியின் புக்தி முடிந்து, 7 10 க்குடைய புத புக்தி வருவதாலும் சந்திரனுக்கு 11ல் புதனிருந்தாலும். இனி கணவருடன் மனஸ்தாபமிராது. விரோதம் நீடிக்காது. நட்புண்டாகும். டிஸம்பரில் வந்து சேர்வார். அதன் பின்பே இல்லற வாழ்க்கையில் இன்ப முண்டு.

நரசிம்மன் சேலம் டவுன்

உமது குழந்தையின் கன்னியா லக்னத்திற்கு 7ல் செவ்வாயும் 6ல் கேதுவுமிருக்க செவ்வாய் தசை கேது புக்தி நடைபெறுவதால் உற்ருர் உறவினரை விட்டு விலக நேரும். பூரட்டாதியில் கேது இருந்தால் வியாழக்கிழமை வெளியேறியிருப்பார். சீக்ரமே சுக்ர புக்தி வருவதால், தானே திரும்பி வருவார். அன்று பரணி நக்ஷத்ர தினமாக இருக்கும்.

சுந்தரம் மதராஸ்-12

அவிட்டம் 4ம் பாதம் தாமதமும் வேதனையும் இதுவரை இருந்திருக்க வேண்டும். ஆவணியிலேயே மணமகளை தேர்ந்தெடுக்க நேரும். தை மாதம் மணம் புரிவீர்.

கல்யாணி திருநெல்வேலி

உமக்கு அதிகப்படிப்பு வராது. சாரீரம் மத்திமமாகவே யிருக்கும். சரீரம் திடமாகயிருக்கக் கூடும். ம்ருதங்கம் அல்லது வயலின் கற்றுக் கொள்ளலாம் சங்கீத ஞானம் அதிகமாக ந்யாய மிருக்கிறது.

ரமணி கரூர்

7½ ஆண்டு சனி முடிவடைகிறது. தொடர்ந்து படித்து வாரும் பரீக்ஷை தேறும். 1961ல் மணம் புரியவும் நேரும். மனைவி தனமும் வந்து சேரும். சித்திரை முதல் மிக நன்று.

சேஷாத்ரி மன்னுர்குடி

கடன் தொல்லை தீர; நீர் நீர்வளம் மிகுந்த நிலத்தை விற்க வேண்டியதுதான். விஜய தசமிக்குப் பின்பே கைகூடி வரும். கவலை வேண்டாம்.

மணி கோபிசெட்டிபாளையம்

சுக்ரனும் சூர்யனும் செவ்வாயும் வலுவடைந்து ஜீவன ஸ்தானத்திலிருப்பதால் ரெயில்வே தொழிற் சாலையில் வேலை கிடைக்கும். சூர்ய தசை சுக்ரபுக்தி மாசி மாதம் ஆரம்பம். சுக்ரன் வீட்டில் சூர்யன் நக்ஷத்ரம் கார்த்திகையில் சூர்யன் சஞ்சரிக்கும் பொழுது மே மாத முடிவில் உத்யோகம் ஏற்படலாம்.

தொடர் கதை

அத்தியாயம் 4

அன்று வீடு திரும்பும்போது மான்விழிக்கு இதயத்தில் பெரும் பாரம் நிறைந்திருந்தது. அதே போல் கந்தவேலனும் சுமக்க முடியாத அளவுக்கு வேதனையைக் கொண்டுத்தான் வந்தான்.

சமையற்காரரிடம் இருவரும் தனித்தனியே "எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்று கூறிவிட்டனர். சமையற்காரர் அந்த வீட்டில் பல வருடங்களாக இருப்பவர். அந்த வீட்டின் மகாலட்சுமியான கோதையம் மாளின் இன்முகத்திற்கும், கனி போன்ற வார்த்தைக்கும் மதிப்பு வைத்து கஷ்டமோ, நஷ்டமோ, துன்பமோ துயரமோ எவற்றையும் பொருட்படுத்தாமல் காலந்தள்ளி வந்தார். திடீரென இருபது பேருக்குச் சாப்பாடு என்பார் கண்ணபிரான். நொடியில் தயாரித்துவிடுவார் சமையற்காரர்.

அப்படியெல்லாம் உற்சாகத்துடனிருந்த சமையற்காரருக்கு வரவரத் தெம்பு குறைந்தது. அவருக்கு வயதாகிய வந்த காரணம் ஒரு புறமிருந்தாலும் அந்த வீட்டிற்குப் பொறுப்பான எவரும் இல்லாத காரணத்தால் அவர் வேதனையுற்றார். எசமானர் இப்படி வீட்டைக் கவனிக்காமல் சுற்றுவது அவர் உள்ளத்தே பயங்கரமொன்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. மான்விழியும், கந்தவேலனும் சிறு வயதாயிருக்கும்போது அந்த வீட்டில் சேர்ந்தவர். மரியாதையும், பண்பும் அறிந்த அந்தக் குழந்தைகளின் முகத்தைப்பார்த்தே அவர் தன் சிரமத்தையெல்லாம் மறப்பார். கோதையம்மாள் எல்லா நலன்களும் பெற்ற பாக்கியசாலி என்று பெருமையடைவார்.

ஆனால், அந்தக் கோதையம்மாள் திடீரென ஒரு நாள் இறந்து விட்டாளே. அந்த அம்மாளுக்கு அப்படி யொன்றும் திடீரென முடிவு ஏற்பட்டுவிடாதே என அன்றே சந்தேகித்தவர். அவர் உள்ளச் சந்தேகத்தை யாரிடம் கூற முடியும். அந்த அம்மாள் இறந்த பிறகு அவர் அந்த வீட்டில் வேலை செய்ய வேண்டிய அவசியமே இல்லை. அந்த இரு சுடர் விளக்குகளின் முகத்தைப் பார்த்தே அங்கே தொடர்ந்து வேலை செய்ய மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார். அவருக்கு கண்ணபிரானைக் கண்டாலே பிடிப்பதில்லை. ஒரு நாள் மான்விழியின் பிறந்த நாள் வந்

தது. அந்த நாளில் தாயில்லாப் பெண்ணுக்குத் தன்னுலான அன்புக் காணிக்கையைச் செலுத்த விரும்பி சுவையான விருந்தைத் தயாரித்திருந் தார் அவர்.

கண்ணபிரான் எதேச்சையாகச் சாப்பிட வந்தார். விருந்தின் சுவை அவரை மயக்கியது. சாப்பிட்டு முடிந்தவுடன் சமையற்காரரைக் கூப் பிட்டு ஒரு டிபன் பாத்திரத்தில் எடுத்துக் காரில் கொண்டுவைக்குமாறு கூறினர். சமையற்காரருக்குப் புரிந்துவிட்டது. விருந்துச் சாப்பாடு மரகதம் வீட்டிற்குச் செல்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். அவ ருக்குத் துளிக்கூட இஷ்டமில்லை. என்ன செய்வது? கந்தவேலனிடம் மெல்ல அவர்து கருத்து வேற்றுமையைத் தெரிவிக்க விரும்பினர். பிறகு யோசித்தார். அவர் மனதில் வேதனையை வளர்ப்பானேன், என நிறுத் திக் கொண்டார்.

ஆனல் அவர் இதயத்தில் சோர்வு பொங்கிக் கொண்டு வந்தது. அந்த வீட்டுப் படகு அதிக நாள் ஓடாது என்பது அவருக்குத் தெரிந்து விட்டது. வீட்டிலே உணவு சமைக்கச் சரிவரப் பண்டங்கள் இல்லாவிடி னும் முணுமுணுக்காமல் இயன்றதைச் செய்து போட்டு பசி அந்த வீட் டிற்குள் நுழையாமல் செய்து வந்தார்.

இரவு ஒன்பது மணி ஆனவுடன் டம்ளரில் பசும்பால் கொண்டு போய் கந்தவேலனுக்கும், மான்விழிக்கும் அவர் கொடுத்திருக்கிருர் ஒரு சமயம். காலையில் ஓவல்டின்; பிஸ்கோத்து; மாலையில் பழச்சார். இப் படியெல்லாம் ஒரு காலத்தில். இப்போது.

மான்விழியும், கந்தவேலனும் தனித்தனியே வந்து 'சாப்பிடவில்லை சாப்பிடவில்லை' என்று கூறிச் சென்றதைக் கேட்டவுடன் அவருக்கு ஒன் றுமே புரியவில்லை "குழந்தே ஏன் சாப்பாடு வேண்டாம் என்றே" என்று கூறிக் கொண்டே மெல்ல மாடிப்படிக் கட்டுகளில் ஏறிச் சென்ருர் சமை யற்காரர்.

ஸ்விட்ச் போட்டவுடன் பளிச்சென எரிந்து இரவைப் பகலாக்கும் அந்த வீட்டில் இருள் குடிகொண்டிருந்தது. அவருக்கு அந்த இருட்டு புதியது. மான்விழியைக் கேட்கச் செல்லும் அவசரத்தில் அவருக்கு படிக்கட்டுகள் சரிவரத் தெரியவில்லை. முதுமையும், பார்வைக் குறை யும், இருளும் ஒன்று சேர்ந்தமையால் அவர் கால்கள் தள்ளாடின. கால் வழுக்கியது. தடதடவென உருண்டு விழுந்தார்.

எவரோ படிக்கட்டில் உருண்டு விழும் சப்தம் கேட்டவுடன் மான் விழி சட்டென மாடியிலிருந்து ஹரிகேன் விளக்குடன் ஓடிவந்தாள். அவளுக்கும் அந்த இருள் பயங்கரமாகத் தோன்றியது. சமையற்காரப் பெரியவர் உருண்டு விழுந்த ஓசை அந்த இருளில் அவள் நடுக்கத்தை அதிகரித்தது.

"அண்ணு அண்ணு" என்று கூவினள் மான்விழி. அன்று தன் அண் ணனுடன் பேசக்கூடாது; ஒருவருடனும் பேசக் கூடாது; சாப்பாடும் வேண்டாம் என்று மாடியறைக்குச் சென்று படுத்தவள் 'தடதடார்' என்ற ஓசை கேட்டவுடன் கையில் விளக்குடன் ஓடோடி வந்தாள். இருளில் மின்மினிப் பூச்சி பறப்பதுபோல் தோன்றியது ஹரிகேன் விளக்கு. இதையே வைத்துக் கொண்டு காலந்தள்ளுபவர் இருக்கிருர்களே.

ஹிந்தி வாத்தியாரம்மா செளந்தரவல்லி வீட்டில் மட்டுமென்ன! செளந்தரவல்லி தனி வீடு எடுத்திருந்தாள், அவர்கள் வீட்டில் யார்யார் இருக்கிருர்கள் என்பது தெரியாது. திண்ணை. திண்ணையை ஒட்டி

ரேழி. ரேழிக்கருகே யுள்ள நிலைப்படியில் திரைச்சீலை. அதிலே வித விதமான பூ. அதைத் தாண்டியவுடன் 'ஸ்கிரீன்' வைத்து மறைத்த ஒரு கூடம். நடுவில் முற்றம். வாயிலை ஒட்டிய அறை. அந்த அறைக் குள்ளேயே சௌந்தரவல்லி, மான்விழியை அழைத்துச் சென்றாள். அந்த அறையில் 'பவர்லைட்' ஒன்று தொங்கியது. சுவரில் விடி விளக்குக்காக நீல நிறக்கண்ணாடி போட்ட சிம்னி விளக்கு. இருவர் படுக்கக் கூடிய கட்டில். அதில மெத்தை விரிக்கப் பட்டிருந்தது. தலையணை இரண்டு. 'குட்கைட்' என்ற பூ வேலை தலையணையில். சுவரில் பலவிதப் படங்கள்.

மான்விழிக்கு ஒரு படத்தைப் பார்த்தவுடன் வெட்கம் கூட வந்து விட்டது. ஒரு பெண் குளிக்கும் அறையில் இருக்கிறாள். தொட்டியிலி ருந்து ஒரு செம்பிலே நீர் எடுக்கிறாள். ஐயோ; அந்தக் காட்சியையெல் லாம் சித்திரமாகத் தீட்ட வேண்டுமோ?

மான்விழி அங்கிருந்து எழுந்து கூடத்திற்கு வந்து விட்டாள். அந்த வீட்டிற்குப் பின் கட்டு ஒன்று இருக்கிறதுபோலும். அங்கிருந்து யாரோ பெண்கள் சிரித்துப் பேசும் குரல் கேட்டது.

அவ்வளவு பெரிய வீட்டிலும் அவர்கள் மின்சார விளக்கு இல்லாம லேதான் சௌகரியமாக வாழ்கிறார்கள். நமக்கு ஒரு நாளிலேயே இவ் வளவு வேதனை வந்துவிட்டது. வெளியே விளக்கு இல்லாத சோதனை: உள்ளத்திலோ மாலை நிகழ்ச்சியின் வேதனை. கந்தவேலன் எதற்காக மரகதம் வீட்டிற்குச் சென்றான். அவன் செல்வதைப் பாரத்தவுடன் தனக்கு ஏன் அப்படித் தலையைச் சுற்றியது? சௌந்தரவல்லி தாங்கிக் கொள்ளாவிடில், உபசரணைகள் செய்திருக்காவிடில். அந்த அம்மை யாருக்குத்தான் எத்தனை வாஞ்சை. தாயினும் மேலாக அவர்கள் எப்படி யெல்லாம் அன்பு வார்த்தைகள் பேசினார்கள்—

ஆனாலும் அவள் மனது சரியாக வில்லை. அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு வீடு நுழைந்து கால்மணி நேரம் கூட ஆகவில்லை. சமையற்காரர் கீழே விழுந்து விட்டாரே. அவளுக்கு ஒன்றும் புரிய வில்லை 'அண்ணா அண்ணா' என்று கூப்பிட்டாள். கந்தவேலன் பேரில்



உமா பிக்சர்ஸாரின் 'சித்தூர் ராணி பத்மினி'யில்
ஒரு இக்கட்டான கட்டம்.

அவளுக்குத் திடீரென ஏற்பட்ட கோபத்தை அவனைக் கேட்டு விசாரித்து அறிந்து சொல்வதன் மூலம் தீர்த்துக் கொள்ளலாமே! அப்படித் தோன் றிற்றோ இல்லையோ—அவளுக்கு அப்போது அண்ணனை அழைக்க வேண்டும்போல்தானிருந்தது. கீழே விழுந்தவர் எழுந்திருக்க வில்லை.

அந்த வீட்டில் அவள்மீது தாயன்பைச் செலுத்தி வந்தவருக்கு ஆபத்து என்றால் அவள் பதறாமல் என்ன செய்வாள்?

'அண்ணா அண்ணா' என்ற குரலின் எதிரொலி அந்த வீட்டின் நாலு திசையிலும் எழுந்தது. தோட்டத்தின் மேடையிலே ஏதோ யோசனையி லாழ்ந்திருந்த அவன் செவிகளில் தங்கையின் கூக்குரல் ஏதோ ஆபத் தென்பதைத் தெரிவித்து ஒலிக்கவே கந்தவேலன் உள்ளே ஓடினான்.

ஏதோ காட்டின் நடுவே உள்ள பங்களா—அங்கே மினுக் மினுக் கென்று விளக்கு வெளிச்சம் தெரிந்தது என்று கதைகளில் படிப்பது போன்று அவனுக்கே பூம்பொழிலில் இரவுத் தோற்றம் தெரிந்தது.

மாடிப்படிகளினின்று உருண்டு கிடந்த சமையற்காரரையும், அவ ரருகே பயந்து போய் நிற்கும் மான்விழியையும் கண்ட கந்தவேலன், "என்ன நேர்ந்தது, என்ன நேர்ந்தது?" என்று பதறிக் கேட்டான்.

"எனக்கே தெரியவில்லை அண்ணா; சமையற்கார மாமாவின் குரல் கேட்டது. பிறகு தடதடவென்று யாரோ உருண்ட ஓசை கேட்டது; ஓடி வந்தேன், இவர் கீழே விழுந்திருக்கிறார். அண்ணா, விளக்கு எப்போது வரும்?" என்று பீதியும், பரிவும் கலந்த குரலில் கேட்டாள்.

கந்தவேலன் ஒன்றும் பேசவில்லை. மான்விழியிடமிருந்து விளக் கைப் பெற்றுக் கொண்டு சமையற்காரரின் முகத்தருகே கொண்டு போனான். அவர் மயக்க முற்றிருப்பது தெரிந்தது.

"சீக்கிரம் தண்ணி கொண்டா" என்றான் கந்தவேலன் பரபரப் புடன்.

மான்விழி இங்கும் அங்கும் ஒருகணம் அலைந்து மெல்லத் தட்டுத் தடுமாறிச் சென்று டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்தாள். அவளுக்கு உதடும், நெஞ்சும் உலர்ந்து விட்டது. அந்த டம்ளர் ஜலத்தை ஒரு மடக்கு குடிக்கலாமா என்று கூடத் தோன்றியது.

கந்தவேலன் தண்ணீரை மெல்ல அவர் முகத்தில் தெளித்தான். கொஞ்சம் மின்சார விசிறியைச் சுழற்றிவிடு என்று கூறப்போனவன் சட்டென்று அடக்கிக் கொண்டு, "மான்விழி மெல்ல விசிறு" என்றான்.

சமையத்காரர் மெல்லக் கண் விழித்தார். மான்விழியும், கந்தவேல னும் அருகே கவலையுடன் இருப்பதைக் கண்டார். எழுந்திருக்க முயன் றார். ஆகா; முழங்காலுக்குக் கீழே 'வின்வின்' என்று வலிக்கிறதே. ஐயோ எழ முடியவில்லையே;

அவர் எழுந்திருக்க முயலுவதைப் பார்த்த கந்தவேலன் மெல்ல அவர் கையைப் பிடித்துத் தூக்க முயன்றான். "ஓஓ" என்று அவர் கூவினார். முழங்காலைச் சுட்டிக் காட்டினார். அவர் குறிப்பிட்டுக் காட்டிய இடத்தில் இரத்தம் கசிந்திருந்தது. அவரால் நிற்க இயலவில்லை.

"அம்மா, அம்மா" என்று வாய்விட்டு அலறினார். கந்தவேலன் சட் டெனப் புரிந்து கொண்டான். அவர் கால் எலும்பு முறிந்து விட்டது என்று.

மான்விழி இதைக் கேட்டவுடன் அலறினாள். "என்ன அண்ணா செய்வது?" என்று துடித்தாள்.

"மான்விழி பயப்படாதே." என்று சமையற்காரர் அந்த வேதனையி லும் மெள்ளக் கூறினார்.

கந்தவேலனும் மான்விழியைத் தேற்றி," நீ கொஞ்ச நேரம் தைர்ய மாக இரு மான்விழி. நாம் விரைந்து சென்று காரைக் கொண்டு வரு கிறேன். அப்பாவிடமும் இதைப் பற்றிச் சொல்ல வேண்டு மல்லவா? மாமா எவ்வளவு காலமாக நம் வீட்டில் இருக்கிறார். இவரை நல்ல நர் ஸிங் ஹோமில் சேர்த்தால் தானே நல்லது. அப்பாவை காரை ஓட்டிக் கொண்டு வரச் சொல்கிறேன்" என்று புறப்பட்டாள்.

தகப்பனாரிடம் கூறித்தான் காரைக் கேட்டு வாங்க வேண்டுமா என்று மான்விழி எண்ணினாள்.

தம்பி பொழுது விடியட்டுமே என்று சமையற்காரர் எண்ணினார்.

ஒருவராலும் வெளியே கூற முடியவில்லை.

*

கந்தவேலன் வேகமாக நடந்து சென்றான். அவன் மனத்தில் இப் பொழுது பழைய குழப்பம் ஏதுமில்லை. கால் முறிந்து போனவரை ஆஸ்பத்திரியில் சேர்க்கவேண்டும் என்ற நோக்கம் ஒன்றேதான். மரகதம் இருக்கும் தெரு நோக்கி விரைந்தான். மாலையில் அந்த வீட்டைப் பார்த் துக் கொண்டது எவ்வளவு நல்லதாகப் போயிற்று.

சே! மாலை-அந்த மாலை அவன் இதயவேதனையை அதிகப்படுத்திய மாலை. இங்கே பூம்பொழில் வாடுகிறது. ஜீவன் போனது போன்ற வீட்டின் ஒளி அணைந்து விட்டது. நான்கு புறமும் கடன் தொல்லை

உ.மா பிக்சர்ஸாரின் 'சித்தூர் ராணி பத்மினி'யில் ஒரு காட்சி.

அந்த வீட்டு மக்கள் வாடுகிருர்கள். சீரும், சிறப்பும் மிக வளர்ந்த அந்த வீட்டுப் பெண் வேலே தேடிச் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற முனேகிறது. இங்கு என்ன வென்ருல் பூம்பொழில் எசமானவர் சிரிப்பும், பாட்டும், கூத்துமாகச் சந்தோஷமாக இருக்கிருர்.

கல்யாணி ஆட. மரகதம்பாட கண்ணபிரான் அனுபவித்தவண்ணம் சபாஷ் போட்ட வண்ணமிருக்கிருர். அந்த வீட்டு வாயிற்படியேறிய கந்தவேலன் இந்தக் காட்சியை ஒருகணம் கண்டான். மறுகணம் அவனே யாரோ கழுத்தைப் பிடித்துத் தள்ளுவது போன்ற உணர்ச்சி. யாரும் தள்ளவில்லே: அந்த நிகழ்ச்சியின் வேதனே அவனேத் தள்ளியது. ஆனுல் ஆடுகிருளே அந்தப் பெண், அவளே ஒருமுறைத் திரும்பிப் பார்க்க வேண்டும் எனத் தோன்றியது அவனுக்கு. உள்ளத்தில் எழுந்த வேகம் அவன் தலேயைத் திருப்பவில்லே: "தந்தையே இது தான் முறையோ?" எனக் கூற வேண்டும் போலிருந்தது. அவன் கணம் கூட அங்கு நிற்கவில்லே. உடனே வந்த சுவடு தெரியாமல் திரும்பி விட்டான்.

மீண்டும் அந்த வீட்டிற்கு எட்டரை மணி வேளேயில். ஆம் போய்த்தானுக வேண்டும். மாடுபோல் உழைத்த, அந்த வீட்டிற்கு உணவு அளித்த அந்தப் பெரியவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற கடமை உணர்ச்சி உந்த அவன் விரைந்தான். அந்தத் தெருவில் கந்தவேலன் நுழைவதற்கும் அவனேத் தாண்டி அவன் தந்தை ஓட்டிச் செல்லும் கார் செல்வதற்கும் சரியாக இருந்தது. காருக் குள்ளிருந்து 'குப்பெ'ன்ற மல்லிகை மணம் வீசியது. அதைத் தொடர்ந்து சிரிப்பொலி. கார் மறைந்தது.

"அப்பா" என்ற அவன் கூவிய ஒலியை காரின் சப்தம் விழுங்கியது. அது கிளம்பிச் சென்ற புழுதி அவன் தோற்றத்தையே விழுங்கியது,

(தொடரும்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அழகிய கலர் அச்சு வேலேகளுக்கு

சிறந்த இடம்

ஸ்ரீ ஸுதர்சன் பிரஸ்

"காங்கிரஸ் பில்டிங்ஸ்"

111, மவுண்ட் ரோட், தேனும்பேட்டை

சென்னே-6

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

"ஜெய் ஹிந்த்!"

"தாத்தா!... நாளை எங்கள் பள்ளிக் கூடத்தில் சுதந்தர தினக் கொண்டாட்டம். அதற்கு நானும் விமலியும் போகப்போகிறோம். சுதந்திர தினக்கொண்டாட்டம் என்றால் என்ன தாத்தா?" என்று கேட்டுக்கொண்டே வந்து விமலியின் அருகில் உட்கார்ந்தான் சேகர்.

"சேகர், நீ மகா கெட்டிக்காரன்!...சுதந்தர தினத்தை நீங்கள் தெரிந்து கொள்வது மிக மிக அவசியம். கவனமாகக் கேளுங்கள்!" என்று கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார் பெரியவர்.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு நம் தேசம் சிதறுண்டு கிடந்தது. நாடெங்கிலும் அரசர்கள் பலர் இருந்தனர். அவர்களுக்கு அடங்கி சில குட்டி அரசர்களும், அவர்களில் சில பாளையக்காரர் களுமாக நம் நாட்டை ஆட்சி செய்தனர். அடிக்கடி இந்த அரசர் களுக்குள் போர் மூண்டன. ஒருவரை ஒருவர் பகைத்து விரோதி களாகி நாட்டை ஆண்டனரே தவிர, நல்லாட்சியைப் பற்றியோ, நாட்டின் சுபீட்சத்தைப் பற்றியோ, மக்களின் முன்னேற்றத்தைப் பற்றியோ அவர்கள் சிந்திக்க நேரமில்லை.

அது சமயம் ஆங்கில நாட்டிலிருந்த சில வியாபாரிகள் நம் நாட்டில் வியாபாரத்திற்காக வந்தவர்கள் நாட்டின் சிதறுண்ட ஆட்சியைக் கண்டு, அவர்களும் ஒரு ஆட்சியாளர்களாக மாறினார் கள். பிறகு இங்கிருந்த அரசர்கள் ஒருவருக்கொருவர் சண்டைபோடும் போது ஒருவருக்கு உதவி செய்து, அவரையும் அவருடைய ஆட்சி யையும் தங்கள் ஆட்சியின் அடிமையாக்கினார்கள்.

நாட்கள் செல்ல, செல்ல ஆங்கிலேய வியாபாரக் கம்பெனியின் ஆட்சி விரிவடைந்தது. நம் நாட்டிலிருந்த பெரிய, சிறிய அரசர்கள் யாவரும் கம்பெனியாருக்கு அடி பணிந்து நின்றனர்.

பிறகு பாரத தேசம் பூராவும் ஆங்கில ஆட்சி ஏற்பட்டது. இதை எதிர்த்து வடநாட்டில் ஜான்ஸி ராணி போர் புரிந்து வீர மரண மெய்தினார்.

தென்னாட்டில் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கில ஆட்சியை எதிர்த்து வீரப்போர் செய்தார். அவரும் ஆங்கிலேயரின் சூட்சியால் தூக்குமேடையில் வீரமணத்திற்கு முத்தமிட்டார்.

பிறகு, மக்கள் ஆங்கில ஆட்சியை விரட்ட முயற்சி செய்தனர். நாடெங்கிலும் சிப்பாய் கலகம் மூண்டது. அதில் பல இந்திய தேசப் பக்தர்கள், வீரர்கள் வீர சொர்க்கம் எய்தினர்கள்.

பிறகு வந்தே மாதரக் கட்சி தோன்றியது. பலர் சிறை சென்றனர், தியாகம் செய்தனர், உயிர் நீத்தனர், கப்பலோட்டிய வீரத் தமிழர், பாரதியார் போன்ற தலைவர்கள் அவ்வியக்கத்தில் பங்கு கொண்டனர்.

பாரத தேசமெங்கும் ஆங்கிலேயர் அடக்கு முறை ஆட்சி நடத்தினர்கள். இதனால் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. பஞ்சாப் படுகொலை போன்ற அநீதிகள் நாட்டில் நடந்தன.

காங்கிரஸ் மகா சபை இந்திய மக்களின் நல்வாழ்விற்காக ஆரம்பிக்கப்பட்டு, வெள்ளையரிடம் கோரிக்கைகள் சமாப்பித்து மகாநாடுகள் நடத்தி வந்தது. மகாத்மா காந்திஜீ 1920-ம் ஆண்டில் காங்கிரஸ் மகா சபையில் பிரவேசித்து அது முதல் காங்கிரஸ் மகா சபையை சிறந்த தேசிய சபையாக மாற்றினர். பல தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார். தேசமெங்கும், சத்யாக்கிரஹப் போரை ஆரம்பித்தார். அவருடைய மாபெருந் தலைமையில் இமய முதல் குமரி வரை மக்கள் ஒன்று பட்டு 'சுதந்திரம்' எங்கள் பிறப்புரிமை! என்ற முழக்கத்தைச் செய்தனர்.

மக்களின் கிளர்ச்சியை வெள்ளையர்—ஆங்கில ஆட்சியினர் ஒடுக்க பலவித சட்டங்களைத் திட்டினர்கள். இதனால் பலர் உயிர் நீத்தனர், தியாகம் செய்தனர், தேசத்திற்கே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். இப்போர் 1920—முதல் 1942—வரை நடந்தது. ஆங்கில ஆட்சி பாரத தேசத்தில் ஆட்டம் கண்டது.

பாரததேசத்தின் ஆட்சியை அதன் தலைவர்களிடம் ஒப்படைப்பதென திட்டமிட்டனர். அதன்படி 1947ம் வருடம் ஆகஸ்டு மாதம் 15-ம் நாள் ஆங்கிலேயர் பாரததேச ஆட்சியை இந்திய மக்களிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறினர்கள். அப்பொன்னுளே திருநாளாக நம் தேசமெங்கும் கொண்டாடப்படுகிறது. இத் திருநாள் நம் பிறப்புரிமையை நமக்குத் தருந்த நன்னுளாதலால் நாம் இதைக் கொண்டாடுகிரேம். உலகமெங்கும் நம் சுதந்தர முரசு இன்று முழங்குகிறது.

நீயும், விமலியும் நாளை பள்ளிக்குச் சென்று விழாவில் கலந்து கொள்ளுங்கள்! வாழ்க சுதந்தரம்! என்று கூறினர் பெரியவர்.

ஜெய் ஹிந்த்!

என்ற வீர வணக்கத்தைச் செலுத்திவிட்டு வீட்டிற்குச் சென்றனர். விமலியும் சேகரும்.

—சுப்பு

கலா மண்டபத்திலே கலை விருந்து

திருவல்லிக்கேணி என். கே. டி. கலா மண்டபம் ஜுலை 31ம் தேதி விளங்கிய சோபையும் அங்கு அன்று அமைந்த கலை விழாவின் சிறப்பும் வர்ணிப்புக்கு புறமபானவை. திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி சபையார் தங்கள் கட்டிட நிதிக்காக ஒரு அரிய கலை விருந்திற்குஏற்பாடுசெய்திருந்தனர். அதற்காக மிகசிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். வைஜயந்திமாலா அவர்கள் தனது நாட்டியாலயா மாணவிகளுடன் ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவை பாசுரங்களை நடன காவியமாக அமைத்து ஆடினார். அன்று கூடிய சபை ரஸிகர்கள் கொண்ட சபை. ஒவ்வொரு அம்சத்தையும் நன்கு ரஸித்து அநுபவித்தனர் குழுமியிருந்த ரஸிகர்கள்.

ஸ்ரீ ஆண்டாளைப்பற்றிய துதிப்பாடல்களோடு ஆரம்பித்தது நடனம். முதன் பாசுரமான மார்கழித் திங்கள் என்ற பாசுரம் நாட்டை ராகத்தில் அமைந்தது. பிறகு வையத்து வாழ்வீர்காள் என்ற பாசுரம், பிறகு 'ஓங்கி உலகளந்த' என்ற ஆரபிராகப்பாசுரம் பிறகு 'ஆழிமழைக் கண்ணா' என்ற வராளி பாசுரம் இவை நான்கிற்கும் வைஜயந்தி மாலா அவர்கள் அபிநயம் பிடித்தார். 'அவரது அபிநயங்கள் மூலம் பாடல்களின் பொருளை நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. ஆழிமழைக்கண்ணா'வில் வருணனை ஊர்ஜிக்க பிரார்த்திப்பது பாவபூர்வமாயமைந்தது. 'தூமணி மாடத்து' பாசுரத்திற்கு நாட்டியாலயா மாணவிகள் சிறப்பாக அபிநயம் பிடித்ததைக் குறிப்பிடவேண்டும். பேகட ராகத்தில் அமைந்த 'எல்லே இளங்கிளியே' என்ற பாசுரத்தில் வைஜயந்திமாலா அவர்களின் அபிநயம் பிரமாதம். அவருக்கு அநுசரணையாக நாட்டியாலயா மாணவிகளும் உடன் ஆடினார். பிறகு வந்த நந்தகோபன் மாளிகை மணிக்கதவம் திறக்கப் பாடிய பாசுரமும் நந்த கோபன், யசோதை. கண்ணன் முதலியவர்களைத் துயிலெழுப்பும் பாசுரமும் அபிநயம் பிடிக்கப்பட்டன.

'அங்கண்மா ஞாலத்து' பாசுரத்தையும் குறிப்பிட வேண்டும்.

குந்தலவராளியில் அமைந்த 'மாலே மணிவண்ணா' என்ற பாடலில் அபிநயங்கள் மிகச் சிறப்பாக அமைந்தன 'பாலன்னவண்ணத்து பாஞ்சசன்னியமே' அபிநயம் பிரமாதம். 'கூடாரை வெல்லும் என்ற

பாசுரம் சிகரமாயமைந்தது. பின்னணியிலே ஸ்ரீ வில்லிபுத்தூர் கோயில் கோபுரம் எழிலுடனமைய வைஜயந்திமாலா அவர்கள் அற்புத காட்சியளித்தார். இந்த பாசுரத்திற்குப் பின் வந்த சிட்டை ஸ்வரங்களைக் குறிப்பிட வேண்டும். 'சிற்றஞ்சிறு காலே'யிலே கோலாட்ட நடனம் சம்பிரதாயமாயமைந்தது.

'கூடாரை வெல்லும்' என்ற பாசுரத்தின் போது வைஜயந்திமாலா அவர்களது தோற்றம்.
படம் : சாமி

விழாவிற்குத் தலைமை வகித்த கனம் நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்ரமண்யம் அவர்கள் வைஜயந்திமாலா அவர்களை வெகுவாகப் பாராட்டினார். கலையை ஆத்மிகத் துறையுடன் பிணைத்து சேவைசெய்வதுபெரிய தொண்டு என்றார். திருப்பாவையில் மக்கள் கவனம் கொள்ள நடனம் பெரிதும் உதவுமென்றார் மினர்வா கல்லூரி முதல்வர் ஸ்ரீ ஏ. என். பரசுராமன் பேசுகையில் வைஜயந்திமாலா அவர்கள் தன் நடன மூலம் சர்வதேச புகழ்பேற்று விட்டதைக் குறிப்பிட்டார். ஸ்ரீ ஆண்டாளை சூடிக் கொடுத்த நாச்சியார் என அழைத்தால். வைஜயந்தி மாலா அவர்களை 'ஆடிக் கொடுத்த நாச்சியார்' என அழைக்கலாம் என்றார். இது போன்ற ஆத்மீகத் துறை சம்பந்தமான பாசுரங்களை பக்தி ரஸத்ததுடன் ஆடிக்காண்பிக்க வல்லவர் வைஜயந்திமாலா அவர்கள் தான் என்றார்.

சபைத் தலைவர் ஸ்ரீ எம். ஏ. ஸ்ரீநிவாஸன் வைஜயந்தி மாலா அவர்கள் கட்டிட நிதிக்கு ரூ 1001 நன்கொடை அளித் திருப்பதாகக் குறிப்பிட்டார். சபைக் காரியதரிசி பக்ஷி ராஜிகோபாலன் அவர்கள் பேசுகையில் மேற்படி கச்சேரிக்கு பதினைந்தாயிரத்திற்குமேல் வசூல் ஆகி யிருப்பதாகக் குறிப்பிட்டார். வைஜயந்தி மாலா அவர்களுக்கு சபையினர் தந்தத்தினாலான 'கீதோபதேச' பிரதிமையை பரிசாக அளித்தனர்.

★

அரிய நாடகம்

அமெச்சூர் நாடகக் குழுவினர்களுள் சிறந்தஸ்தானத்தை வகிக்கும் டாக்டர் ராமமூர்த்தியும் அவர் நண்பர்களும் சமீபத்தில் ரஸிக ரஞ்சனி சபையில் கல்கியவர்களின் 'பார்த்திபன் கனவை' நாடக ரூபத்தில் நடித்துக் காட்டினர். கதை வாசக நேயர்கள் நன்கறிந்ததே. மேலும் சமீபத்தில் கல்கியவர்களின் இவ்வரியபடைப்பு வெள்ளித் திரையிலும் வெளிவந்துவிட்டது.

இக்கதையிலேஜீவநாடியானபாத்திரம் மாமல்லர்என்ற நரசிம்மர்,சிவனடியாராக உருக் கொண்டு சோழ மன்னன்பார்த்திபனின் சுதந்திர சோழஅரசுகனவை நிறைவாக்குவதாகக் கூற அதன் மூலம் பல சம்பவங்கள். அவைகளுள் முக்கியமானது பார்த்திபன் மகன் விக்ரமனுக்கும், மாமல்லர் மகள் குந்தவிக்கும் இடையே பிறக்கும் காதலாகும். அதையும் பக்குவமாக வளர்க்கிறார் மாமல்லர். இக்கதா பாத்திரத்தைத் தாங்கியவர் புகழ்பெற்ற நடிகர் டாக்டர் வி. ராமமூர்த்தி அவர்கள் ஆவார். பாத்திரத்திற்கேற்ற தோற்றம் பெற்றுள்ளார் இவர். மேலும் கன இயற்கையாக நடிக்கிறார் இவர். சம்பாஷணைகளில் சிவனடியாராக வரும்போதும் சரி மாமல்லராகத் தோன்றும்போதும் சரி ஒற்றர் படைத் தலைவன் வீரசேனன் என தன்னை அழைத்து நடிக்கையிலும் கன கச்சிதம் இவர் நடிப்பு, குந்தவியோடு சம்பாஷிக்கையிலே டாக்டரவர்களது திறன் நன்கு வெளிப்படுகின்றது. மாரப்பபூபதியை விசாரணை செய்யும் இடத்தில் கண்டிப்பு காய்தா பிரமாதம். குந்தவியைப் பற்றி பார்த்திபன் மனைவி சோழ மகாராணியிடம் எடுத்துக் கூறுகையிலே மனம் நெகிழ வைக்கிறார். இளவரசன் விக்கிரமனாக நடித்த வி. ஸி. தேசிகன் நடிப்பும் குறிப்பிடத் தக்க தாயமைந்தது. குந்தவியுடன் காதல் காட்சிகளிலும், இறுதியில் கபால பைரவனுடன் வாதம் புரியும் போதும் நன்றாக நடித்தார் அவர் குந்தவியாக நடித்த ஈஸ்வர் திருப்தியான முறையிலே நடித்தார். பெண்களுக்குரிய அங்க பாவங்கள் கச்சிதமாக அமைந்திருந்தன. குரல் விஷயத்திலும் பொருத்தமாயிருந்தது. ஒரு சில இடங்களில் மட்டும் கொஞ்சம் 'வேண்டுமென்று செய்வது போல் 'affectation' இருந்தது. அதைத் தவிர்க்கலாம். வள்ளியாக நடித்த நாகராஜன் சோடையில்லாமல் நடித்தார். பொன்னனாக நடித்த வரதனும் அப்படியே. மாரப்ப பூபதியை ஏசும் கட்டங்களில் இரண்டுபேரும் சக்கை போடு போட்டனர் மாரப்பபூபதியாக நடித்தவர் நன்றாக நடித்தார். போலி வீரப்பிரதாபம், சிரிப்பு மூட்டும் அசட்டுச் செயல்கள் இவைகள் தத்ரூபமாய் அமைந்தன. பார்த்திபனாக நடித்த ஸ்ரீ துவாரகநாத்தையும் குறிப்பிடவேண்டும். கச்சிதமாகப் பேசி நன்றாக நடித்தார். யுத்தத்திற்கு கிளம்பும் சமயம் அவர் மகாராணியுடன் பேசிய போது உருக்கமாக அமைந்தது நடிப்பு. மஹா கபால பைரவனாக நடித்தவரையும் சித்திரக்குள்ளனாக நடித்தவரையும் குறிப்பிடவேண்டும்.

காட்சி ஜோடனைகள் ஆடையலங்காரங்கள் விஷயத்தில் மிக்க அக்கரை காட்டியிருந்தார் டாக்டர் ராமமூர்த்தி. மஹாபலிபுரக் கடற்கரைக்காட்சி, கபால பைரவனின் வாசஸ்தலம் முதலியவைகளை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். சங்கீதம் நல்ல கர்னாடக சுத்தமான மெட்டுகளுடன் நன்கு அமைந்தது. இதற்குப் பொறுப்பாளிகளில் முக்கியமானவரான ஸ்ரீ எஸ். ஜி. காசி அய்யரையும் பாராட்ட வேண்டும்.

திருத்தம்

ஜூலை இதழ் 61-ம் பக்கத்தில் அரிய நூல் என்ற தலைப்பில் வந்துள்ள புத்தக விமரிசனத்தில் புத்தக விலை ரூ. 1 என்று தவருக பிரசுரமாயுள்ளது. புத்தகத்தின் விலை ரூ. 10 ஆகும்.

சிறந்த ரேடியோ நாடகம்

சமீபத்தில் குஹனவர்களின் 'மனவிளிம்பு' என்ற நாடகம். (ஏற்கனவே ஒலிபரப்பப்பட்டது) மீண்டும் சென்னை நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது, கதையின் திட்டம் பாராட்டும் வகையில் உள்ளதாகும். கோபால் என்ற நடனக் கலைஞன் ஒரு தனிமனிதன். கலைச் சிறப்பு அதன் மேம்பாட்டிலே ஈடுபட்டுள்ள அவன் சொற்ப ஊதியங்களுக்காக கலையை மலிவு படுத்த விரும்பாதவன். அவன் நண்பன் சேகர் அவனுக்கு ஆதரவாய் அமைகிறான். அவன் சகோதரி கோபாலை நேசிக்கிறாள். அவள் அன்பை கோபால் விரும்பி ஏற்று பழகுகிறான். ஒரு நடனமண்டலியில் கோபாலை அலுவல் ஏற்க ஏற்பாடு செய்கிறான் சேகர். அம்மண்டலியில் உள்ள மோகனாவின் அற்புத நடனம் கண்டு. மண்டலியில் சேர இசைகிறான் கோபால். மோகனா கோபால் கூட்டுறவால் மண்டலி சோபிக்கிறது. மோகனாவுடன் தான் ஆடுகையில் உள ஐக்யம் ஏற்படுவதை காண்கிறான் கோபால். கோஷ்டி சென்னை செல்ல இருக்கையிலே சேகரின் தங்கையிடம் விடை பெற்றுச்செல்ல வருகிறான் கோபால். அப்போது தான் அவனுடன் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு பணி செய்யும் விருப்பத்தை அவள் தெரிவிக்கிறாள். தான் மணத்தைப் பற்றி தற்போது மனம் கொள்ளவில்லை என்று சொல்விச் செல்கிறான்

பக்கத்திலுள்ள படங்களிலிருந்து இடங்களைச் சொல்லுவீர்களா?

விடை 72ம் பக்கம் பார்க்க

படங்கள் —டி ஆர் ஆர்

அவன். சென்னையில் பிரமாதமாக நடக்கிறது. மண்டலியின் நடனக் கச்சேரிகள். மோகன கோபால் என்ற நடன அயிட்டம் பிரமாதமாக அமைகிறது. இந்நிலையில் சேகரின் சகோதரி விபத்தில் அகப்பட்டுள்ள தகவல் கிடைத்து தவிக்கும் கோபால், மோகனாவும் சேர்ந்துகூற சேகரின் தங்கையைக் காண விரைகிறான். நிரந்தரமாய் கால் ஊனம் ஆகிவிடும் என்று அறிகிறான்: அவளை யார் மணப்பார்கள் என சேகர் வருந்த தான் அவளை ஏற்பதாகக் கூறி மணக்கிறான். அவளுடன் சென்னை வருகிறான். அவளும் நடனக் கச்சேரி காணச் செல்கிறாள், மோகனா அவளிடம்மாசற்ற அன்பு வைக்கிறாள். ஒரு தினம் பத்திரிகையில் வந்த பாராட்டுரைகளை கோபாலிடம் படிக்கிறாள் மோகனா. மோகனா கோபால் ஜோடி பற்றிய குறிப்புகளை படிக்கக் கேட்ட சேகரின் சகோதரி மனம் சுழல்கிறது. அவளது அந்தராத்மா தான் மோகனா கோபால் வாழ்விற்குக் குறுக்கே நிற்பதாகக் கூற தற்கொலை புரிய யத்தனிக்கையில் மோகனா தவிர்க்கிறாள். மேலும் தான் முதலில் விரும்பாத மண்டலி முதலாளியையே மணந்து தியாகம் புரிகிறாள் மோகனா.

கோபாலாக நடித்தவர் நன்றாகவே நடித்தார். கோபால் மூலம் குஹன் ஒரு அரிய பாத்திரத்தை சிருஷ்டித்துள்ளார். அப்பாத்திரத்தின் தன்மை குன்றாது அமைந்தது அவர் நடிப்பு. சேகராக வந்தவரும் சோடையில்லாமல் நடித்தார். சேகரின் தங்கையாக வந்தவரது சம்பாஷணைகள் குறிப்பிடத்தக்கதாயமைந்தன. மோகனா பாத்திரம் ஏற்றவர் விசேஷ பாராட்டுக்குரியவராகிறார். மற்றபடி மண்டலித் தலைவர் முதலானவர்களும் நன்கு நடித்தனர். இசை அமைப்பு பாராட்டும் முறையிலமைந்தது. நாடகத்தைப் பற்றி முகவுரையாகப் பேசினார் சுகி சுப்ரமண்யம் அவர்கள். பிரபல எழுத்தாளரான இவர் நாடகத்துறை அமைப்பாளராய் நல்லபணியாற்றி வருகிறார். அவர் நாடகத்தை அறிமுகம் செய்த பாணி சிறப்பாகயமைந்தது. குஹனவர்கள் தயாரிப்பு குறைவில்லாமலிருந்தது. சம்பாஷணை ஜீவன் மிக்கு விளங்கியது.

த. ரா. ரா




இடங்கள் புரிகின்றனவா ?

விடை 72-ஆம் பக்கம் பார்க்க

—படங்கள் டி ஆர் ஆர்

சினிமா விமர்சனம்

மீண்ட சொர்க்கம்

கல்யாணப் பரிசு மூலம் தன் ஆற்றலை வெளிப்படுத்தி பிரமாதப் புகழ்கொண்ட ஸ்ரீதர் அவர்கள் மீண்ட சொர்கம மூலம் மேலும் புகழ் பெற்று விட்டார். ஆம் கதை வசனம் டைரக்ஷன் ஆகிய மூன்று அம்சங்களையும் அவர் பொறுப்பேற்ற படம் மீண்ட சொர்கம். கலை நுணுக்க அம்சத்திலும் சரி, கதையின் போக்கிலும் சரி, காட்சி அமைப்புகளிலும் சரி சிறந்த டைரக்ஷன் திறமையிலும் சரி இப்படம் சிறந்து விளங்குகிறது. மதுரம் பிக்சர்ஸாரின் முதல் படமான இப்படம் அவர்களுக்கு சிறந்த வெற்றி தான்.

சேகர் என்ற யுவன் அகஸ்மாத்த்தாக நிர்மலா என்ற தொழிலாளி ஒருவரின் மகளின் நடனத்தையும் எழிலையும் காண நேரிடுகிறது. நிர்மலா தந்தை இறக்க அவளை ஆதரிக்கும் பொறுப்பை ஏற்கிறான். நட்டுவனார் குமரய்யாவிடம் அவளை கலைப்பணிக்கே அர்ப்பணிக்க ஒப்புக்கொண்டு ஒப்படைக்கிறான். அவள் கலையில் தேர்ச்சி பெறுகிறாள். ஆனால் அவள் மனம் பெண்களுக்கு இயற்கையில் இருக்கக் கூடிய பாசத்தைக் கொண்டு விளங்குகிறது. சேகரை உறுதுணையாக வாழ்க்கையில் கொள்ள விழைகிறாள். சேகருக்கு மனப்போராட்டம் குமரய்யா வற்புறுத்துகிறார். அவன் வேறு ஒருவளை மனம் செய்துகொண்டால் அதனால் மனம் வெதும்பும் நிர்மலா கலையிலே பூர்ண கவனம் கொள்வாள் என்கிறார். அவன் அதை ஏற்று செல்வந்தர் சச்சிதானந்தம் பிள்ளை குமாரி பிரதிபாவை மணக்கிறான்: சச்சிதானந்தம் பிள்ளை சேகரின் தந்தையின் கடனைத் தீர்க்க வாக்குறுதி அளிக்கிறார் நிர்மலாவோ, தான் விரும்பிய வாழ்வு பெற இயலாததால் வெகுண்டு நடனமாடுவதையே நிறுத்திவிடுகிறாள். பிரதீபா கணவனுக்கு அடங்கிய மனைவியாய் விளங்கவில்லை. நிர்மலாவிற்கு ஆறுதல் அளிக்க முயலும் சேகரை தவறாக எண்ணி இருவரையும் பிணைத்துத் தவறாகவும் பேசுகிறாள். சேகர் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. நிர்மலாவை ஏசுகிறாள் சேகர் கோபிக்கிறான். இடையே நோய்வாய்ப்பட்டு மெவிந்த சேகர் விரும்ப அவன் ஆறுதல் பெற ஆடுகிறாள் நிர்மலா. இதைக் கண்டு வெகுண்ட பிரதீபா கணவனைத் துறந்து பிறந்த வீடு வந்து தகப்பனாரிடம் கணவன் கொடுமையானவன் என்று பொய்பேசி சேகரின் வீடு ஏலம்விடப்பட வழிசெய்கிறாள். வீடு போகப்போவது பற்றி அறிந்த சேகரின் தந்தை மனமுடைந்து இறக்கிறார். சேகர், சச்சிதானந்தம் பிள்ளை வீடு வந்து ஆத்திரத்துடன் பேசி மனைவியையும் துறந்து வெளியேறுகிறான். நிர்மலா அவன் வீடு ஏலம் போகாதவாறு அவனுக்காக கச்சேரிகள் செய்து பணம் திரட்டி அளித்து அவனறியாவண்ணம் வீட்டைக் காக்கிறாள். வீடு திரும்பும் சேகர் இதை அறிகிறான். தான் இனி முடிவை நோக்கிப் போவதாக நிர்மலா எழுதிக் கொடுத்துப் போன கடிதம் பார்த்து நிர்மலாவைத் தேடி ஓடுகிறான். ஒரு காட்டாற்று அருகே அவன் வருவதற்கும் பெண் ஒருவள் பாலத்திலிருந்து அதில் குதிப்பதற்கும் சரியாயிருக்கிறது. நிர்மலா என்று கதறி அவளைக் காக்க அவனும் குதிக்கிறான். கடைசியில் காத்து கரையேறுகிறான். ஆனால் அவன் முடிவில் காண்பது உயிர் துறந்த பிரதீபாவின் உடல்தான். அவன் கதறு

கிறுன்: அவளிடுப்பில் செருகி யிருந்த கடிதம் மூலம் அவள் தான் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கோரியதாகவும் நிர்மலாவும் அவனும் இனி இனிது வாழ்வதே அவளது கடைசி விருப்பம் என்பதும் அறிகிறுன். இதனிடையே அங்கு வருகிறுன் நிர்மலா. அவளை விபரீத முடிவிலிருந்து விலக்க கூவி அழைக்கிறுன் சேகர். அவளிடம் பிரதீபாவின் இறுதி விருப்பத்தைத் தெரிவிக்கிறுன்.

கதையின் ஊடே செல்வந்தர் சச்சிதாநந்தம் பிள்ளையின் மகன் கோபு கணக்குப்பிள்ளையின் மகள் சச்சுவை காதலிப்பது, சச்சிதாநந்தம் பிள்ளை அறியாது கோபுவை பல வந்தமாக சச்சுவை மணக்க கணக்குப்பிள்ளை வைப்பதுபோன்ற ஹாஸ்யக் காட்சிகளும் உண்டு.

*

சேகராக வரும் ஜெமினி கணேசனின் நடிப்பு பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. காதல்காட்சிகளில் மட்டுமல்ல. சோக பாவத்திலும் சக்கைபோடு போட்டுள்ளார் ஜெமினி கணேசன் அவர்கள். நிர்மலா தனது மன விருப்பத்தை வெளியிட்டு வாதாடுகையிலே செய்வதறியாது மனம் சுழலும் காட்சிகளிலும், தகப்பனுரை இழக்கும் தருணத்திலும் அவர் நடிப்பு பிரமாதம். அதேபோல், வழிக்கு வராத மனைவியிடம் கண்டிக்கும் பாவத்திலும் சிறப்பாக உள்ளது நடிப்பு. இறுதிக்காட்சியிலே அவர் நடிப்பு மனதை உருக்க வல்லதாயுள்ளது, நிர்மலாவாக வரும் பத்மினி இப்படத்திலே தன்புகழை மேலும் உயர்த்திக்கொண்டுள்ளார். சேகரிடம் தான் அவனுடன் சேர்ந்து வாழ விரும்புவதை வெளியிடும் போது அவன் அவள் கலைக்கே அவளை அர்ப்பணித்துக் கொள்ளும்படி பதில் கூறுகிறுன். அந்நிலையில் தன் மனக் குமுறலை வெளிக்காட்டும் நடிப்புகள் இயற்கை. 'உங்களுக்கு ஒரு தங்கை இருந்தால் நீங்கள் அவளுக்கு

ஸ்ரீ கிருஷ்ண கான சபா தி. நகர், மதருஸ்-17.

நாட்டியாலயாவின் அரிய நடன விருந்து.

வைஜயந்திமாலா நாட்டியாலயா

மாணவிகளுடன் அளிக்கும்

ஸ்ரீ ஆண்டாள்

"திருப்பாவை"

நடன கவிதை நிகழ்ச்சி

1960 செப்டம்பர் 11ம்தேதி ஞாயிறன்று தி. நகர்

பனகல் பார்க் எதிரிலுள்ள 'கானவிஹாரில்'

மாலை 6-30 மணிக்கு நடைபெறும்.

மணம் செய்து பார்க்க விரும்ப மாட்டீர்களா?' என்று கேட்கையிலே உருக்கிவிடுகிறார் மனதை. அதேபோல் சேகர் தன்பால் கொண்டுள்ள அன்பையும் தான் அவள்பால் கொண்டுள்ள அன்பையும் தவருக எண்ணி அவதுருகப் பேசும் பிரதிபாவிடம் பேசும் கட்டத்திலும் நன்ருக நடித்துள்ளார் இதேபோல் பல சம்பவங்கள். கதா பாத்திரத்திற்கு பூர்ண ஜீவன் அளித்து நடித்துள்ளார் என்று மொத்தத்தில் குறிப்பிடலாம். இவரது நடனங்களும் நன்ருகவே அமைந்துள்ளன. குமரய்யாவாக நடித்துள்ள நடராஜன் நடிப்பும் சேகரின் தந்தையாக நடித்த பி. எஸ். வேங்கடாசலம் நடிப்பும் திருப்திகரமாயுள்ளன. சச்சிதாநந்தம் பிள்ளையாக வரும் கே. ஏ. தங்கவேலு புதியவிதபாத்திரத்திலே கன இயற்கையாக நடித்துள்ளார். ஹாஸ்ய பாகம் இல்லாமல் 'சீரியஸ்' பாகத்திலும் அவர் பிரமாதமாக நடிக்க முடியும் என்பதற்கு இப்படம் ஒரு எடுத்துக் காட்டு. பெண்ணுக்கு நீதிபோதிக்கையிலும் மாப்பிள்ளையிடம் பாசம் காட்டுவதிலும், இடையிடையே தன் ஹாஸ்யத்தை வெளிப்படுத்துவதிலுமாக திறம்பட நடித்துள்ளார். பிரதீபாவாக வரும் தாம்பரம் லலிதா போதுமான திருப்தியுடன் நடித்துள்ளார். கணக்குப் பிள்ளையாக சாயிராமும் நன்ருகவே நடித்துள்ளார். ஒளிப்பதிவு டைரக்டர் வின்செண்ட் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர் மொத்தத்தில் நல்ல மார்க்குகள் பெற்று விளங்கக் கூடிய படம்தான் இது. வீனஸ் பிக்சர்ஸாரின் பிரபலஸ்தர்கள் கூட்டுறவும், இப்பட வெற்றிக்குக் காரணம்.

த. ரா. ரா.

அட்டைப் படம்:

ஆடி மாதத்திற்கு பல விசேஷங்கள் உண்டு. அம்மாதத்திலே பல பண்டிகைகள். ஆடி மாதத்திலே தென்னுட்டின் ஆறுகளிலே பிரவாகம், வயல்கள் கழனிகளிலே பயிர்களுக்கு வளப்பம் ஊட்டும்.

ஆடிப்பூரம் விசேஷம். தென்னுட்டின் திருத்தலங்களிலே உற்சவங்கள் உண்டு. வைஷ்ணவ பக்தை ஸ்ரீ ஆண்டாளின் நக்ஷத்திரம் அன்ருகும். இறைவனுக்காக தகப்பனுர் கட்டிய மாலையை அணிந்து அதன் அழகைக் கண்ணுடி முன் பார்க்க தகப்பனுர் வெருண்டு இறைவனுக்கு மகள் சூடிய மாலையை கொண்டு செலுத்த மனமில்லாமல் இருக்க அவரது கனவிலே இறைவன் தோன்றி அம்மாலையேதான் விரும்பும் மாலையென தெரிவித்தார். அதன் மூலம் சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற திருநாமம் ஸ்ரீ ஆண்டாளுக்கு ஏற்பட்டது. சூடிக்கொண்டு அழகு பார்க்கும் காட்சியை பிரபல ஓவியர் மணியம் அவர்கள் சித்தரித்துள்ளார்.

68-ம் பக்கம் உள்ள படங்களில் மேலேயுள்ளது மயிலாப்பூர் லஸ். கீழே உள்ளது கும்பகோணம் மஹாமகக் குளத்தின் ஒரு காட்சி.

69-ம் பக்கம் உள்ள படங்களில் வலது புறம் உள்ளது மயிலாப்பூர் குளம் கபாலி கோயில் கோபுரத்தோற்றம். இடமிருப்பது திருவாரூர் தியாகேசர் கோயில் மேல கோபுரம், கமலாலயம் கீழ்கரை.

Mg. Editor & Publisher: M. D. Raman, Southern Avenue, Alwarpet Madras-18
Edited and Printed by S. S. Sarma at Sri Sudarsan Press,
111/33, (Congress Bldgs) Teynampet, Mount Road, Madras-6.
Associate Editor: T. R. Rajagopalan (Tha. Ra. Ra.)

வருகிறது.
உமா பிக்சர்ஸ்
சித்தூர் ராணி
பத்மினி
திரைக்கதை-வசனம்:
ஸ்ரீதர்
டைரக்ஷன்:
ஸி.எச்.நாராயணமூர்த்தி

நாளொரு
மேனியாக...
ரெக்ஸோனாவில் அடங்கியுள்ளது கேடில்; சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமாகிய கேடில், சருமத்திற்கு ஊட்டமளித்து, மழமழப்பாகவும், மென்மையுடனும் மிளிரச் செய்கிறது! ரெக்ஸோனாவின் எடுப்பான நறுமணம் இணைபிரியாமல் உங்கள்மீது கமழ்ந்து இளங்காலைப் புதுமலர்ச்சியுடன் நாள்முழுதும் உங்களை விளங்கச் செய்கிறது. உங்கள் அன்றாட அழகுசாதனமாக ரெக்ஸோனா உபயோகியுங்கள்!
Rexona
Rexona
BLENDED WITH CADYL
...ரெக்ஸோனா உங்கள் மேனியெழிலை ஓங்கச்செய்கிறது
ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனா ப்ரொ. லிமிடெட் சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.
RP.165-50 TM